ஆகஸ்ட் 07 - 13, 2005 August 07 - 13, 2005 28 பக்கங்கள் 16.00

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



# சங்கடத்தில் ராஜபக்ஷ









## நோர்வே அரசியலில் சொல்ஹெய்ம் முன்னணிக்கு...?

# கடல்வழிப்பாதை முடங்கினால் அரசுக்கு அவசியம் பலாலி!

பலாலியிலுள்ள விமானத் தளத்தின் ஒடுபாதை சில மாதங்களுக்கு மூடிவைக்கப்பட இருக்கிறது.

அதனால் ஒடுபாதைதேவைப்படாத M 126 ரக ஹெலிக்கொப்டர்கள் இரண்டைக் கொள்வனவு செய்வதற்கான கேள்விப் பத்திரங்களை விமானப்படை கோரியிருப்பதாக விமானப் படைத்தளபதி எயர் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

விமானப்படை விமானங்களும், தனியாருக்குச் சொந்தமான விமானசேவை நிறுவனங்களுக்குச் சொந்தமான விமானங்களும் இனிமேல் பலாலியில் தரையிறங்க முடியாதுபோகும். அநேகமாக ஐந்து மாதங்கள் வரை இந்த நிலைமை தொடர்ந்து நீடிக்கும் எனக்கூறப்படுகிறது.

ஒடுபாதையில் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படவிருப்பதே அது மூடப்படுவதற்கான காரணம் என்று கூறப்பட்டாலும் இது பலாலி விமானத் தளத்தை பலப்படுத்தும் முயற்சியே என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்தம் ஒன்று மூண்டு கடல் வழிப் பாதைகள் முடங்கிப்போகும் நிலைமை ஏற்பட்டால் அரசிடம் உள்ள ஒரே மார்க்கம் வான் வழியே. இதனால்தான் அரசு திட்டமிட்டு ஒடுபாதையைத் திருத்தும் வேலையை அவசரமாக மேற்கொள்வதாகத் தெரிகிறது. அத்துடன் புலிகளின் தாக்குதல் இலக்கில் இருந்து தப்பும் நோக்குடன் புதிதாக வேறு திசையில் ஒடுபாதையை அமைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

விமானத்தளம் மூடப்படுவதால் இந்தியாவிடமிருந்து M 126 ரக ஹெலிக்கொப்டர்களை கடன் அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்திய அரசாங்கத்தின் பதிலுக்காக அரசாங்கம் இப்போது காத்திருக்கிறது.

''பலாலி விமானத் தளத்தின் ஒடுபாதை மிகவும் மோசமான அளவுக்கு சீர்கேடு அடைந்துள்ளது. மேடுபள்ளங்கள் காரணமாக விமானங்கள் ஓடும்போது சீராக ஓட முடியாதுள்ளது. தற்போது பாதையைச் செப்பனிடுவதற்கான ஆயத்த வேலைகள் இடம்பெறுகின்றன. திருத்த வேலைகள் ஆரம்பமானதும் இருபத்துநான்கு மணிநேரமும் தொடர்ந்து வேலைகள் நடைபெறும்'' என்று அரசு கூறுகிறது.

இந்தத் திருத்த வேலையை மேற்பார்வை செய்யும் பொறுப்பு எயர்வைஸ் மார்ஷல் லக்சல் சல்காதுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நெடுஞ்சாலைகள் அமைச்சு இந்தத் திருத்த வேலைகளுக்குப் பொறுப்பாக இருக்கும். அதேவேளை (CENTRAL ENGINEERING CONSULTANCY BUREAU) இதற்கான ஆலோசனையை வழங்கும் நிறுவனமாகச் செயற்படுகின்றது.

முப்படைகளுக்கும் தேவையான உணவுப் பொருட்கள் திருத்தவேலைகள் முடியும்வரை கடல்மூலம் எடுத்துவரப்படும்.

விமானப்படைக் கமாண்டர் மார்ஷல் டொனால்ட் பெரேரா அளித்த பேட்டியொன்றின்போது கூறிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**விமானப்படையின் கொள்முதல் பற்றி:-**

விமானப்படைக்குத் தேவையானவற்றை வாங்குவதில் ஒளிப்பு, மறைப்பு இருப்பதை நாங்கள் அனுமதிப்பதில்லை. கணக்காளர் நாயகம் திணைக்களத்தைச் சேர்ந்த பிரதிநிதியொருவர் விமானப் படையில் பணியாற்றி வருகிறார். அவருக்கு தொலைபேசி, கணினி வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன. அவருக்குத் தேவையான உதவிகளை வழங்குமாறு விமானப்படை உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

**யுத்தநிறுத்தமும் விமானப்படையின் பங்கும்:-**

புலிகளின் போராட்டம் முன்னர் இருந்ததைவிட எமது திறமையை பத்து மடங்கு அதிகரிக்க வேண்டிய நிலைக்கு எம்மைத்தள்ளி உள்ளது. மாறிவரும் தொழில்நுட்பத்துக்கு ஏற்றவாறு நாமும் எம்மைத்தயார் படுத்திக் கொள்ள வேண்டும். எமது படையினருக்கு மேலதிக பயிற்சியை வழங்கவும், உயர்ந்த நிலையிலான தயார் நிலையில் எம்மை வைத்திருக்கவும் யுத்த நிறுத்தம் எமக்கு உதவியுள்ளது. சார்க் நாடுகளான இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் நாடுகள் எமக்கு பயிற்சியளித்து வருகின்றன.



**விடுதலைப்புலிகளின் விமான பலம்:-**

இது ஒரு இரகசியம் அல்ல 1,000 மீட்டர் நீளமுள்ள விமான ஒடுபாதை அவர்களிடம் உள்ளது. ஒன்று அல்லது இரண்டு விமானங்கள் அவர்களிடம் உண்டு. இது அவர்களிடம் பலமான வான்படை என்பதற்கு ஆதாரமாகவுள்ளது. அவர்களின் திட்டம் என்ன என்பது பற்றி நாம் கண்காணித்துக்கொண்டிருக்கிறோம். சுனாமி நிவாரண நடவடிக்கைகளின்போது எமக்கு உதவிய சில நட்பு நாடுகள் விடுதலைப்புலிகளிடம் விமானங்கள் இருப்பதற்கான ஆதாரங்களைச் சேகரித்துள்ளன. நாங்கள் எதிர்நடவடிக்கைகள் பற்றி ஆலோசித்து வருகிறோம். விவரங்களை வெளியிடமுடியாது.

**மீண்டும் ஒரு யுத்தம் வெடிப்பது பற்றி:-**

நாம் அதற்குத் தயார் நிலையில் இருக்க வேண்டும். ஆனால் யுத்தம் ஒன்று வெடிக்கும் என நாம் நம்பவில்லை. எம்மால் அதைத் தாங்கிக்கொள்ளவும் முடியாது. அரசாங்கத்தின் சமாதான முயற்சிக்கும் நாம் ஒத்துழைப்பு வழங்குகின்றோம். வன்னிக்கு புனர்வாழ்வு புனர்நிர்மாண சேவைகளில் பணியாற்றுவதற்கு நிராயுத பாணிகளான எமது துருப்பினரை அனுப்பவும் நாம் ஆயத்தமாக இருந்தோம். ஆனால் விடுதலைப்புலிகள் அதற்கு உடன்படவில்லை.

**எதிர்காலத்திட்டங்கள் பற்றி:-**

வான்படைத்தலைமையகத்தை 13 மாடிக் கட்டடம் ஒன்றுக்கு இடம்மாற்ற இருக்கிறோம். முன்னைய காரியாலயத்தை ஒரு நூதனசாலையாக நிர்மாணிக்க இருக்கிறோம். நல்லதொரு வான்படை கமாண்டரின் கீழும் வான்படை எப்படி இருந்தது என்பதை இந்த நூதனசாலை எடுத்துக் காட்டுவதாக அமையும். புதிய தலைமையக திறப்பு விழாவுக்கு ஓய்வுபெற்ற அனைத்து வான்படை கமாண்டர்களும் அழைக்கப்படுவர். அவர்கள் ஹெலிக்கொப்டரில் அழைத்துவரப்பட்டு கட்டடத்தின் 13ஆவது மாடியில் தரையிறக்கப்படுவர்.

# ஜெயலலிதாவின் திடீர் புதுடில்லி விஜயம் காவிரி நீருக்காக மட்டும்தானா?

தமிழக முதல்வர் ஜெயலலிதா கடந்த வாரம் பலத்த ஆரவாரத்துடன் டில்லி புறப்பட்டுச் சென்று, பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்தது பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

காவிரிப்பிரச்சினையில் கர்நாடகம், தமிழகத்துக்குத் தரவேண்டிய தண்ணீரைத் தரும்படி உத்தரவிடக்கோரியே இந்தப் பயணமும், பிரதமருடனான சந்திப்பும் என்று அ.தி.மு.க தரப்பு கூறியுள்ளது.

இதன் தொடர்ச்சியாக அ.தி.மு.கவினர் தமிழகமெங்கும் உள்ள மத்திய அரசு அலுவலகங்களின் முன்னால் அடையாள உண்ணாவிரதமும் நடத்தியுள்ளனர். கர்நாடகத்தை ஆள்வது காங்கிரஸ் கட்சி என்பதால் மத்தியிலுள்ள காங்கிரஸ் அரசு தனது கர்நாடக முதல்வரிடம் நியாயத்தை எடுத்துச் சொல்லவேண்டுமென்பதே அ.தி.மு.கவினரின் வாதம்.

இது ஒரு வகையில் சரியானதுதான். ஆனால், தமிழகத்துக்கு தண்ணீரைத் திறந்து விட்டால் மட்டும் காங்கிரஸ் கட்சியினால் தமிழகத்தில் ஆட்சிக்கு வந்துவிட முடியுமா? 1967ஆம் ஆண்டு தமிழகத்தில் ஆட்சியை இழந்த காங்கிரஸ் இப்போது 3ஆவது 4ஆவது இடத்திலுள்ளது. கர்நாடகாவை வற்புறுத்தி காவிரிநீரை விடுவிக்கச் செய்தால் காங்கிரஸுக்கு ஆட்சியை தந்துவிடமாட்டார்கள் தமிழக மக்கள். மறுபுறம் கர்நாடக காங்கிரஸ், செல்வாக்குள்ள காங்கிரஸ் ஆட்சியிலுள்ள மாநிலம். தமிழகத்துக்கு இரங்கி தண்ணீரைத் திறந்து விட்டால் கர்நாடக மக்களின் வெறுப்புக்கு ஆளாக நேரிடும். காங்கிரஸ் கட்சியின் சுயநல அரசியல் இப்படிஇருக்கிறது. தவிரவும் இப்போது கர்நாடகாவில் தனித்து காங்கிரஸ் ஆட்சியல்ல நடப்பது. முன்னாள் பிரதமர் தேவகௌடாவின் கட்சியுடன் சேர்ந்து கூட்டாட்சி தான் அங்கு நடக்கிறது.

கர்நாடக காங்கிரஸ் இணங்கினாலும், தேவகவுடாவின் கட்சி காவிரி நீரைத்தர இணங்காது. மேலும் கர்நாடகாவின் பிரதான எதிர்க்கட்சியான பி.ஜே.பி; எங்கே காவிரி நீரை காங்கிரஸ் அரசு திறந்துவிடும் அப்போது போராட்டம் நடத்தி மாநில ஆட்சியைப் பிடிக்கலாமெனக் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கிறது. ஏனெனில், தேவகவுடா கட்சிக்கோ பி.ஜே.பிக்கோ, காங்கிரஸுக்கோ தமிழகத்தில் ஆளும் கட்சியாக வர சந்தர்ப்பமே இல்லை. ஆனால், கர்நாடகாவில் ஆளும் கட்சியாக வர மூன்று கட்சிகளுக்குமே சந்தர்ப்பமுண்டு.

இந்த மூன்று தேசியக்கட்சிகள் தான் சுயநல அரசியல் நடத்துகின்றன என்றால் தமிழகத்தின் திராவிடக் கட்சிகளும் அந்தச் சுயநலத்துக்கு தாம் சற்றும் சளைத்தவை அல்ல என்பதைக் காண்பித்தே வருகின்றன. 1998முதல் 1999வரை வாஜ்பாய் தலைமையிலான பி.ஜே.பி. ஆட்சியில் ஜெயலலிதாவின் ஆதரவு இன்றியமையாததாக இருந்தது. தமிழகத்தில் அப்போது ஆட்சியிலிருந்த தி.மு.க அரசை கலைப்பதற்கு தனது கட்சியின் 18 எம்.பிக்களின் பலத்தை பிரயோகித்துப் பார்த்தார். ஆனால், தி.மு.க ஆட்சியை கலைக்க வாஜ்பாய் இணங்கவில்லை. இதனால் கோபமுற்ற ஜெயலலிதா வாஜ்பாய் ஆட்சியையே கவிழ்த்தார். அப்போது காவிரிப்பிரச்சினை பற்றி வாஜ்பாயை அவர் வற்புறுத்தவுமில்லை. மிரட்டவுமில்லை.

இதே கதைதான் தி.மு.க வினதும். 1999 முதல் 2004 வரை வாஜ்பாய் அரசிலும் 2004 முதல் காங்கிரஸ் அரசிலும் முக்கிய பங்காளிக்கட்சியாக இருந்தும் காவிரி நீரை பெற்றுத்தரும்படி எந்தத் தொந்தரவும் அவர்களுக்குக் கொடுக்கவில்லை. பெயருக்கு 'காவிரி நீரைத் தாருங்கள்' என்று அறிக்கை விடுவதோடு சரி.

சென்ற ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் கூட்டணி வென்று ஆட்சியமைத்தபோது, தான் கேட்ட அமைச்சுகளைத் தராததால் தி.மு.க தலைவர் கோபமுற்று மந்திரிசபையில் சேரமறுத்ததும் குறிப்பிடத்தக்கது. அப்போதெல்லாம் நீர்வளத்துறை அமைச்சைக் கேட்டு வற்புறுத்திப் பெற்றிருக்கலாம். இப்போது மத்திய அரசில் பங்காளியாய் தி.மு.க இருப்பதை வைத்தே ஜெயலலிதா இவ்வளவு கூச்சல் போடுகிறார்; நீர்வள அமைச்சும், தி.மு.க வுக்கு கிடைத்தால் ஒட்டுமொத்தப் பழியையும் தி.மு.க மீதே போட்டுவிடுவார் என்று அஞ்சியதே காரணம். ஆக தமிழக மக்களுக்கு காவிரி நீர் பெற்றுத்தருவதல்ல முக்கியம்; சேது சமுத்திரம் கட்டுவதுதான் தி.மு.க. வுக்கு முக்கியம்.

நிலைமைகள் இவ்வாறிருக்க அடுத்த ஆண்டு சட்டசபைத் தேர்தலை முன்னிட்டு ஜெயலலிதா அமைத்துவரும் பன்முக வியூகத்தின் ஒரு பகுதிதான் இப்போது காவிரிப்பிரச்சினை பற்றி புதிதாக ஆரம்பித்திருக்கும் கூச்சல். தி.மு.க-காங்கிரஸ் கூட்டணி மத்தியிலும், கர்நாடாகாவிலும் ஆட்சியிலிருப்பதைக்காட்டி காவிரிநீர்ப்பிரச்சினைப் பழிமுழுவதையும் அக்கூட்டணியில் சுமத்தி வாக்கு வேட்டையாடுவதுதான் இதன் நோக்கம். ஏற்கனவே ஜெயலலிதா பணத்தைவாரி இறைத்து நடத்தும் நிலவாழ்வுத்திட்டங்களைக் கண்டு முழிபிதுங்கிப் போயிருக்கும் தி.மு.க வின் கழுத்தை காவிரிப்பிரச்சினையும் நெருக்கப்போகிறது.

இதற்கிடையில் தமிழக பா.ஜ.க தலைவர் ஒருவர் தமிழகத்தில் விரைவில் அணிமாற்றம் வரும் என்று கூறியுள்ளார். 'ஜெ'யின் டெல்லி விஜயம் இதற்கு வழிவகுக்கும் எனவும் கூறியுள்ளார். அ.தி.மு.க அணிக்கு பா.ம.க. தாவலாம்; அவ்வாறு நடக்காவிட்டாலும் பா.ம.க - பி.ஜே.பி. -விடுதலைச் சிறுத்தைகள் என்று ஒரு அணி வரக்கூடுமென்ற நப்பாசையும் தமிழக பி.ஜே.பி தலைவர்களிடம் உண்டு. இந்த அணியில் வைகோவையும் இணைத்தால் பலமான மூன்றாது அணி உருவாகலாம். பி.ஜே.பி. தலைவர் கூறியது எந்தளவுக்கு உண்மை என்பது இப்போது தெரியாவிட்டாலும் அவ்வாறு ஒரு மூன்றாவது அணிவந்தால் ஜெயலலிதாவுக்கு அது வெற்றியே.

எஸ்.சுரேந்திரஜித்



(சரியான உச்சரிப்புப்படி அவரது பெயரைத் தமிழில்எழுதுவதானால் 'சூல்ஹெய்ம்' என்றுதான் எழுதவேண்டும். ஆனால் தமிழ்ப் பத்திரிகை உலகில் 'சொல்ஹெய்ம்'என்றுபொதுப் பயன்பாடு வந்து விட்டதால் அதையே பயன்படுத்துவோமே!)

எரிக் சொல்ஹெய்ம் தலைமை வகித்த கட்சியின்கூட்டமைப்பு அரசு தேர்தலில் தோல்வியுற்றதை அடுத்து தமது கட்சித் தலைமையை அவர் விட்டுக்கொடுத்துத் தமக்கு அடுத்து கட்சியில் முக்கிய பொறுப்பு வகித்தபெண்மணியான கிறிஸ்டின் ஹல்வோர்ஸவிடம் அதனை ஒப்படைத்தார்.

கட்சிப் பணியில் சொல்ஹெய்ம் சற்று விலகினாலும் முன்னைய அரசின் வெளிவிவகார அமைச்சில் அவர் ஆற்றிய பணியைத் தொடர்ந்து செய்யும்படி புதிய நோர்வே அரசு அவரைக் கேட்டுக் கொண்டது. அதனால் அந்தப் பணியை அவர் தொடர்ந்தார். இலங்கை இனப்

டம் ஒப்படைத்துவிட்டு வெளிவிவகார அமைச்சில் கடமையாற்ற அவர் சென்று விட்டாலும், கட்சி அழைக்கும்போது மீண்டும் அப்பணிக்கு வருவேன் என்று அவர் கூறியிருந்தார்.

கட்சியின் தலைமையை ஏற்று பல குழப்பங்களைச் சந்தித்து நிற்கும் ஹல்வோர்ஸல் அம்மையார் கட்சிக்குள் தமக்கு நம்பிக்கைக்குரியவராகப் பணியாற்றுவதற்கு வேறு ஆட்கள் இல்லாததால் எரிக் சொல்ஹெய்மை மீண்டும் அழைத்திருக்கிறார். தமது கட்சியின் பிரசாரப் பணிக்கான விசேட ஆலோசகராக சொல்ஹெய்மை நியமித்திருக்கிறார்.

வெளிவிவகார அமைச்சில், வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான விடயங்களில் சொல்ஹெய்முக்கு உள்ள அறிவு, அதனால் கிடைத்துள்ள நற்பெயர், இலங்கை விவகாரம் உட்பட சர்வதேச விடயங்களிலும் சமாதான முயற்சிகளிலும் பங்காற்றி அதன் மூலம் நோர்வேயில் அவர் சம்பாதித்துள்ள செல்வாக்கு ஆகியவற்றை நன்கு பயன்படுத்த முடிவெடுத்த கட்சித் தலைவி அதற்கான அழைப்பை விடுத்ததும் அதை ஏற்றுக்கொண்டார் சொல்ஹெய்ம்.

2000ஆம் ஆண்டில் கட்சிப் பணியிலிருந்து ஓய்வுபெற்று, இலங்கை சமாதான முயற்சிகளைக் கையாளும் பணியை நோர்வே வெளிவிவகார அமைச்சில் ஏற்றுக்கொண்ட சொல்ஹெய்ம் இப்போது - மீண்டும் தேர்தலை ஒட்டி - கட்சிப் பணிக்கு வந்திருக்கிறார்.

இதற்காக இலங்கை சமாதான முயற்சிகளில் தாம் ஆற்றும் பணியிலிருந்து - ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் பொதுத்

அத்தோடு, சிவப்பு - பச்சை கட்சிகளின் கூட்டமைப்பில் வெளிவிவகார விடயங்களைக் கையாள்வதில் அனுபவமும் திறமையும் உடைய வேறு எவரும் எரிக் சொல்ஹெய்முக்குப் போட்டியாக இல்லவே இல்லை என்பதால் தேர்தல் முடிந்து புது அரசு அமையும் போது வெளிவிவகார அமைச்சுப் பதவி தானாகவே கனிந்து சொல்ஹெய்மின் மடியில் விழும் என்கின்றனர் அவதானிகள்.

என்றாலும் இந்த சிவப்பு - பச்சைக் கூட்டமைப்புக் கட்சிகள் இடையே வெளிவிவகாரக் கொள்கை தொடர்பாக பெரும் கருத்து வேறுபாடு நிலவுதும் இங்கு கவனிக்கத்தக்க விடயமாகும்.

நேட்டோ மற்றும் ஐரோப்பிய யூனியனில் நோர்வே அங்கத்துவம் பெறுவது போன்ற விடயங்களில் ஒன்றுக்கொன்று முரணான - எதிரும் புதிருமான - கொள்கைகளைக் கொண்டு நிற்கின்றன இக்கட்சிகள்.

வெளிவிவகாரக் கொள்கையில் இயன்றவரை ஒன்றுபட்டு நிற்கும் ஒரு போக்கை இக்கட்சிகள் இடையே ஏற்படுத்துவதில் தமது 'சமாதானப் பணியை' எரிக் சொல்ஹெய்ம் ஏற்கனவே ஆரம்பித்துவிட்டார்.

தமது கூட்டமைப்புக் கட்சிகளின் தலைவர்களை கடந்த வருடம் ஒஸ்லோவுக்கு அருகில் மேஜர்ஸ்ட்ரு என்ற இடத்தில் ஒன்றுகூட்டி, வெளிவிவகார விடயத்தில் பொது இணக்கப்பாட்டுடன் செயலாற்றும் முயற்சிக்கு இணங்க வைத்திருக்கிறார் எரிக் சொல்ஹெய்ம்.

கொள்கை முரண்பட்ட விடயங்களை தள்ளிப்போட்டுவிட்டு, சர்வதேச சமாதான

# நோர்வேயின் வெளிவிவகார அமைச்சராகிறார் எரிக் சொல்ஹெய்ம்!

இனப்பிரச்சினையால் சூடாகியிருக்கும் இலங்கைத் தீவில் மீண்டும் ஒரு தேர்தல் நடக்கலாம் என்ற கருத்து மேலும் சூடாக்கியிருக்கிறது. அடுத்து உடன் நடக்கப் போவது ஜனாதிபதித் தேர்தலா அல்லது பொதுத் தேர்தலா என்பதுதான் இங்கு சர்ச்சை.

ஆனால், இங்கு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எடுக்கப்படும் முயற்சிகளுக்கு அனுசரணைப் பணிவகிக்கும் நோர்வேயிலும் கூட இதே தேர்தல் சூடுதான். செப்டெம்பர் 12ஆம் திகதி அங்கு நடக்கவிருக்கும் தேர்தலில் ஆட்சி மாற்றம் நிச்சயம் என்கின்றனர் அவதானிகள்.

இந்தத் தேர்தல் சூட்டுக்கும் பிரசாரத்துக்கும் மத்தியில்தான் நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் இவ்வாரம் (4ஆம் திகதி) நான்கு நாள் விஜயமாக இலங்கைக்கு வருகிறார்.

நோர்வேத் தேர்தலில் ஆட்சி மாற்றம் நிகழ்ந்தாலும் - இலங்கை இனப்பிரச்சினையில் அனுசரணைப் பணி வகிக்கும் பொறுப்பைக் கையாளும் அமைச்சர், பிரதி அமைச்சர் மட்டத்தில் அதனால் மாற்றங்கள் நேர்ந்தாலும் - அனுசரணைப் பணி தங்குதடையின்றித் தொடரும் என்பதைத் தெரிவிப்பதும், அதை உறுதிப்படுத்துவதற்கான ஏற்பாடுகளை - நடவடிக்கைகளை - இங்கு முற்கூட்டியே செய்து வைப்பதுமே, பிரதி அமைச்சர் விடார் ஹெல்கிஸனின் இலங்கைக்கான தற்போதைய விஜயத்தின் முக்கிய நோக்கம் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

நோர்வேயில் இப்போது ஆட்சியில் இருப்பது வலதுசாரிப் போக்குடைய - கன்சேர்வேட்டிவ் சார்புக் கட்சிகளின் கூட்டமைப்பு ஆகும்.

இந்த அரசின் வெளிவிவகார அமைச்சர் தான் பீற்றர்ஸனும், பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனுமே இலங்கை அனுசரணைப் பணி விடயத்தை கையாள்வதற்குப் பொறுப்பாக இருந்து வருகின்றனர். அவர்களுக்கு அடுத்த நிலையில் எரிக் சொல்ஹெய்ம் உள்ளார்.

ஆனால், 90களின் கடைசிப்பகுதியில் அந்தப் பணியில் நோர்வே ஈடுபடத் தொடங்கிய சமயம் ஆட்சியில் இருந்தது தொழில் மற்றும் லிபரல் கட்சிகளின் கூட்டு. இப்போது இலங்கை இனப்பிரச்சினை விடயத்தில் பங்காற்றும் நோர்வே அனுசரணைக் குழுவின் விசேட பிரதிநிதி எரிக் சொல்ஹெய்ம் அந்த அரசின் முக்கிய பிரதிநிதி. அவரது இடதுசாரி சோசலிஸ்ட் கட்சிக்கு அந்த அரசில் பிரதான பங்கு இருந்தது. பிரதி அமைச்சர் அந்தஸ்தில் -- ஆளக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சி ஒன்றின் தலைவராகவும், எம்.பியாகவும் அப்போது பணியாற்றியவர் எரிக் சொல்ஹெய்ம்.

பிரச்சினையிலும் அவரது அனுசரணைப் பணி நீடித்தது.

இந்நிலையில்தான் அவரது பங்களிப்புக் குறித்து இலங்கை ஜனாதிபதி சந்திரிகா சீற்றம் கொண்டு நோர்வே அரசிடம் முறையிட்டார். சொல்ஹெய்ம் புலிகளுக்கு சார்பாகச் செயற்படுகின்றார் என்ற சாரப்பட ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்த புகாரை அடுத்து, இலங்கை இனப்பிரச்சினைக்கு அனுசரணைப் பணிவகிக்கும் நோர்வேயின் பங்களிப்புப் பொறுப்பு பிரதி வெளிவிவகார அமைச்சர் மட்டத்துக்கு உயர்த்தப்பட்டது. எரிக் சொல்ஹெய்முக்கு மேலதிகமாக இந்தப் பொறுப்பை ஆற்றும் பணி பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனிடம் ஒப்படைக்கப்பட்டது. - இது தான் விடார் இந்த பணிக்குள் வந்த பின்னணி.

இப்போது நோர்வேயில் தேர்தல் காலம். இத்தேர்தல் முடிவு அங்கு அரசிலும், அரசியலிலும் தலைகீழ் மாற்றங்களை உருவாக்கப் போகின்றது என்று கணிப்பிடப்படுகின்றது.

அந்தமாற்றங்களுக்கு மத்தியில் நோர்வேயின் அடுத்த வெளிவிவகார அமைச்சராக எரிக் சொல்ஹெய்ம் வருவார் என்ற எதிர்பார்ப்பு பல மட்டங்களிலும் ஓங்கியிருக்கின்றது.

எரிக் சொல்ஹெய்மின் சோசலிஸ்ட் இடதுசாரிக் கட்சி அப்படி ஒன்றும் தனித்துவமான - செல்வாக்கு மிக்க - கட்சி அல்ல என்றாலும், அடுத்த அரசைத் தீர்மானிக்கப் போகின்ற முக்கிய கட்சியாக அது விளங்கப்போகின்றது எனக் கூறப்படுகின்றது.

1955 ஜனவரி 18ஆம் திகதி பிறந்த எரிக் சொல்ஹெய்ம் 1977 முதல் 80 வரை தமது கட்சியின் இளைஞர் அணிக்குப் பொறுப்பாகச் செயற்பட்டவர். பின்னர் கட்சியில் பல நிலைகளில் - பதவிகளில் - செயலாற்றிய அவர் 1985 முதல் 1987 வரை கட்சியின் பொதுச் செயலாளரானார்.

பின்னர் 1987 முதல் 1997 வரை பத்து வருடங்கள் கட்சியின் தலைவராக இருந்தார். நோர்வே அரசியலில் இடதுசாரிகள் மிக நெருக்கடிகளையும், செல்வாக்குச் சரிவுகளையும், குழப்பங்களையும் சந்தித்த சமயம் கட்சியை வழிநடத்தியவர் அவர்.

இப்போது கட்சித் தலைமைப் பதவியை கிறிஸ்டின் ஹல்வோர்ஸல் அம்மையாரி

தேர்தல் நடைபெறும் செப்டெம்பர் 12 வரை - அவர் விசேட விடுப்பு பெற்றிருக்கின்றார்.

அவரது சோசலிஸ்ட் இடதுசாரிக் கட்சி (சிவப்பு நிறம்), தொழிற்கட்சியோடும், சூழல் பாதுகாப்பில் அதிகம் ஆர்வம்காட்டும் பசுமைப் போக்குடைய 'சென்ட்ரல்' கட்சியோடும் (பச்சைக் கட்சியோடும்) கூட்டுச் சேர்ந்து களத்தில் இறங்கியுள்ளது.

இந்தச் சிவப்பு - பச்சை கட்சிகளின் கூட்டு, தற்போது ஆட்சியிலிருக்கும் வலதுசாரி கன்ஸர்வேட்டிவ் மற்றும் கிறிஸ்தவக் கட்சிகளின் கூட்டமைப்பைத் தோற்கடித்து வெற்றிவாகை சூடும் என ஆய்வாளர்கள் - அவதானிகள் - கணிப்பு வெளியிட்டுள்ளனர்.

நோர்வேயின் 19மாவட்டங்களில் இருந்தும் 150 தொகுதிகளுக்கு தேர்தல்மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றார்கள். தவிரவும் மாவட்டங்களிலிருந்து மொத்தம் 19 உறுப்பினர்கள் நியமனம் பெறுகின்றனர். இந்த 169 பேரும் சேர்ந்து நாடாளுமன்றத்தை அமைக்கின்றனர்.

எரிக் சொல்ஹெய்ம் இம்முறை நேரடியாகத் தேர்தலில் நிற்காவிட்டாலும் தமது வெளிவிவகாரத் தொடர்புகள் மூலம் ஒஸ்லோவில் அவர் பெற்றுள்ள செல்வாக்குக் காரணமாக அவர் நாடாளுமன்ற உறுப்பினராக நியமனமாவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அவரது கட்சி சார்ந்துள்ள சிவப்பு - பச்சை கூட்டமைப்பு ஆட்சியைக் கைப்பற்றினாலும் அக்கூட்டில் பலம்வாய்ந்த கட்சியான தொழிற்கட்சியின் தலைவரே நாட்டின் பிரதமராவார். அடுத்தநிலையில் முக்கிய பொறுப்பு - அதாவது குடும்ப நல அமைச்சர் பதவி - சொல்ஹெய்மின் கட்சியின் தலைவிக்குப் போகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அதையடுத்து அக்கட்சியில் 'கரிஸ்மா'வும், செல்வாக்கும், பெயரும் உள்ளவர் எரிக் சொல்ஹெய்ம் என்பதால் அவரும் அமைச்சராவது உறுதி என்கின்றனர்.

செயற்பாடுகளில் நோர்வே அதிகம் பங்கு - பணி ஆற்றுவது போன்ற பொது இணக்கக் கொள்கைகளை ஒன்றிணைந்து - முழுமூச்சில் - முன்னெடுக்க கூட்டமைப்புக் கட்சிகளை சம்மதிக்கச் செய்திருக்கிறார் அவர்.

வெளிவிவகாரம் தொடர்பான விடயங்களில் சொல்ஹெய்ம் வெளிப்படுத்தி வரும் அறிவுபூர்வமான செயற்பாடு அவரது கட்சி சார்ந்த கூட்டமைப்பு அடுத்த தேர்தலில் ஆட்சிப்பீடம் ஏறும்போது அவருக்கு நிச்சயம் வெளிவிவகார அமைச்சுப் பதவியை ஈட்டிக்கொடுக்கும் என்கின்றன விடயமறிந்த வட்டாரங்கள்.

## இன்னும் 5 வாரங்களில் பொதுத்தேர்தல்

அப்படி ஓர் ஆட்சி மாற்றம் நிகழ்ந்து தற்போதைய பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனின் கூட்டமைப்பு அரசு பதவியிழந்தால் விடார் ஹெல்கிஸனின் நிலை என்ன என்று ஒரு கேள்வியும் எழுகிறது.

முன்னர் சொல்ஹெய்ம் அங்கம் வகித்த அரசு கவிழ்ந்த பின்னரும் நோர்வே வெளிவிவகார அமைச்சு, இலங்கை அமைதி முயற்சிகளைக் கையாளும் அனுசரணைப் பணி

-நவின்-

யில் தொடர்ந்து இப்போதுவரை எரிக் சொல்ஹெய்மை வைத்திருக்கின்றமை போன்று -

விடார் ஹெல்கிஸனும் தமது பிரதி அமைச்சர் பதவியை இழந்த பின்னரும் வெளிவிவகார அமைச்சின் கீழ் மேற்படி அனுசரணைப் பணியில் தொடர்ந்து ஈடுபடுத்தப்படுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆனாலும் ஒரு சிறிய மாற்றத்தோடு தான் அது நடக்கும்.

இப்போது பிரதி வெளிவிவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸனின் கீழ் சாதாரணமானவராக எரிக் சொல்ஹெய்ம் பணியாற்றுகின்றார். பொதுத்தேர்தலை அடுத்து ஆட்சி மாற்றம் நிகழ்ந்தால் அதன்பின் நோர்வே வெளிவிவகார அமைச்சராகும் எரிக் சொல்ஹெய்மின் கீழ், அப்போது பிரதி அமைச்சர் பதவியை இழந்த நிலையில் சாதாரண விடார் ஹெல்கிஸன் பணியாற்ற வேண்டியிருக்கும். அவ்வளவே.

# தொடரும் தவிப்பு

இதை ஏன் கூறுகிறேன் என்றால், யார் என்ற விவரம் தெரியாமல் என்ன குற்ற மிழைத்தார் என்றும் அறியாமல் யாரை யாவது அப்பாவிகளைத் துன்புறுத்தி குற்ற வாளிகளாக்கி பெயரெடுக்கும் மனப் பான்மையோடு இருந்தனர் என்பதைக் காட்டவே குறிப்பிட்டேன்.

மல்லிகையின் கீழ் தளத்தில் எஸ்.பி. அலுவலகம் இருந்தது. அவர் திடீரென இரவு 2 அல்லது 3 மணிக்குத்தான் அழைப் பார். எதையாவது கேட்பார் - நாம் பேசிக்

**“நீதான் வெடிகுண்டு செய்தவனா”**

கொண்டே இருக்க வேண்டும். தூங்கினால் அடிப்பார். இது போல உடல்ரீதியான மனரீதியான பல இன்னல்களைக் கொடுத் தனர்.

ஒரு மனிதனை எந்தளவிற்குக் கேவல மான முறையில் நடத்த முடியுமோ, பேச முடியுமோ அவ்வாறு நடத்தினர்; பேசினர். என்னை விசாரணைக்கென்று சட்டபுறம் பாக அழைத்து சென்று நீதிமன்றம் முன்பு ஆஜர்படுத்திய 19 ஆம் திகதி வரை குளிக் கவும் பல்தேய்க்கவும் கூட அனுமதிக்க வில்லை. 19ஆம் திகதி ஆய்வாளர் என்னரு கில் வரும்போது என்னிடமிருந்து வீசிய கெட்ட வாடையை பொறுக்க முடியாமலே குளிக்க அனுமதித்தார். மேலும் அன்று நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டியிருந்த தாலும் அனுமதி வழங்கப்பட்டது.

குடிப்பதற்குத் தண்ணீர் தர மறுத்தனர். தாங்கள் கூறும் பொய்யான குற்றச்சாட்டு களை நான் ஏற்றுக்கொள்ளாதவரை குடிக்க நீர் தரமாட்டோம் என்று கூறுவார்கள். பின்னர் அவர்களாகவே சிறிது நீர் ஊற்றுவர். இரவுகளில் தூங்கவிடமாட்டார்கள். அவ்வாறு நான் தூங்காமல் இருக்க இரவு காவலர்கள் வசம் பொறுப்பு ஒப்படைக்கப்படும். தூங்கினால் முகத்தில் தண்ணீர் ஊற்றுவர். உணவையும் தங்கள் ஆயுதமாக பயன் படுத்தினர். இவ்வாறு அந்த சட்டவிரோத காவல் நாட்களில் நான் துன்புறுத்தப்பட் டேன்.

இவ்வழக்கில் எவ்வாறு பல நிரபராதிகள் குற்றம் சாட்டப்பட்டனர் என்பதற்கு மேலும் ஓர் உதாரணம் கூறமுடியும். எனது சட்டவிரோத காவலின்போது ஒரு நாள் டீ.ஐ.ஜி. என்னிடம் வந்து “டேய் உன் ஊருக்கு பக்கத்தில் உள்ள கே.ஜி.எப்.தான் எனது ஊரும். நான் கூறும் மூன்று பொருட் களில் ஒன்றை இருக் கும் இடம் கூறு. உன்னை விடுதலை செய்துவிடுகிறேன்’ என்றார். நான் ‘என் னிடம் எதை சேர் கேட்கிறீர்கள் என்றேன். அவர் கூறினார் ‘ஒன்று ஏ.கே.47 துப்பாக்கி அல்லது ஒரு வயர்லெஸ் கருவி, அல்லது தங்கக் கட்டிகள் புதைத்து வைத்துள்ள இடம். இவற்றில் ஒன்றைக் கொடுத்து விட்டால் விட்டுவிடுகிறேன்” என்றார். நான் “என்னிடம் இருந்தால்தானே கொடுப்பேன். இல்லாமல் எவ்வாறு கொடுப்பது” என்று கேட்டேன். “அப்படியானால் உன்னை யாரும் காப்பாற்ற முடியாது” என்று கூறி விட்டு சென்றுவிட்டார்.

இந்த டி.ஐ.ஜி. தான் கோடியகரை சண்முகம் கொலையான சம்பவத்தில் தொடர்புபடுத்தப்பட்டவர் என்பதையும், லண்டனில் இவ்வழக்கு தொடர்பான ஆவணங்களைத் திருட விட்டுவிட்டேன் என்று கூறியவர் என்பதையும் இங்கு தங்களுக்கு நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இரவு பகல் 24 மணிநேரமும் காலைக் கடன்களை முடிக்கும்போது கூட கைகளில்

**குடிக்க நீர் மறுக்கப்பட்டது. உணவு மறுக்கப்பட்டது. சிறுநீர் கழிக்கவும் அனுமதி மறுக்கப்பட்டது.**

விலங்குகளோடுதான் வைக்கப்பட்டிருந் தேன். சாப்பிடும்போது மட்டும் ஒரு கையை தளர்த்திவிடுவர். படுக்கும்போது கூட விலங்கு பூட்டியே இருக்கும். இவ்வாறான கொடுமைகள் புரிந்தனர். மேலும் பல அதி காரிகள் பல மாறுபட்ட பாணியில் துன்புறுத்தினர். அனைவரின் துன்புறுத்தல் களும் கடுமையானதாக இர்க்கமற்றதாக இருந்தன.

அதற்குமேல் அற்புதத்தால் படிக்க முடிய வில்லை. கண்களில் வழிந்த நீரை துடைத் தவாறே இது வரை படித்த அவருக்கு எங்கே வாய்விட்டு அழுது விடுவோமா என்ற பயம் வந்தது.

‘எப்படியெல்லாம் வளர்த்தேன், என் பிள்ளையை, இது வரைக்கும் நானோ அவரோ அவனை அடித்ததே இல்லையே. இன்றைக்கு எவன் எவன் கையிலியோ இப்படி அடிவாங்கி இருக்கிறானே. அப்படி என்ன தப்பு செஞ்சுட்டான் என் பிள்ளை. இவனுங்க மனுசங்களா, மிருகங்களா...

அதிலையும் கைதானப்போ வெறும் 19 வயதுதானே. அந்தச் சின்னப்பிள்ளைய இப்படி கொடூரமாக அடிக்க எப்படித்தான் மனசு வந்துச்சோ. அந்தப் பாவிங்களுக்கு மனசாட்சிங்கிறதே கிடையாதா... அறிவு அறிவு... இத்தனையும் தாங்கிக்கிட்டுத்தான் வெளிய எதுவும் காட்டாம அம்மாட்ட சிரிச்சு பேசி அனுப்பினியாடா? எப்படிடா முடிஞ்சுது உன்னால....’

பொது இடம் என்பதால் அழவும் முடியாமல், பொங்கி வரும் கண்ணீரை அடக்கவும் முடியாமல் தன் முகத்தை தாள்களில் முழுவதுமாக மறைத்துக் கொண்டார்.

வீட்டிற்கு வந்து சேர்ந்த உடனேயே தனிமையில் சென்று அமர்ந்து வாய்விட்டு அழுது தீர்த்தார். நினைக்க நினைக்க அழுகை பொங்கியது.

இந்த 10 வருடமாக ஒரு தாயாக அவனுக்கு நாம் ஏதும் செய்ய வில்லை என்ற வருத்தம் ஏற்கனவே அவரை அழுத் தியது. ஒரு தலைவலி, காய்ச் சல் வந்தால் கவனித்துக் கொள்ளத் துணையின்றி எப்படித் தவிக்கிறானோ பிள்ளை என்று வருந்து பவர் இன்று இந்தக் கொடூரத்தைப் படித்தபின் மிகவும் உடைந்துவிட்டார்.

அடிபட்ட அவமானத் திலும் வலியிலும் வேதனை யிலும் பிள்ளை எப்படியெல்லாம் துடித்தானோ என்பதை நினைத்து நினைத்து அந்தத் தாய் மனம் துடித்தது.

இப்படியெல்லாம் அடிச்சிட்டுதான் என்கிட்ட சக்கரையாப் பேசினீங்களா... அதிகாரிகளை நினைக்க நினைக்க வெறுப்பு மேலிட்டது.

யாரிடமும் பகிர்ந்துகொள்ள முடியாமல் தனக்குள்ளேயே புலம்பி முடங்கினார்.

தன்னிலை விளக்கம் அனுப்ப இருப் பதை அறிந்த இராஜா, குழந்தைகள் அகரன், செவ்வை பெயரில் ஒரு கருணை மனு கடிதம் தயார்செய்து அதையும் இதோடு அனுப்ப ஏற்பாடு செய்தார். அந்தக் கடிதத் தில் கூப்பிய கரங்களுடன் குழந்தைகளின் படமும் இடம்பெற்றது. அதைப் பார்த்து அறிவு துடித்துப் போய்விட்டாள்.

‘என்னம்மா இது எனக்காக குழந்தை களைப் போய் கைகூப்ப வைச்சுட்டீங்களே... இதற்கு நான் செத்தேப் போயிருக்கலாமே” என்று கூறியதைக் கேட்டதும் அற்புதம் பதறிவிட்டார்.

“கண்ணு நீ இப்படியெல்லாம் பேசக் கூடாதுப்பா. நீ இல்லாம எங்களுக்கு வாழ்க்கை இல்லப்பா” – என்று அழுதார்.



பூட்டிப் பூட்டி வைத்திருந்த சோகம் அந்த நொடியில் வெடித்துக் கிளம்பியது

சென்னையில் நவம்பர் 17 அன்று மாபெரும் பேரணி ஒன்றிற்கு ஏற்பாடு செய் யப்பட்டிருப்பதை மகனிடம் கூறினார்.

ஆனால், வழக்கம்போல் இந்தப் பேரணி யும் தடை செய்யப்பட்டது. தமிழகமெங்கு மிருந்து பெரும் ஆவலுடன் உணர்ச்சியுடன் பேரணிக்குக் கிளம்பிய தோழர்கள் இந்தத் தடையால் அவதியுற்றனர். அனைவருமே சாதாரண நிலையிலிருப்பவர்கள். பிற கட்சிகளைப்போல தலைமையிடம் பணம் வாங்காது தங்கள் கையிலிருந்து செலவழித்து வர இருந்தவர்கள். அதனால் ஏற்பாடு செய் திருந்தவற்றை மாற்றியதில் பொருள் நஷ்டம்.

ஏற்கனவே ஒருநாள் உழைப்பு இல்லா விட்டாலும் குடும்பப் பொருளாதாரம் பாதிக்கும் நிலையில் உள்ள அவர்கள் இந் தப் பேரணிக்காக அதை ஏற்றுக் கிளம்ப இருந்தனர்.

(தவிப்பு தொடரும்)

> தூக்குத் தண்டனைக்கு காத்திருக்கும் தன் மகனை தூக்குக் கயிற்றின் பிடியிலி ருந்து மீட்பதற்குப் போராடும் ஒரு தாயின் உண்மைக் கதை இது.
>
> நவீன புறநானூறாக உணர்வும், விறு விறுப்பும்நிறைத்து இதனைச் செதுக்கி யுள்ளார் இளம் எழுத்தாளர் பூங்குழலி.

**யமனுக்கு மனிதநேயம் இருந்தது. மனிதர்களுக்கு....?**

# உயிரைப் பறிக்கும் உடல் பருமன்!

துரித உணவும், பிஸ்ஸா உணவும் இளைய தலைமுறையினரின் விருப்பமான உணவு கள்.

நாக்குக்கு சுவை தரும் இந்த உணவுகள், உடலுக்கு தேவையான சத்துகளை தருவ தில்லை. மாறாக, உடல் பருமனாகிறது! உடல் பருமன் பல நோய்களைக் கொண்டு வந்து, உயிருக்கே உலை வைத்துவிடும்!

## கொழும்புச் சத்து

நகர மக்களுக்கு உடல் உழைப்புக் குறைவு. ஆனால், இவர்கள் கொழுப்புச் சத்து அதிகமான உணவுகளை சாப்பிடுகிறார்கள். உடலுக்கு கொழுப்பு தேவை என்றாலும், அதிகமான கொழுப்பு உயிருக்கு எமனா கிறது!

அதிகப்படியான கொழுப்பு உடம்பில் அங்கங்கே தங்கி உடலை பருக்க வைக்கிறது. குறிப்பாக அடிவயிற்றில் கொழுப்பு சேரு கிறது. இதனால் உடல் எடை கூடுகிறது. நீரிழிவு, இரத்தக்கொதிப்பு, மாரடைப்பு நோய்களுக்கு உடல் பருமனே காரணம்!

உலக மக்கள் தொகை 630 கோடி. அதில் 170 கோடி மக்கள் குண்டானவர்கள் என உலக சுகாதார நிறுவனம் கூறுகிறது.

## உடல் பருமனாவது ஏன்?

இனிப்பு, கொழுப்பு, உப்பு போன்ற அதிக சக்தியும், குறைவான ஊட்டச்சத்தும் கொண்ட உணவுகளை சாப்பிடுவதால் உடல் குண்டாகிறது.

மூக்குமுட்டச் சாப்பிடுவதும் ஒரு கார ணம். நொறுக்குத்தீனி, குளிர்பானங்கள் சாப்பிடுவதாலும் உடல் பருமனாகிறது. நேரங்கெட்ட நேரத்தில் சாப்பிடுவதாலும் உடல் தடிக்கிறது.

உடல் குண்டாவதால் சில நோய்கள் உண்டாகி உயிருக்கு ஆபத்தை ஏற்படுகின் றது. நீரிழிவுநோய், நரம்புத்தளர்ச்சி, சிறுநீரகம் பாதிப்பு, மாரடைப்பு ஆகியவை உடல் பருமனால் உண்டாகும் பிற ஆபத்துகள் ஆகும். எனவே, சரியான உணவு உண்ண வேண்டும்.

## சரியான உணவு

கேழ்வரகு, கம்பு, சோளம் போன்ற தானிய உணவுவகைகளைச் சாப்பிடுவது நல் லது. இவை உடம் புக்கு தேவையான சத்துகள் நிறைந் தவை. உடம்பும் தடிக் காது. உடல் பரு மனைக் குறைக்க பட்டினி கிடக்கக் கூடாது. குண்டான வர்கள் அதிக கொழுப்பு, இனிப்பு உள்ள உணவுகளை சாப்பிடக்கூடாது. ஒரு வருக்கு ஒரு நாளுக்கு 65 கிராம் கொழுப் புச்சத்து போதுமா னது.

காப்பி, தேநீர் குடிக்காமல் இருப் பது உடலுக்கு நல் லது.

## தொலைக்காட்சி

தொலைக்காட்சி முன்பு அதிக நேரம் அமர்ந்து இருப்பது நல்லதல்ல. இதனால் உடல் தடிக்கும்!

சிறு சிறு வீட்டு



வேலைகள் – துணி துவைப்பது, தோட்ட வேலை செய்வது, சைக் கிள் மிதிப்பது, நடை பயிற்சி ஆகியவை உடல் எடையை கட்டுக் குள் வைக்க உதவுகின் றன.

## ஆபத்தான எடை!

மிக குறைந்த எடை யும் ஆபத்து; மிக அதிக எடையும் ஆபத்தானது தான்!

உயரம், வயதுக்கு ஏற்ப உடல் எடை இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, 5 அடி 6 அங்குலம் உயர முள்ள ஒருவருக்கு 64 கிலோ எடை இருக்கலாம்.

பெண்கள் அதை விட 5 கிலோ எடை குறை வாக இருப்பது நல்லது. முதியவர்களும் எடை யைக் குறைத்துக்கொள் ளுவது பாதுகாப்பா னது.

# சங்கடத்தில் ராஜபக்ஷ

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளராக பலத்த இழுபறியின் பின்னர் ஒருவழியாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தல் 2005இல் நடைபெறுமா, 2006இல் நடைபெறுமா என்று இன்னும் உறுதியாகத் தெரியாத நிலையில் 2006இல் நடைபெறும் தேர்தலுக்காக என ஜனாதிபதி வேட்பாளராக மஹிந்த நியமிக்கப்பட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மத்தியகுழுக்கூட்டம் மூன்று மணிநேரம் நடைபெற்றபின்னர் ஒருவழியாக நியமிக்கப்பட்டுள்ள மஹிந்த, தனக்கு ஆதரவைத் திரட்ட, வழமையாக சிங்களத் தலைமைகள் கையாளும் இனவாத கூச்சல்கள், இனவாதிகளுடனான கூட்டு ஆகியவற்றைப் பயன்படுத்த இருப்பதாகவே தெரிகிறது.

தென்னிலங்கையின் பேரினவாதக் கட்சிகளும், பேரினவாத அமைப்புக்களும் ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்தவுக்கு தாம் ஆதரவளிப்பது பற்றிப் பேசிவருகின்றன. இதில் முக்கியமாக ஜே.வி.பி. தனது நிபந்தனைகளைக்கூறி அவற்றை ஏற்றால் மஹிந்தவுக்கு ஆதரவளிக்க முடியும் என கூறியுள்ளது.

அது தனது நிபந்தனையில், ஜனாதிபதியின் ஆதரவுடன் புலிகளுடன் செய்துகொள்ளப்பட்ட பொதுக்கட்டமைப்பு தொடர்பாகவும், மறுசீரமைப்பு என்ற பெயரில் மேற்கொள்ளப்படும் தனியார் மயமாக்கல் தேசியப் பிரச்சினையில் அவரது நிலைப்பாடு தொடர்பாகவும் பகிரங்கப்படுத்த வேண்டுமென்ற நிபந்தனைகளை முன்வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது. இவற்றை ஏற்றாலே ஜனாதிபதி வேட்பாளரான மஹிந்தவுக்கு ஆதரவளிக்க முடியும் எனத் தெரிவித்துள்ளது.

அதேவேளை, ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கவும் பிரதமர் மஹிந்தவுக்கு நிபந்தனைகள் பலவிதித்துள்ளதாகவும் தெரியவருகிறது.

அதில் அவர் மஹிந்த ராஜபக்ஷவுக்கான பிரசாரக்குழுவின் தலைவராக ஜனாதிபதி சந்திரிக்காவே இருப்பாரென்வும், பொதுக்கட்டமைப்பும், சமாதானப்பேச்சும் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது. அதேநேரம் ஜே.வி.பியுடன் எவ்விதத்திலும் கூட்டணி அமைக்கக் கூடாதெனவும் எந்தக் கட்சியுடன் இனிமெல் கூட்டணி அமைப்பதென்பது குறித்து தானும் கட்சியின் செயலாளருமே முடிவு செய்ய இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இதனால் பெரும் சங்கடமான நிலையில் மஹிந்த இருப்பதாகவே தெரிகிறது. சுதந்திரமாக தனது நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாத நிலையில் மஹிந்த உள்ளார். வெறும் பொம்மை வேட்பாளராகவே மஹிந்த உள்ளதாக எதிர்க்கட்சிகள் கூறுகின்றன.

மஹிந்தவின் பிரதான எதிர்வேட்பாளராக ஐ.தே.கவின் ரணில் விக்கிரமசிங்கவே இருக்கப்போகிறார். மஹிந்தவுக்கு எதிராக சிங்களப் பேரினவாத அமைப்புகளும் பொதுவேட்பாளர் ஒருவரை நியமித்தால் மேலும் பின்னடைவு ஏற்படும் வாய்ப்பு உண்டு. இதனால் இனவாதிகளின் பக்கம் சாயும் நிலை மஹிந்தவுக்கு ஏற்படலாம்.

1994இல் ஜனாதிபதி சந்திரிக்கா தனது பிரதான கோஷமாக சமாதானத்தை முன்வைத்து சமாதானப் புறாவாக தோன்றி பெருவெற்றி ஈட்டினார். சிறுபான்மை மக்களின் ஆதரவுடன் வெற்றிபெற்ற பின்னர் தனது சமாதான தேவதை வடிவத்தை மாற்றி பேரினவாத சக்திகளுக்குத் தலைமை தாங்கி தனது சுயரூபத்தை வெளிப்படுத்தினார் அதனால் 1999இல் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் நூலிழையில் வெற்றிபெற்றார். சிறுபான்மை மக்களின் ஆதரவு அவருக்குப் பெரிதாகக் கிடைக்கவில்லை. இப்போது மீண்டும் ஒரு ஜனாதிபதித் தேர்தல் நெருங்கிவருகிறது.

இந்த நிலையில் மஹிந்த பேரினவாதிகளை தனது வெற்றிக்கு துணையாக அழைத்துச்செல்லப் போகிறாரா அல்லது சிறுபான்மையினரை அரவணைக்கப் போகிறாரா என்பது இன்னும் சிறிது காலத்தில் தெரிந்துவிடும்.

தென்னிலங்கை தற்போது முழுமையாக ஜனாதிபதித் தேர்தல் குறித்தே சிந்தித்து வருகிறது. சிறுபான்மை மக்களின் பிரச்சினைகள் குறித்து அவர்கள் பெரிதாக அலட்டிக் கொள்வதாகத் தெரியவில்லை.

கடந்த காலத்தில் சிறுபான்மை மக்களுக்கெதிரான வன்முறைகள் போராக வெடித்தபோதும் சரி, சமாதானகால படுகொலைகளின் போதும் சரி மஹிந்த தனது கருத்துக்களை வெளிப்படுத்தியது கிடையாது.

அவரும் மதில்மேல் பூனையாகவே இருந்துவந்துள்ளார். எனினும், இனி அவர் அவ்வாறு இருக்கமுடியாது. ஏதாவது ஒருபக்கம் சாய்ந்து கொள்ளவேண்டிய நிலை ஏற்படும். அது எந்தப்பக்கம் என்பதுதான் கேள்விக்குரியது.

சிங்கள இனவாத ஏனையகட்சிகளும் சரி, போரையே தமிழர்களுக்கு தீர்வாக வழங்கிய ஜனாதிபதியும் சரி மஹிந்தவை சிறுபான்மை மக்களின்பக்கம் திரும்பவிடப்போவதில்லை.

ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதிக் கனவில் மிதக்கிறார். அவரும் ஒரு சூழ்ச்சியுடன்தான் தமிழர் போராட்டத்தைக் கையாண்டார். அவரும் ஒன்றும் சிறுபான்மையினரின் அனுதாபி எனக் கருதமுடியாது.

இந்நிலையில் சிறுபான்மை மக்கள் ஒன்றிணைந்து பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்தினால் என்ன என்ற கேள்வியும் பிறக்கிறது. 1999 தேர்தல் காலத்திலும் இவ்வாறான ஒரு கருத்து முன்வைக்கப்பட்டது. அன்று தமிழ் கட்சிகளிடம் இருந்த ஒற்றுமையின்மை காரணமாக அது கைகூடவில்லை.

**—பின்கலன்—**

இன்றும் அந்த நிலை இல்லை.

மஹிந்த பேரினவாதிகள் பக்கம் சாயும் வாய்ப்புக்களே அதிகமாகத்தென்படுகிறது. எனினும் உண்மை நிலைமையினை இன்னும் சிறிது காலத்தில் விளங்கிக்கொள்ளமுடியும்.


நீங்கள் ஆவலுடன் எதிர்பார்த்த
"ஒரு ரோஜாவின் காதலி"
"முள்ளில்லா ரோஜாக்கள்"
வந்துவிட்டன
ஏக விநியோகஸ்தர்கள்
சகல பூபாலசிங்கம்
புத்தகசாலைகளிலும்




"ஒரு ரோஜாவின் காதலி"
நான்கு குறு நாவல்கள்
மூன்று சிறுகதைகள் அடங்கியது
"முள்ளில்லா ரோஜாக்கள்"
இரண்டு குறு நாவல்கள்
இருபது சிறுகதைகள்

கனடாவின் "செந்தாமரை" பத்திரிகையின் முது எழுத்தாளரும், மறுமலர்ச்சி எழுத்தாளனுமாகிய இரா.தணியின் இரண்டு கதைத் தொகுப்புகள், முன்னூறு பக்கங்களைக் கொண்ட இப்புத்தகங்களின் ஏக விநியோகஸ்தர்கள் பூபாலசிங்கம் புத்தக நிலையத்தாராகும். இலங்கையின் எப்பாகத்திலும் அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். வாசியுங்கள் இன்புறுங்கள். இரா.தணியின் வேறு கதைத் தொகுப்புகள் படிப்படியாக வெளிவரும்.

அன்புள்ள
இரா.தணி.





இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்ட, மறுசீரமைக்கப்படாத உயர்ரக
மெஸியர்கியூஷன்
MASSEY FERGUSON 240
எந்த வேலையிலும் எத்தனை ட்ரக்டர்களையும் வாங்கி வரக்கூடிய இலங்கையின் மிகப்பெரிய ட்ரக்டர் நிறுவனம்
தேவ் டிரக்டர்ஸ்
196, கண்டி ரோட் யக்கல.
(லங்லோ அருகில்)
தொ. : 033-2226010 பெ. : 033-2226716



டேவ்ரச் டென்சியா கம்பைன் ஹாவஸ்டர்



புத்தம் புதியது

- நாளொன்றுக்கு 2 ஏக்கர் நிலப்பரப்பினை அறுவடை செய்யலாம்.
- குறைந்த செலவு
- இலகு பாவனை
- அதிகூடிய திறன்
- வீண் விரயங்களைத் தடுக்கலாம்
- ஆறு மாத உத்தரவாதம் உண்டு
- இதில் சூடடித்தல் மற்றும் நெல்லினை சாக்கினில் இட்டுக்கட்டுதல் போன்றவற்றையும் மேற்கொள்ளலாம்.

டேவ் டிரக்டர்ஸ் பிறைவேட் லிமிடெட்.
யக்கல, தொலைபேசி — 0332226010

சுடர் ஒளி

ஆகஸ்ட் 07 - 13, 2005

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14 டெலிபோன்: 011-4734401—6
பாக்ஸ் : 011 - 4734404
E-mail: editorial@sudaroli.com

## ஐ.ஆர்.ஏ.யும் புலிகளும்

வட அயர்லாந்தில் பிரிட்டனின் ஆதிக்கம் முடிவுக்கு வரவேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து கடந்த முப்பது வருடகாலமாக போராட்டம் நடத்திவந்த ஐ.ஆர்.ஏ.எனப்படும் 'ஐரிஷ் குடியரசு இராணுவம்' தனது ஆயுதப் போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வந்திருப்பதாக அறிவித்துள்ளது.

1998 பெரிய வெள்ளி அன்று செய்து கொண்ட ஒப்பந்தம் பல சோதனைகளையும் வேதனைகளையும் கடந்து தற்பொழுது இறுதித் தீர்வுக்கு நெருங்கி உள்ளது.

இந்தோனேஷியாவின் ஆசே மாநிலத்தில் தனிநாடு கோரிப் போராட்டம் நடத்திவந்த சுதந்திர ஆசே இயக்கம் இம் மாதம் 15 ஆம் திகதி இந்தோனேஷிய அரசுடன் சமாதான ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடுகிறது. ஆயுதங்களைக் கையளிக்கவும் அது இணங்கி இருக்கிறது.

இதே நிலைமைதான் மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்டிலும். சமாதான ஒப்பந்தம் தயாராகிவிட்டது. நாடாளுமன்றத்தில் நிறைவேற்றி அதனை சட்டபூர்வமாக்கியதும் கிளர்ச்சிவாதிகள் ஆயுதங்களை கையளித்துவிடுவார்கள். எந்த நேரமும் அது சாத்தியமாகலாம்.

மற்றொரு ஆபிரிக்க நாடான சூடானிலும் 21 வருடகால யுத்தத்துக்கு வருட முற்பகுதியில் தீர்வு காணப்பட்டுவிட்டது.

இப்படியான நிலையில்தான், விடுதலைப்புலிகளும் தமது ஆயுதங்களைக் கைவிடவேண்டும் என்ற கோரிக்கை சமீப நாட்களாக தென் இலங்கையில் ஒலித்து வருகிறது.

வழமைபோல வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே இதில் முன்னணியில் இருக்கிறார்.

புலிகள் ஆயுதங்களை முற்றாக கையளிக்கும்வரை இலங்கையின் தேசிய பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படமாட்டாது என்கிறார் கதிர்காமர்.

1505 ஆம் ஆண்டு போர்த்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றிய போது இலங்கையில் யாழ்ப்பாண ராஜ்ஜியம், கண்டி ராஜ்ஜியம், கோட்டை ராஜ்ஜியம் என்று மூன்று இராஜ்ஜியங்கள் இருந்ததையும்—

இறுதியாக ஆங்கிலேயர் இலங்கையைக் கைப்பற்றிய பின்பு தமது நிர்வாக வசதிக்காக ஒன்றிணைத்ததையும்—

இலங்கை சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து சிங்களத் தலைவர்களை நம்பி தமிழ்த் தலைவர்கள் மோசம்போனதையும்—

தமிழ் மக்கள் எவ்வாறு இன அழிப்புக்குள்ளானார்கள் என்பதையும்—

புலிகளின் ஆயுதப்போராட்டமே இலங்கை அரசை மண்டியிட வைத்து பேச்சுவார்த்தைக்கு கொண்டு வந்தது என்பதையும் தமிழரான கதிர்காமர் மறந்துவிட்டார் போலும்.

போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்றரை வருடங்கள் கடந்த நிலையிலும் சமாதானப் பேச்சுக்களில் எந்தஒரு முன்னேற்றமும் இல்லை.

வடக்கு, கிழக்கில் தன்னாட்சி அதிகார சபை நிறுவுவது குறித்து தற்போது கதையே இல்லை.

தேசிய அழிவு என்று கூறப்படுகிற ஆழிப் பேரலையின் பின்னரும் கூட மனிதாபிமான அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு ஏழுமாதம் இழுத்தடிக்கப்பட்டது. தற்போது நீதித்துறையும் தடைசெய்து விட்டது.

யுத்தம் மட்டும் ஓய்ந்து விட்டது. மற்றைய அடக்கு முறைகள் எல்லாம் தொடருகின்றன. இப்படியான நிலையில் புலிகள் ஆயுதங்களை ஒப்படைக்க வேண்டும் என்று எந்த முகத்துடன் கேட்கிறார் கதிர்காமர்?

வட அயர்லாந்துப் பிரச்சினை போன்றதோ, ஆசேப் பிரச்சினை போன்றதோ, ஐவரி கோஸ்ட் பிரச்சினை போன்றதோ அல்ல; இலங்கை இனப்பிரச்சினை.

சிங்களப் பேரினவாதத்தின் அடக்குமுறையின் உச்சத்திலேயே இலங்கையில் ஆயுதப் போராட்டம் ஆரம்பமானது. புலிகளின் ஆயுதமே தமிழ் மக்களின் பலம். இலங்கையைப் பொறுத்தவரை இறுதித் தீர்வு வந்தாலும் ஆயுதக் கையளிப்பு எவ்வளவு தூரம் சாத்தியம் ஆகும் என்று கூறமுடியாது.

அந்த அளவுக்கு இரு சமூகங்கள் மத்தியிலும் இடைவெளி அதிகரித்துவிட்டது. ஐ.ஆர்.ஏ.ஆயுதங்களைக் கையளிக்கிறது என்பதற்காக புலிகளையும் கையளிக்கக் கோருவது மூலம், தாம் பேரினவாதத்தின் அடிவருடி என்பதை கதிர்காமர் மற்றொரு தடவை வெளிக்காட்டி இருக்கிறார்.

---

இறைமைக்கான தமிழரின் போராட்டத்தைச் சர்வதேச சமூகம் அங்கீகரிக்க வேண்டும்! இவ்வாறு கடந்த 27.07.2005 புதன்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற தமிழ்த் தேசிய எழுச்சி மாநாட்டில் வெளியிடப்பட்ட தமிழ்த் தேசிய எழுச்சிப் பிரகடனம் சர்வதேச சமூகத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறது. இந்தப் பின்னணியில்தான் சிறிலங்கா சுதந்திரக் கட்சி தனது ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நியமனம் செய்துள்ளது.

### ஜனாதிபதித் தேர்தல் நெருங்குகின்றது

ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ஜனாதிபதித் தேர்தல் 2006ஆம் ஆண்டில்தான் நடைபெறும் என அடித்துக் கூறுகிறார். ஆனால், 2005 நவம்பரில் இந்தத் தேர்தலை நடத்துவதற்கான ஆயத்தங்களை தேர்தல் ஆணையாளர் தயானந்த திசநாயக்கா மேற்கொண்டுள்ளதாக நம்பகமாகத் தெரியவருகிறது. அதுமட்டுமன்றி ஐ.தே.கட்சியும் இந்தத் தேர்தலை எதிர்கொள்வதற்கான பிரசார யந்திரத்தை முடக்கி விட்டுள்ளது.

### கதவு மூடப்பட்டுவிட்டது

இந்நாட்டில் வாழும் தமிழ் மக்கள் தமது ஜீவாதாரப் பிரச்சினைகளுக்கான தீர்வை ஜனநாயக வழி நின்று பெற்றுக்கொள்ளலாம் எனக் கொண்டிருந்த நம்பிக்கை இப்போது தவிடுபொடியாகி உள்ளது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு ஜனநாயக வழியில் அமைந்த எந்தவொரு தீர்வுக்குமான கதவை முற்றாக மூடியுள்ளது சிங்களப் பேரினவாதம். ஐ.தே.கட்சியாக இருக்கலாம் அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக இருக்கலாம் தமிழ் மக்களின் 'இது எமது நிலம்' 'இது எமது மொழி' என்ற ஏகோபித்த குரலை நசுக்கி விடுவதையே நோக்கமாகக் கொண்டுள்ளன இவை. இவ்விரு கட்சிகளும் தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே!

### பாசவலை

இப்போது ஜனாதிபதித் தேர்தல் அண்மித்துள்ள நிலையில் இந்த இரு கட்சிகளும் தமிழ் மக்களின் வாக்குவங்கியை வலை வீசிப் பிடிப்பதற்கான ராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்துள்ளன. ஏனெனில், ஜனாதிபதித் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளும் கணிசமான செல்வாக்கைச் செலுத்துகின்றன. இன்னும் ஒருபடி மேலே சென்று சொல்வதானால் ஜனாதிபதி வேட்பாளர் ஒருவரின் வெற்றியைத் தமிழ் மக்களின் ஒட்டுமொத்தமான ஆதரவுதான் தீர்மானிக்கப்போகிறது.

இந்தச் சூழ்நிலையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரைத் தன்னுடன் பேச வருமாறு அழைத்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இப்போது தமிழ் மக்கள் தமது வாக்குகளை யாருக்கு அளிப்பது என்பது பற்றித் தீர்மானிப்பதில் சிக்கலான ஒரு நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். தமிழ்மக்களின் வாக்குகள் தமக்கே என்பதில் ஐ.தே.க. அசையாத நம்பிக்கை கொண்டிருக்கிறது.

மஹிந்த ராஜபக்ஷவை நாம் கவனத்துக்கு எடுத்துக் கொண்டால் எமது கவனத்தைத் திருப்புவை எவை? ஜனாதிபதி செயலகப் பணிப்புரைகளுக்கு மாறாக, சுனாமிக்குப் பின்னரான புனர்கட்டுமான நிவாரணப் பணிகளுக்காக நன்கொடையாகக் கிடைத்த பெருந் தொகைப் பணத்தைத் திறைசேரிக் கணக்கிலோ அல்லது மத்தியவங்கியிலுள்ள ஜனாதிபதி நிதியத்திலோ வைப்பிலிடாமல் 'ஹெல்பிங் அம்பாந்தோட்டை' என்ற தனிப்பட்ட கணக்கில் யாருக்கும் தெரியாமல் இரகசியமாக வைப்பிலிட்டு இருக்கிறார் மஹிந்த.

அதுமட்டுமல்ல, சுனாமி நிவாரண மீள் கட்டமைப்புப் பணிகளை வடக்கு – கிழக்குப் பகுதிகளில் துரிதமாக மேற்கொள்வதற்கு வசதியாக தமிழீழ விடுதலைப் புலிகள் விடுத்த வேண்டுகோளையடுத்து பொதுக்கட்டமைப்பொன்றை அமைக்க அரசாங்கம் முன்வந்ததும் இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அரசாங்கத்துக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் கைச்சாத்தானதும் — எல்லோரும் அறிந்த விடயமே. ஆனால், இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் அரசாங்கத்தின் சார்பில் கையெழுத்திடும்படி பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை ஜனாதிபதி கேட்ட போது முடியாதென்று மறுத்துவிட்டார் அவர்.

பொதுக்கட்டமைப்பின் பிரதியை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவேண்டும் எனப் பேரினவாதக் கட்சிகள் பல வற்புறுத்தி நின்றன. இந்த நெருக்கடியைத் தளர்த்துவதற்காக ஒப்பந்தத்தின் நகல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதைப் பிரதமரே சமர்ப்பிக்க வேண்டுமெனக் கேட்கப்பட்ட போது அதற்கும் மறுப்புத் தெரிவித்த அவர் அது சமர்ப்பிக்கப்பட்ட நேரம் பார்த்து நாடாளுமன்றத்திலிருந்தும் மெல்ல நழுவிவிட்டார்.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் என்ன நடந்தது என்று தெரியுமா?

சமாதான நடவடிக்கைகளில் அனுசரணைப் பணியினை பொறுப்பேற்றுள்ள நோர்வே மீது பல கண்டனக் கணைகளைத் தொடுத்திருக்கிறார் ராஜபக்ஷ. பொதுக் கட்டமைப்பு விடயத்தில் ஜனாதிபதியுடன் மோதிக்கொண்டு ஜே.வி.பி. வெளியேறியதல்லவா? அந்த வேளை அவ்வரைச் சந்திக்கச் சென்ற நோர்வே தரப்பினரிடம் "ஐக்கிய மக்கள் கூட்டமைப்பு அரசாங்கத்தை உடைக்க வேண்டும் என்பதே உங்கள் கனவு. அந்தக் கனவு இப்போது நனவாகிவிட்டது. உங்களுக்கு சந்தோஷம் தானே" என்று கேட்டிருக்கிறார் அவர்.

திருகோணமலையில் இரவோடு இரவாக எழுப்பப்பட்ட புத்தர்சிலை விவகாரம் 'நீறு பூத்த நெருப்பாக' இப்போதும் இருந்து வருகிறது. தமிழ் மக்களின் தன்மானப் பிரச்சினை இது. இதுபற்றி அரசாங்கத்துக்கும், தமிழர் தரப்புக்குமிடையில் எத்தனையோ பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுவிட்டன. ஆனால், பிரதமரோ 'மூச்' — வாய்கட்டி மௌனியாக இருக்கிறார். இவ்விடயம் பற்றி இதுவரை எதுவும் பேசவில்லை.

இப்படியெல்லாம் அவர் நடந்துகொள்வது ஏன்? அவருக்கென்று தனியான நிகழ்ச்சி நிரலொன்றைத் தயாரித்து வைத்திருக்கிறார் அவர். பாம்புக்குத் தலையையும் மீனுக்கு வாலையும் காட்டும் விளையாட்டுத் தான் இது.

ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட உள்ள அவர் தமிழ் மக்களின் கோரிக்கைகளுக்குச் சார்பாக வாய் திறந்தால் பேரினவாத வாக்கு வங்கியைத் தான் இழக்க நேரிடும் என்பதையும், தமிழருக்கு எதிரான குரல் தனக்கான அவர்களின் ஆதரவை அடியோடு சாய்த்துவிடும் என்பதையும் நன்கு தெரிந்து வைத்திருக்கிறார். அதனால்தான் அவரது இந்த 'நல்ல பிள்ளை' வேஷம்.

தமிழ் மக்களுக்கு எந்த ஓர் உரிமையும் வழங்கப்படக்கூடாது என்பதில் கண்ணும் கருத்துமாக இருக்கும் சிங்களப் பேரினவாதக் கட்சியான ஜே.வி.பிக்கும் இவருக்கும் இடையில் புரிந்துணர்வு ஒன்று உண்டு.

ஊழல் பற்றி மேடை முழக்கம் செய்யும் ஜே.வி.பியின் பிரசாரப் பீரங்கியான விமல் வீரவன்சவோ அல்லது அதன் ஏனைய தலைவர்களோ சுனாமி நிவாரண நிதியைப் பிரதமர் தனது தனிப்பட்ட கணக்கில் வைப்பிலிட்டது பற்றி அலட்டிக்கொள்ளாது 'மௌனவிரதம்' காப்பது ஏன்?

மஹிந்த ராஜபக்ஷ பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக வெளியிட்ட கருத்துக்களும், எடுத்த நடவடிக்கைகளும் பேரினவாதிகளுக்கு குறிப்பாக ஜே.வி.பியினருக்குப் பாலை வார்ப்பதாகவே அமைந்திருந்தன.

இப்போது அவர் தமிழ் மக்களின் வாக்குகளைக் கவர்ந்து கொள்வதற்காக பேரினவாதக் கட்சிகளுக்கப்பால் நின்றுகொண்டு இடதுசாரிக் கட்சிகள் அனைத்தினது ஆதரவையும் தனதாக்கிக்கொள்ளும் வழியை நோக்கிக் காய்களை நகர்த்துவதாகக் கதைகள் கசிந்திருக்கின்றன.

### ஐ.தே.க.

மஹிந்தவின் நிலை இப்படியிருக்க ஐ.தே.க. தமிழர் பிரச்சினையைப் பொறுத்தளவில் எமக்குச் சாதகமாக நடந்துகொள்ளுமா? என்பது பற்றியும் சிந்திக்க வேண்டியவர்களாக தமிழ் மக்கள் இருக்கிறார்கள்.




ஐ.தே.கட்சியும் தமிழர்களைப் பொறுத்தவரை பசுத்தோல் போர்த்த புலிதான். போர் நிறுத்தம் கைச்சாத்தான பின்னர் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகள் எவ்வளவு தூரம் முன்னோக்கிச் சென்றன? அவை நின்ற இடத்திலேயே நின்றன.

பிரச்சினைகளுக்கான தீர்வுகளைக் கண்டறிந்து அவற்றை அமுல் நடத்துவதில் ஆர்வம் காட்டாது சர்வதேச வலைப் பின்னல் ஒன்றின் மூலம் விடுதலைப் புலிகளை மடக்கிப் பிடிப்பதிலேயே ஐ.தே.கட்சி அதிகம் நாட்டம் காட்டிவந்ததை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள்.

பொதுக்கட்டமைப்பு கைச்சாத்தான பின்னரும்கூட முஸ்லிம் மக்களின் தேவைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.க. குற்றஞ்சாட்டி வந்ததும் இந்த அமைப்புப் பற்றி அது காட்டிவந்த ஏனோ தானோ மனப்பாங்கும் எளிதில் மறந்துவிடக் கூடியவை அல்ல.

இத்தகையதொரு பின்புலம் தான் தமிழ் மக்களை இந்த ஜனாதிபதித்தேர்தலுக்கான தமது வாக்குரிமை பற்றிச் சிந்திக்கத் தூண்டுகிறது.

### முடிந்த முடிவு

இன்று தமிழர் தாயகத்தின் தனி நிர்வாகத்துக்கான கட்டமைப்பு கட்டி எழுப்பப்பட்டுவிட்டது. இந்த நிலையில் ஆயுத ரீதியாக, படை பலரீதியாக, பொருளாதார ரீதியாக புலிகள் இயக்கம் அசைக்கமுடியாத பலத்தை அடைந்திருக்கிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் பற்றிய சர்வதேசத்தின் பார்வையும் மாறி இருக்கிறது. முன்னரெல்லாம் புலிகள் இயக்கத்தை பயங்கரவாத இயக்கமென வர்ணித்த பல நாடுகள் புலிகளின் அரசியல் நிலைப்பாடு சரியானதுதான் என்பதை இப்போது புரிந்து கொண்டுள்ளன.

(08 ஆம் பக்கம் பார்க்க)

# அரசியல் வம்பு தும்பு



அம்பி

## மஹிந்தவிற்கு ஆப்பு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் விசேட குழுக்கூட்டமொன்றில் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவுசெய்யப்பட்டபோது சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரின் முகங்கள் வாடிப்போயிருந்தனவாம்.

ஜனாதிபதி வேட்பாளர் பதவியில் ஆசைஇருந்தாலும் அதில் கண்வைக்காமல் பிரதமர் பதவியில் கண்வைத்திருந்த சிரேஷ்ட உறுப்பினர்கள் பலரின் முகங்கள்தான் வாடிப்போயினவாம். இவ்வாறு பிரதமர் பதவியில் கண்வைத்திருந்த ஐந்துபேர் தமக்கு கட்சி அநீதி இழைத்திருப்பதாக தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறியவருகின்றனராம்.

ஜனாதிபதி வேட்பாளர் பதவி வழங்கப்படுவதற்கு முன்னர் ஜனாதிபதிக்கும், பிரதமர் மஹிந்தவிற்குமிடையில் கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இதில் பல நிபந்தனைகள் விதிக்கப்பட்டனவாம்.

இந்த நிபந்தனைகளை ஏற்ற பின்னர்தான் மஹிந்தவிற்கு நியமனம் வழங்கப்பட்டதாம். ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தை தீர்த்துவைத்து ஒரே கல்லில் இரண்டு மாங்காய் அடித்திருக்கிறாராம் ஜனாதிபதி. ஒருவேளை, ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோற்றால் பிரதமர் பதவி அனுராவிடம் இருக்கும். எனவே, ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த தோற்றால் அவரின் அரசியலை நிறுத்திவிடலாமென்று கருதியே இந்த தீர்மானங்களை எடுத்திருக்கிறதாம் அரச தலைமைத்துவம்.

## மஹிந்தவிற்கு வாழ்த்து

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி வேட்பாளராகத் தெரிவு செய்யப்பட்ட தினம் இரவு 12 மணியளவில் அலரி மாளிகையின் தொலைபேசி அலறியது. பிரதமர் மஹிந்தவிற்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்காக தொலைபேசியில் காத்திருந்தவர் ஜனாதிபதியின் சகோதரியான சுனேத்திரா பண்டாரநாயக்க. ''ஜனாதிபதி வேட்பாளர் பதவிக்கு தெரிவானதற்காக வாழ்த்துக்கள்'' என்றுகூறி சுவாரஸ்யமாக உரையாடினாராம் சுனேத்திரா. அன்றைய தினம் சுனேத்திரா பண்டாரநாயக்கவிற்கு பிறந்ததினம் என்பதால் பதிலுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்தாராம் பிரதமர்.

## ஜே.வி.பியை அரவணைத்தல்

ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் சுமுகமான தீர்வு கிடைத்ததையடுத்து இப்போது தேர்தல் வெற்றிக்காக ஜே.வி.பியைக் கைக்குள் போட்டுக்கொள்வதற்கான முயற்சிகளை எடுக்கிறாராம் பிரதமர்.

இந்த நடவடிக்கையின்போது முன்னாள் ஊடகத்துறை அமைச்சர் பெரும் பங்கை வகிக்கிறாராம். ஜே.வி.பியின் முக்கியத்தர்களுடன் அவர் இதற்காகப் பல சுற்றுப் பேச்சுக்களை நடத்தியிருக்கிறாராம்.

ஜே.வி.பியுடன் கூட்டுச் சேர்ந்த காரணத்தினால்தான் அரசாங்கமே இல்லாமற்போனது. இந்த அனுபவத்தை மறந்துவிட்டு ஜே.வி.பியுடன் மீண்டும்கூட்டுச்சேர மஹிந்த எடுக்கும் முயற்சி அவரை தோல்வியின் விளிம்பில் கொண்டுபோய் நிறுத்திவிடுமென்று ஜனாதிபதி தனக்கு வேண்டப்பட்டவர்களிடம் கூறியுள்ளாராம்.

## மஹிந்தவின் முயற்சி

தமிழர்களின் வாக்குகளும் ஜனாதிபதித் தேர்தல் வெற்றிக்கு கணிசமாகத் தேவை என்பதை ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த உணர்ந்துவிட்டார் போலும்.

இதனால்தான் மலையத்திலுள்ள முக்கிய புள்ளிகளை அவர் கைக்குள் போட்டுக்கொண்டுள்ளாராம். மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த ....பரமும், ....சாமியும் பிரதமரைச் சந்தித்தபோது அவர்களின் முழுமையான ஆதரவு கோரப்பட்டதாம்.

மலையக மக்கள் முன்னணியின் இந்த இரு பிரமுகர்களும் இவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடுத்துவதற்கு நுவரெலியாவின் முக்கிய அமைச்சரொருவர் பின்புறமிருந்து ஆதரவு வழங்குகின்றாராம். இவ்வாறான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பின்தங்கிய தோட்டப்பகுதி மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தலாம் என்கின்றனர் அந்த இரு பிரமுகர்களும். அது நல்லதுதான். இதுவும் தொண்மானின் செயற்பாடுகள்போல் அமைந்துவிடக்கூடாது.

## தேர்தல் கால திட்டம்

ஜனாதிபதித் தேர்தலுக்கு ஐ.தே.க. தயாராகி வருகிறது. மாவட்ட ரீதியாக குழுக்களை அமைத்து புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக்கொள்வதற்காக விசேட குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

ஐ.தே.கவின் இந்தத் திட்டத்திற்கு மத்தியில் ஐ.தே.கவிலிருக்கும் அதிருப்தியாளர்களை அரவணைத்துக்கொள்ள அரசாங்க உயர்மட்டம் மறைமுக நடவடிக்கைகளை எடுத்து வருகிறதாம். இதன்படி ஐ.தே.கவின் உறுப்பினர்கள் சிலருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேரம் பேசும் செயற்பாட்டில் அரசாங்கத்தின் முக்கியத்தர்கள் சிலர் இறங்கியிருக்கின்றனராம்.

அதேசமயம், அரசாங்கத்தில் அதிருப்தியாளர்களாக கருதப்படும் சிலரை வளைத்துப் போடுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் தயாராகி வருகிறதாம். ஜனாதிபதித் தேர்தல் கால பேரப் பேச்சுக்களின் முடிவை பொறுத்திருந்து பார்த்தால் போச்சு. பேரம் பேசுகிறோம் என்று கூறி மக்களை அடகுவைக்காமல் இருந்தால் சரி.

## ஆஸ்துமாவை ஏற்படுத்தும் வீட்டிலுள்ள பொருட்கள்

பெயிண்ட், வார்னீஷ், அறை நறுமணப் பொருட்கள், தரைவிரிப்புகள் மற்றும் அறையை — வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்ள உதவும் ரசாயன தயாரிப்புகள்.

இவற்றினால் வீட்டிற்கு நன்மைதான். அதில் ஒன்றும் பிரச்சினையில்லை. ஆனால் வீட்டில் உள்ள குழந்தைகள், சிறுசுகளுக்கு ஆஸ்துமா நோய் ஏற்படும் வாய்ப்பு அதிகமாக உள்ளதாம். (அய்யய்யோ!)

இந்த அதிர்ச்சி தகவலை பிரிட்டிஷ் மெடிக்கல் அசோசியேஷனின் பத்திரிகையான தோரக்ஸ் சமீபத்தில் வெளியிட்டுள்ளது.

''வீடுகளில் இருக்கும் மேற்படி பொருட்கள் வெளியேற்றும் வாயுக்கள் அங்கே வசித்து வரும் குழந்தைகள் — சிறுவர்கள், சிறுமியரால் சுவாசிக்கப்பட்டு, ஆஸ்துமா நோயை ஏற்படுத்தும் வாய்ப்புகளை பெருக்கிவிடுகிறது. இதை நிரூபிக்கும் வகையில் சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் 88 குழந்தைகளைக் கொண்டு ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. கர்ட்டின் தொழில்நுட்ப பல்கலைக்கழகத்தில் உள்ள பொதுநலப்பள்ளியைச் சேர்ந்த நிபுணர் கிராசி ரும்செவ் என்பவர் தலைமையில் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் மேற்படி பொருட்கள் அடங்கிய வீட்டின் அறைக்குள் இருந்த குழந்தைகளுக்கு மற்றைய குழந்தைகளைக் காட்டிலும் 4 மடங்கு ஆஸ்துமா நோய் ஏற்படும் வாய்ப்புகள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

மேற்கண்ட தகவல்களை அந்த ஆய்வு அறிக்கை வெளியிட்டுள்ளது.

நம் வீடுகளில், முடிந்தவரை ரசாயன பொருட்களை தவிர்ப்பது நலம்.


ORGAN/ VIOLIN NOTES

Organ, Guitar, வயலின், வீணை போன்ற இசைக்கருவிகளுக்கான சினிமாப் பாடல்களின் இசைக்குறிப்புகள்.

(பாகம் 1 முதல் 40 வரை)

'கேள்விஞானம்' ஆகிய புத்தகங்கள் விற்பனைக்கு உண்டு.

S.S.Rajeendran

Karaweena Isai Manram.

75,Temple Road, Nallur, Jaffna. T.P:0713055991

MILLENNIM NURSES TRAINING SCHOOL

தாதியர் பயிற்சி வகுப்பு - 2005/2006

கடந்த நான்கு வருடங்களாக, மிகத் திறமையாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் மிலேனியம் தாதியர் பயிற்சிக் கல்லூரியானது இதுவரை ஆயிரத்துக்கு மேற்பட்ட தாதிமார்களை உருவாக்கி உள்ளது. திறமை வாய்ந்த வைத்தியர்கள், வைத்தியத் தாதிமார்களால் நடத்தப்பட்டு வரும் இத்தாதியர் பயிற்சிக் கல்லூரிக்குப் புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட இருக்கின்றார்கள்.

கா.பொ.த சா/த பரீட்சையில் மிகக் குறைந்தது நான்கு பாடங்களிலாவது சித்தி பெற்றிருத்தல் அவசியம். 15.08.2005 இல் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி வகுப்புக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 09.08.2005 இல் நடைபெற உள்ளது.

ஆர்வமுடையோர் கிராமசேவகர் சான்றிதழ், கல்விப் பெறுபேற்றுச் சான்றிதழ், பிறப்புச் சான்றிதழ், அடையாள அட்டை என்பனவற்றுடன் கீழே உள்ள முகவரிக்குச் சமுகமளிக்கவும்.

MILLENIUM NURSES TRINING SCHOOL

(KERAWALAPITIYA JUNCTION) HENDALA ROAD, HENDALA, WATTALA.

T.P:- 011 2947570

பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன் தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்க முடியாது சக்தியை வீணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோயை உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரிழிவு, தலையிடி, வாதம், குழந்தைப் பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்துக்கும் வியாதி ஏற்படுவது போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை வீணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின்போது விந்து விரைந்து வெளிப்படுதலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோதத்துவ வைத்தியம் (PSYCHOTHERAPY) மூலமும் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரைச் செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஓடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

ஆகஸ்ட் 23 – 29 வரை சந்திக்கலாம் (விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

New Ahmed Tourist Inn, Bang Bang Building

10 - 1/A, Bankshall Street, Colombo - 11.

TEl No. 5368426, 368427

Hot Line: 0777 569205

வவுனியாவில்...

பின்னர் அறிவிக்கப்படும்

Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு

வவுனியா, Tel No. 024 2222974

Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

ஆகஸ்ட் 14 -20

A.S.N. சுற்றுலா விடுதி

392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்

Hot Line: 0777 569205

Tel No. 021 2223181

021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.

**பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:-**
பித்தனிடம் நீங்கள் எத்தனை கேள்விகளையும் கேட்கலாம். தரமான கேள்விகளுக்கு பித்தன் பதில் அளிப்பான். நீங்கள் அனுப்பும் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி:-



பித்தன் பதில்கள்
'சுடர் ஒளி வாரஇதழ்'
85, ஜெயந்த மல்லிமாராய்ச்சி மாவத்தை,
கொழும்பு - 14

*வை.ராம்ராஜ், கொட்டகலை.*

**கேள்வி:— அண்ணனும் நோக்கி — அவளும் நோக்கினால் அடுத்து என்ன நடக்கும்?**



**பதில்:—** கதவைத் திறக்க முடியாமல் போகும். ஏனென்றால் அண்ணனிடமும் no key அவளிடமும் no key.

*ச.பித்துப் பிரியன், மல்லாவி.*

**கேள்வி:— பித்தா! அண்மைய கால தமிழ் சினிமா பாடல்கள் கேட்டீரோ... தமிழைக் கொலை செய்கிறார்களே?**

பதில்:— உதித் நாராயண் என்ற பாடகரின் பாடல்கள் என்றால் உடனே வானொலியை பாய்ந்துபோய் நிற்பாட்டி விடுவேன். அவருடைய பாடலைக் கேட்டால் எனக்கு எனது தமிழ் மறந்துவிடுமோ என்ற பயம்.

இதுபோதாததற்கு அண்மையில் வெளியான 'சந்திரமுகி' படத்தில் 'கொஞ்சம்நேரம் கொஞ்ச நேரம்' என்ற பாட்டை ஹிந்தி பாடகி ஆஷாபோஸ்லேயை வைத்து பாடப்பண்ணியிருக்கிறார்கள். அதிலே அவர் தமிழை படுகொலை பண்ணி இருக்கிறார் பாருங்கள்... கேட்கவே சகிக்கவில்லை. 'ஒனக்காக ஏங்கும் எதிர்காலம்' என்ற கவிஞரின் வரியை அவர்' 'ஒண்ணுக்காக ஏங்கும் எதிர் காலம்' என்று பாடியிருக்கிறார்... எவ்வளவு மட்டமான தமிழ்கொலை. இதையெல்லாம் தமிழுக்காக குரல் கொடுக்கும் ராம்தாஸ் போன்ற தமிழக அரசியல்வாதிகள் தட்டிக் கேட்கமாட்டார்களோ...

*வ.தவசீலன், மல்லாவி.*

**கேள்வி:— பித்தா நீர் முன்னர் தந்த கவிதை ஒன்று எனக்கு வாழ்க்கையிலே நம்பிக்கையை ஏற்படுத்தியது. அதேபோல் இன்னுமொரு கவிதை பிளீஸ்?**

பதில்:— அந்தக் கவிதை எனது சொந்தச் சரக்கல்ல... ஒரு தமிழக சஞ்சிகையிலே சுட்டது... அதேபோல் சுட்டது ஒன்று இது...

தோல்விகள் — வெற்றிக்குத்தான்,
துவள்வதற்கல்ல —
துயரங்கள் உயர்வதற்குத்தான்;
அயர்வதற்கல்ல.
சிரமங்கள் — சிகரத்திற்குத்தான்;
சிதைவதற்கல்ல.
காயங்கள் — போற்றுவதற்குத்தான்;
ஆற்றுதற்கல்ல.
முற்றுப்புள்ளிகள் — முன்னுரைக் குத்தான்;
முடிவுரைக்கல்ல.
ஓ... இளைஞனே;
வீழ்வது — எழுவதற்குத்தான்
அழுவதற்கல்ல...

*ச.கபிலன், மொறட்டுவ.*

கேள்வி:— பித்தா! உமது கேள்வி — பதில் பகுதியை வாசித்துவிட்டு அதனை பாராட்டி கடிதம் எழுதுவார்களே... அந்தக் கடிதங்களைப் பார்த்து விட்டு என்ன நினைப்பீர்?

பதில்:— 'இன்னா செய்தாரை ஒறுத்தல் — அவர் நாண நன்னயம் செய்துவிடல்' என்ற பழமொழியை நினைத்துக் கொள்வேன்.

*ப.சன்னாசி, செல்வாநகர்*


கேள்வி:— ஹெல உறுமய பிக்குமார்கள் யாராவது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் நம் நாட்டு நிலைவரம் எப்படி இருக்கும்?

பதில்:— நாட்டிலே உள்ள அனைவரும் புத்த சமயத்தை தான் பின்பற்ற வேண்டிவரும், குடிமக்கள் அனைவரும் காவி உடைதான் அணிய வேண்டும் என்று சட்டம் வரும். சிங்களம் தவிர வேறெந்த மொழியையும் எவரும் படிக்கக்கூடாது. படிப்பிக்கக் கூடாது — பேசக்கூடாது என்று கண்டிப்பான கட்டளைகள் பிறக்கும். ஆப்கானிஸ்தானில் பின்லேடனின் தலிபான்கள் ஆட்சியை பிடித்துவிட்டு முஸ்லிம் சட்டங்களை எவ்வளவு இறுக்கமாக்கினார்களோ அதேபோன்ற ஒரு நிலைமை இங்கே வந்து பௌத்த சட்டங்கள் தீவிரமாக்கப்படும்.

*க.வாணி, வவுனியா.*

**கேள்வி:— பித்தா! எப்போதும் நகைச் சுவையாக ஜோக் மட்டும் சொல்லிக் கொண்டேயிருக்கிறீரே.. இம்முறை ஒரு மாற்றத்திற்காக நகைச்சுவையான ஒரு பழமொழி சொல்லும் பார்ப்போம்?**

**பதில்:—** ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால்...



உங்கள் மனைவி சந்தேகப்படுவாள்...

*சி.குகானந்த், விசுவமடு.*

**கேள்வி:— பித்தா! உமது குடும்பநிலைமையை நினைத்து வருந்துகிறேன். இனிமேல் நான் பெண்களை நினைத்தே பார்ப்பதில்லை என்று முடிவு செய்துள்ளேன் எப்படி என் முடிவு?**

பதில்:— நல்ல முடிவு... வரவேற்கப்பட வேண்டிய முடிவு... பாராட்டு விழாவே நடத்தலாம். அது சரி.. உம்முடைய அதே பெயரில் — அதே விசுவமடுவிலிருந்து — அதே கையெழுத்துடன்... ஒரு கடிதம், காதலாகிக் கசிந்து, கண்ணீர் மல்கி ஒரு பெண் மீது பாசம் வைத்துவிட்டதாயும், பிரிய முடியவில்லையென்றும், உம்மை புரிந்து கொள்கிறாள் இல்லை என்றும் எழுதி வடித்திருக்கிறீரே இதற்கு என்ன?

*சி.ஸ்ரீநாத், கோணாவில்.*

**கேள்வி:— மைடியர் பித்துக் குட்டி! காதலிக்கப்பயப்படும் ஆண்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்?**



பதில்:— சூடு கண்ட பூனைகளாக இருக்கும் — மீண்டும் அடுப்பங்கரைக்குப் போக பயப்பிடும் தானே.

*ரவி—வட்டக்கச்சி*

**கேள்வி:— பித்து மாமா! திருமணம் செய்த பெண்கள் தாலி, குங்குமம், மெட்டி என்று அணிகிறார்கள். ஆனால் ஆண்கள் திருமணம் செய்துவிட்டதைக் காட்ட எதுவும் அணிவதில்லையே?**

பதில்:— அவர்கள் அணிகலன்கள் எதுவும் அணிவதில்லை தான். ஆனால் எப்போதுமே அடுப்பங்கரையில் நின்று சமைத்துச் சமைத்து மூஞ்சி கறுத்துப் போயிருக்கும், உடுப்புத் தோய்த்து தோய்த்து கைகள் சிவந்துபோயிருக்கும், மாவிடித்து அல்லது சம்பல் அரைத்து விரல்கள் கன்றிப்போயிருக்கும், சட்டி, முட்டிகளால் எறிவாங்கி மண்டை வீங்கிப் போயிருக்கும், தோசைக் கரண்டியால் சூடுவாங்கி கையிலே சூட்டுக் காயம் இருக்கும், அடிவாங்கி முதுகிலே கண்டல் காயம் இருக்கும், இவைகளைவிட 35 — 40 வயதிலேயே கண்கள் குழி விழுந்து, தலை நரைத்து, கூனிக் குறுகிய தோற்றம் தெரியும். இப்படி எத்தனையோ? இதற்கு அணிகலன்கள் இருக்கும்போது செயற்கையாக அணிகலன்கள் தேவையா என்ன?

*கலட்டி சாலினி, யாழ்ப்பாணம்.*

**கேள்வி:— பித்தா! உனக்கென இருப்பேன் — உயிரையும் கொடுப்பேன் உன்னை நான் பிரிந்தால்... உனக்கு முன் இறப்பேன் என்கிறார்களே! உண்மையா — பொய்யா பித்தா?**

பதில்:— சாலினி.... இந்தபாட்டிற்கு இசையமைத்த இசையமைப்பாளரே... இதனை கடைப்பிடிக்க முடியாமல் சொந்த பொண்டாட்டியை விட்டுட்டு — இன்னொருத்தியோடை ஓடிட்டார். அவராலேயே முடியேல்லையே! மற்றவர்களால் எப்படி?

*செ.அஜந்தன் — வல்வெட்டி*

கேள்வி:—பித்தா காதலிப்பது தவறா?

பதில்:— நான் எங்கோ படித்த ஒரு கவிதை நினைவுக்கு வருகிறது. உமக்கு இந்தக் கவிதை பதிலாக அமையலாம்.

# பித்தன் பதில்கள்



*பண்பைப் பெற தாத்தா*
*பாசத்தைப் பெற பாட்டி*
*அன்பைப் பெற அம்மா*
*அறிவைப் பெற அப்பா*
*பரிவைப் பெற அண்ணா*
*மகிழ்வைப்பெற அக்கா — இவை*
*அனைத்தையும் இழக்க காதலி.*

*வ.கோமதி—தாவடி*

கேள்வி:— பித்தா காதல் என்பது முட்டாள்கள் செய்கிற புத்திசாலித்தனமாக காரியமா அல்லது புத்திசாலிகள் செய்கின்ற முட்டாள்தனமான காரியமா?

பதில்:— புத்திசாலிகளும் — முட்டாள்களும் — சேர்ந்து செய்கின்ற முட்டாள்தனமான புத்திசாலிக்காரியம்.

*கு.மாறன் ஈச்சிலம்பற்று*

**கேள்வி:— பித்தா ஒரு ஆண் திருமணத்திற்கு முன் எப்படி இருப்பான், திருமணத்திற்குப் பின்பு எப்படி இருப்பான்?**

பதில்:— தி.முவில் — சிங்கமாக
தி.பியில் — அசிங்கமாக

*எஸ்.கலா, கொழும்பு.*

**கேள்வி:— பித்தா! ஒரு ஆணைக் காதலிக்க வேண்டுமானால் பெண் என்ன செய்ய வேண்டும் பித்தா?**



பதில்:— ஒன்றுமே செய்ய வேண்டியதில்லை. தெருவிலே நடந்து போனாலே போதும்.

*ஆர்.தேவி — மட்டக்களப்பு*

**கேள்வி:— பித்தா! எனக்கு வரப்போகிற மாப்பிள்ளை எனக்கு அடங்கிப் போகிறவராகவும் — அதேவேளை நான் அடக்கி ஆள்கிறவராகவும் புத்திசாலியாகவும் — அதேவேளை கொஞ்சம் வெலுத்தி ஆகவும், அழகுள்ளவராகவும், எனது பேச்சைக் கேட்பவராகவும் — எதிர்த்துக் கதைக்காதவராகவும் வீரமுள்ளவராகவும் — ஆனால் என்னிடம் தனது வீரத்தை காட்டாதவராகவும், நிறைய சம்பாதிப்பவராகவும் — அதேவேளை சம்பாதித்ததை எல்லாம் என்னிடமே தருபவராகவும் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறேன். கிடைப்பாரா?**

பதில்:— தேவி. ஆண்களில் இளிச்ச வாயங்களுக்கு பஞ்சமா என்ன? தாராளமாகக் கிடைப்பார்கள்.

# ரணிலா? மஹிந்தவா?...

*(06 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

போர்நிறுத்த சூழ்நிலையில் சர்வதேசப் பிரசாரங்களில் அரசாங்கத்துக்கு ஒருபடி முன்னே சென்று நிற்கிறார்கள் விடுதலைப் புலிகள். நெருக்கடி ஒன்றின்போது தமிழர் தரப்புக்கு ஆதரவாக சர்வதேசம் குரல் கொடுக்க முன் வராவிட்டாலும் முன்னரைப் போல உபத்திரவம் கொடுக்க மாட்டாது என நிச்சயமாக நம்பலாம்.

இவையெல்லாம் இங்கே ஏன் எடுத்துக் காட்டப்படுகின்றன என்றால், தமிழ் மக்கள் இன்று பலமான நிலையில் இருக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ளவே. எமது மக்கள், ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது பற்றி காலம் கனியும்போது யோசித்து சரியான முடிவை எடுக்கத் தவறமாட்டார்கள். அதேநேரம் தென்னிலங்கையுடன் பிரிந்து வாழ்வதா அல்லது பொருந்தி வாழ்வதா என்ற முடிவு எடுப்பதில் தமிழ்த் தலைமை இனியும் பின்நிற்கக்கூடாது. முடிந்த முடிவை நோக்கிய பயணம் தொடர வேண்டும் என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த எதிர்பார்ப்பு. ஏனென்றால் பேசிப் பயனில்லை என்பது அவர்களுக்குத் தெளிவாகத் தெரியம்.

# வந்துவிட்டது செயற்கைத் தோல்



தீக்காயம் அடைந்தவர், கொதி நீரினால் பாதிக்கப்பட்டவர், ரசாயனப் பொருட்கள் பட்டு தோல் பாதிக்கப்பட்டவர்.... அத்தனை பேர்களும் இப்பாதிப்புகளிலிருந்து குணம் பெற்றாலும் அவர்களின் தோல் பகுதி பெருமளவு பாதிப்படைவது உறுதி. கருமையாகவோ, வெள்ளையாகவோ வடு அல்லது தழும்பாகவோ அந்த இடம் மாறிவிடும். இவர்களுக்காக... ஒரு புதிய செயற்கைத் தோலை அமெரிக்க நுண்ணுயிர் விஞ்ஞானி ஒருவர் உருவாக்கியுள்ளார். மரப்பசைபோல் பிசுபிசுப்பான கலவைப் பொருட்களால் இச் செயற்கைத் தோல் தயாரிக்கப்பட்டுள்ளது. இது நண்டின் மேற்கூடு, இறந்த புழு பூச்சிகளின் காய்ந்து போன கூடு ஆகியவற்றின் கெட்டியான மாவாகத் தயாரிக்கப்பட்ட சிட்டோசன் எனும் கலவைப் பொருள் ஆகும்.

இந்தச் செயற்கைத் தோலை காயம்பட்ட இடங்களிலோ, விபத்து நடந்த அதே இடத்தின் தோலின் மீதோ போட்டுவிட்டால், அப்படியே அது பொருந்திக் கொள்ளும். பிளாஸ்டிக் அறுவைச் சிகிச்சை நிபுணர்களால்தான் இந்த செயற்கைத் தோலைப் பொருத்த முடியும்.

# தமிழ்காங்கிரஸில் ஏற்பட்ட பிளவும்
# தமிழரசுக்கட்சியின் உதயமும்



நாடு சுதந்திரம் அடைந்த நாளில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் வரை இடம் பெற்ற முக்கிய அரசியல்நிகழ்வுகளை உள்ளடக்கியது 'தமிழ் தேசத்தின் வீழ்ச்சியும் எழுச்சியும்' (The Fall and Rise of the Tamil Nation)

தற்போது 96 வயதை எட்டிய நிலையில் கனடாவில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஊர்காவற்றுறை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம் ஆங்கிலத்தில் எழுதிய இந்த நூலின் தொகுப்பு தொடர் அரசியல் கட்டுரையாக சுடர்ஒளி வாரமலரில் வெளிவருகிறது. படியுங்கள்.

ஜீஜீபொன்னம்பலம் அமைச்சர் பதவி ஏற்று அரசாங்கத்தில் சேர்ந்துகொண்டதாலும் மலையக மக்களின் வாக்குரிமையைப் பறித்த தேர்தல் சட்டத் திருத்தமசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்து மலையக மக்களைக் கைவிட்டதாலும் தமிழ்க் காங்கிரஸில் பிளவு ஏற்பட்டது.

தமிழ் காங்கிரஸின் நிர்வாக சபைக் கூட்டம் நடைபெற்றபோது இந்த பிளவு வெளிப் படையாகத் தெரிந்தது.

சிங்களவர்களின் மேலாதிக்கத்தைத் தொடர்ந்து எதிர்ப்பது என்பதில் உறுதி கொண்ட ஒரு பிரிவினர் காங்கேசன்துறை எம்.பி. எஸ்.ஜே.வி. செல்வநாயகம், கோப்பாய் எம்.பி. சி.வன்னியசிங்கம், திருகோணமலை எம்.பி. சிவபாலன், செனேட்டர் டாக்டர் ஈ.எம்.வி.நாகநாதன், செனேட்டர் டாக்டர் வி.கே. பரமநாயகம் (தமிழ் காங்கிரஸ் பொதுச் செயலாளர்) ஆகியவர்களின் தலைமையில் நிர்வாகசபைக் கூட்டத்திலிருந்து வெளியேறினார்கள். சாவகச்சேரி எம்.பி. வி.குமாரசாமி மாத்திரம் பொன்னம்பலத்தை ஆதரித்து நின்றார். பின்னர் இவர் நாடாளுமன்றச் செயலாளராகப் பதவி பெற்றார்.

தமிழ்க் காங்கிரஸிலிருந்து வெளியேறிய பிரிவினர் இலங்கை தமிழ் அரசுக் கட்சி என்ற பெயரில் (சமஷ்டி கட்சி- Federal Party) ஒரு கட்சியை உருவாக்குது என்று தீர்மானித்து அதற்கான பிரசாரத்தையும் ஆரம்பித்தனர்.

அச்சமயம் எஸ். தொண்டமான், ராஜலிங்கம், சி.வி.வேலுப்பிள்ளை, ராமானுஜம், எஸ்.எம்.சுப்பையா கே.வி நடராஜா முதலியவர்கள் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்து வந்தனர்.

### எஸ்.ஜே.வியுடன் மலையகத்தவர் ஆலோசனை

வாக்குரிமை பறிக்கப்பட்ட சட்டத்தினால் எழுந்திருந்த நிலைமையை எவ்வாறு எதிர் கொள்வது என்பதே அப்போது இந்த மலையக எம்.பிக்களின் சிந்தனையாக இருந்து வந்தது.

எஸ்.ஜே.வி.செல்வநாயகத்திடம் அவர்கள் உயர்மதிப்பும் மரியாதையும் வைத்திருந்ததினால் அவருடன் ஆலோசனை நடத்தினார்கள். செல்வநாயகம் சிறந்த சட்டத்தரணியும் ராணிவழக்குரைஞராகவும் இருந்தார். அவர் அப்பழுக்கற்ற ஒழுக்க சீலராகவும் கண்ணியமிக்க கனவானாகவும் இருந்தார். மலையக மக்களுக்கு நீதி கிடைப்பதற்காகவும் பாடுபட்டார். அதனால்தான் அவர் மீது இந்த மலையகத் தலைவர்கள் மதிப்பு வைத் திருந்தார்கள். அவருடைய ஆலோசனையின் பேரில் இலங்கையிலும் இந்தியாவிலுமிருந்த சட்டநிபுணர்களோடு ஆலோ



நாகநாதன்

சனை செய்தார்கள்.

மலையக மக்களின் பிரஜாவுரிமையையும் வாக்குரிமையையும் பறித்த இலங்கை பிர ஜாவுரிமைச் சட்டம், தேர்தல் திருத்த சட்டம் ஆகியவை அரசமைப்பின் 29 ஆவது ஷரத்தினை மீறுபவையாக விருப்பதாகவே அச்சமயம் பொது அபிப்பிராயம் நிலவி வந்தது. எனவே நீதிமன்றத்தில் இந்தச் சட்டங்களை எதிர்த்து வழக்குத்தாக்கல் செய்யவேண்டும் என்றும் கருத்து எழுந்தது. எனவே மலையகத் தோட்டத் தொழிலாளர் தலைவர்கள் இச்சட்டங்களை எதிர்த்து வழக்கு தொடர்வதென தீர்மானம் செய்தனர்.

இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் மற்றும் தேர்தல் திருத்தச்சட்டம் முதலியவை அரசியல் அமைப்பின் 29ஆவது ஷரத்துக்கு மாறானவை என்றும் தோட்டப்பகுதியில் வாழும் மக்களுக்கு பாரபட்சம் காட்டுபவையாக அமைந்திருப்பதாகவும் தெரிவித்து அச் சட்டங்களை செல்லுபடியற்றவை என பிரகடனப்படுத்தும்படி நீதிமன்றத்தை கோருவதென்று முடிவு செய்யப்பட்டது. அதற்கான ஆயத்த ஏற்பாடுகளும் ஆரம்பிக்கப்பட்டன.

### கொடக்கான்பிள்ளை எதிர் முதநாயக்க வழக்கு

இதன் பிரகாரம் அடுத்துவந்த வருடாந்த தேர்தல் இடாப்பு மீளாய்வின் போது, கொடக்கான் பிள்ளை என்பவர் தமது பெயர் கேகாலை மாவட்டத் தேர்தல் பதிவேட்டில் பதியப்பட வேண்டும் எனக்கோரி மனுசெய்திருந்தார்.

பதிவு செய்யும் அதிகாரியாக விளங்கிய



தந்தை செல்வா

நாடாளுமன்ற தேர்தல்கள் உதவி ஆணையாளர் முதநாயக்க என்பவர், கொடக் கான் பிள்ளை புதிய சட்டத்தில் கோரப்பட்டிருப்பதற்கு அமைவாக தாம்ஒரு இலங்கையின் பிரஜை என்பதை நிரூபிக்கத்தவறி விட்டார் எனக்கூறி இருந்தார்.

இந்த வழக்கை முன்னெடுப்பதில் தேசியப்பணியாகக் கருதி சட்டவல்லுநர்கள் குழு ஒன்று தீவிரமாக செயல்படத் தொடங்கியது. கொழும்பு சட்ட வல்லுநர்கள் மத்தியில் சிரேஷ்ட வழக்குரைஞராக விளங்கிய எஸ். நடேசன் (பின்னர் செனட்டராகவும் ராணி வழக்குரைஞராகவும் விளங்கி னார்) வழக்கை இலவசமாக முன்னின்று நடத்த ஒப்புக்கொண்டார். ரி.கனகராஜா் என்ற இளம் வழக்குரைஞர் அவருக்கு உதவியாக இருந்தார்.

தேர்தல் ஆணையாளரின் நிராகரிப்பை எதிர்த்து கொடக்கான்பிள்ளை கேகாலை நீதிமன்றில் மேன்முறையீடு செய்தார். அக்காலத்தில் கொடக்கான்பிள்ளை எதிர் முத நாயக்க என்று இந்த வழக்கு பிரபலமாகியது.

கொடக்கான்பிள்ளை சார்பில் சாட்சியங்களாக ஏராளமான சத்தியக் கடதாசிகள் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. அதில் ஒன்று எஸ்.தொண்டமான் சார்பிலானதாகும்.

கொடக்கான்பிள்ளை சார்பில் எஸ்.நடேசன் ஆஜராகி வழக்கை நடத்தினார். அரசாங்கத்தின் சார்பில் அப்போதைய சட்டமா அதிபர் சேர்.அலன்றோஸ் ஆஜராகி வாதிட்டார். நீண்டவாதங்களுக்குப் பிறகு கேகாலை மாவட்ட நீதிபதி என்.சிவஞானசுந்தரம் வழங்கிய தீர்ப்பில் புதிய சட்டங்கள் அரசியல் அமைப்பின் 29ஆவது ஷரத்தை மீறுவதாக உள்ளனவென்று அறிவித்ததுடன் அதனால் அவை செல்லுபடியற்றவை என்றும் தெரிவித்தார்.

இதையடுத்து அரசாங்கம் உயர் நீதிமன்றுக்கு மனுசெய்தது. மூன்று நீதியரசர்கள் அடங்கிய நீதிமன்றம் இந்த மனுவை விசாரித்தது. அச்சட்டங்கள். (இலங்கை பிரஜாவுரிமைச்சட்டம் தேர்தல் திருத்தச் சட்டம்) நாடாளுமன்றத்தின் அதிகாரங்களுக்குப் புறம்பானவை அல்ல என தெரிவித்ததுடன் கேகாலை மாவட்ட நீதிபதி அளித்திருந்த தீர்ப்பையும் உயர் நீதிமன் றம் இரத்து செய்தது.

கொடக்கான்பிள்ளை பிரிவிக்கவுன்சிலுக்கு (Privy council) மேன்முறையீடு செய்தார்.

பிரிவி கவுன்சிலும் மனுவை நிராகரித்தது.

நிராகரித்ததுக்கு கூறப்பட்ட காரணங்களில் ஒன்று, இலங்கையில் தோட்டப் பகுதிகளில் குடியேறிவுள்ளவர்களின் அண்மைக் கால வம்சாவளியினரை 29 ஆவது ஷரத்தில் கருதப்பட்டிருப்பது போல் ஒரு 'சமூகம்' என்று ஏற்கவியலாது என்பதே. சமூகம் என்பதற்கான அடையாளத்தை உறுதிப்படுத்தக் கூடியதாக இல்லை என்றும் தீர்ப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து இந்த மக்கள் இலங்கையில் வேலை செய்வதற்காக கொண்டு வரப்பட்ட காலத்தில் அவர்கள் இலங்கையில் நிரந்தரமாகக் குடியமர்த்தப்படுவார்கள் என்று பிரிட்டன் வழங்கியிருந்த வாக்குறுதிகள் எல்லாம் காற்றில் பறந்துவிட்டன. இவ்வாறு பாதிப்புக்குள்ளான மக்களை பிரிட்டன் கைவிட்டுவிட்டது.

### மலையக மக்களின் வாழ்வியல் நிலைமை

கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வியல் நிலைமை மிக மோசமாகவே இருந்தது. ரஷ்ய ஜார் மன்னனின் ஆட்சியில் சேர்பிய மக்களின் நிலைக்கு இவர்களின் நிலைமையையும் ஒப்பிடக் கூடியதாய் இருந்தது.

லண்டனிலிருந்து செயல்பட்ட தோட்டக் கம்பெனிகள் றப்பரையும், தேயிலையையும் உற்பத்தி செய்யும் இயந்திரங்கள் போலவே இவர்களைக்கருதின. இயந்திரங்களாவது காலத்துக்குக்காலம் பழுது பார்க்கப்பட்டு திருத்தப்படுவதுண்டு. இவர்களுக்கு அதுவும் கிடையாது. இவர்களின் வாழ்வியல் நிலைமைகளும் தொழில் சூழ் நிலைகளும் வர்ணிக்க முடியாதளவுக்கு மோசமாக விருந்தன.

1930ஆம் ஆண்டு இந்திய தேசிய காங்கிரஸ் தனது பிரதிநிதியாக பண்டிதர் ஜவஹர்லால் நேருவை இலங்கைக்கு அனுப்பி இந்த மக்களின் நிலைமைகளை ஆராயும்படி பணித்திருந்தது. இந்த மக்கள் யாருமற்ற அனாதைகள்போல் இருப்பதை அவர் கண்ணுற்றார்.

பிரிட்டிஷ் அரசாங்கமோ, இந்திய அரசாங்கமோ இலங்கை அரசாங்கமோ இவர்கள் விடயத்தில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை. ஐரோப்பியர்களான தோட்டத்துரைமார்கள் இவர்களை கால்நடைகளைப் போல நடத்தினார்கள். மிகக்குறைந்த வேதனத்தைக்கொடுத்து எவ்வளவுக்கு முடியுமோ அவ்வளவுக்கு இவர்களிடம் வேலை வாங்கினார்கள். இவர்களின் வேலைகளை மேற்பார்வை செய்த கங்காணிகள் இந்தியாவிலிருந்து இவர்களை பேரம் பேசி கொண்டுவரும் முகவர்களாக செயல்பட்டவர்கள்- தாங்களும் தமிழர்களாய் இருந்தும் கூட அவர்களை அடிமைகள் போல நடத்தினார்கள். இலங்கைத் தமிழர்களும் அவர்களை ஒரு பொருட்டாகக் கருதவில்லை.

இந்த நிலைமையில் அந்த மக்களின் வாழ்வை முன்னேற்றும் முதல்படியாக தங்களை தொழிற்சங்க ரீதியில் அவர்கள் ஒன்றிணைந்து கொள்ளவேண்டும் என்று நேரு ஆலோசனை வழங்கினார். அவர்களின் நலன்களில் அக்கறைசெலுத்தும் ஸ்தாபனமாகவும் அவர்களின் சார்பில் பேசும் பேச்சாளராகவும் இது விளங்க முடியும் என்று நேரு கூறியிருந்தார்.

நேருவின் ஆலோசனையை ஏற்றுக் கொண்டு அம்மக்கள் இலங்கை - இந்திய காங்கிரஸ் கட்சியை 1930 களில் தோற்றுவித்தார்கள். அதன் ஆரம்பகாலத்தலைவர்களாக பெரிசுந்தரம், ஜோர்ஜ் ஆர்.மோத்தா, நடேசஐயர், எச்.செல்லையா மற்றும் எக்ஸ். பெரெய்ரா முதலியவர்கள் இருந்தார்கள்.




அவர்களின் நலன்கருதி இலங்கை இந்தியகாங்கிரஸ் அக்கறை கொண்டிருந்தது போல் அந்த மக்களின் நலனின் அக்கறைக் கொண்டு செயற்பட்டவர்களில் பெரிசுந்தரத்தை மட்டுமே குறிப்பிடமுடியும்.

அவர் வசதியடைந்த மலையகக் குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவராய் இருந்தார். அவர் ஒரு பாரிஸ்டா. இங்கிலாந்து சட்டத் துறையில் பணியாற்றியவர். இலங்கை சட்டக் கல்லூரியில் ஒரு விரிவுரையாளர். லண்டன் பல்கலைக்கழ கத்தில் பட்டம் பெற்ற சட்டவறிஞர். பிற்காலத்தில் டொனமூர் திட்டத்தின் கீழ் உருவான அமைச்சர் சபையில் ஓர் அமைச்சராகவும் பதவிவகித்



வன்னியசிங்கம்

தவர்.

இலங்கைத் தமிழர்களின் தலைவர்களினதும் மேல் ஆதிக்க மனப்பான்மையை வைத்துப் பார்க்காமல் கண்டிப்பவராக பெரிசுந்தரம் விளங்கினார்.

ஜோர்ஜ் ஆர். மோத்தா கொழும்பில் சட்டத்தரணியாகவிருந்தவர் எப்.எக்ஸ். பெரெய்ரா கொழும்பில் பிரபலமான வர்த்தக

**தமிழில் - ஷபேனா'**

கர். இவர்கள் கொழும்பிலேயே வதியும் சமூகத்தவர்களாக இருந்தனர். நடேசஐயரும் செல்லையாவும் பத்திரிகையாளர்கள். சோல்பரித் திட்டத்திற்கு முன்பதாக மலையகத் தமிழர்களை பிரதிநிதித்துவம் செய்த தலைவர்கள் இவர்கள்தான்.

சுதந்திரன் பத்திரிகை நடேசஐயரால் ஆரம்பிக்கப்பட்டு அவரே ஆசிரியராகவுமிருந்தார். அவர் காலத்தில் அது கொழும்பிலிருந்து தினசரியாக வெளிவந்தது. மலையக மக்களின் நலன்களுக்கே முக்கியத்துவம் கொடுத்தது.

அதேகாலத்தில் எச்.செல்லையா வீரகேசரி பத்திரிகையை ஆரம்பித்திருந்தார். கொழும்பில் செட்டியார் தெருவில் இருந்த நகரத்தார் சமூகத்தினர் அவருக்கு உதவியாக விருந்தனர்.

அந்தக் காலத்திலும் சரி பிற்காலத்திலும் சரி வெகுகாலம் வரை இலங்கைத் தமிழர்களால் ஒரு தேசியப் பத்திரிகை கட்டியெழுப்பப்படவில்லை என்பது ஒரு விசித்திரமான உண்மைதான்.

(தொடரும்)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



புகழுடன் மண்ணில்
**31.12.1934**

புகழுடன் விண்ணில்
**09.07.2005**

சொல்லேருழவன்

## அந்தோனிப்பிள்ளை அந்தனிசில்

தந்தையே தந்தையே தேனமுதே எங்களுயிர்
விந்தைகள் பல புரிந்து செப்பாமல் சென்றதெங்கே?
ஒப்பற்ற உங்களுயிர் மண்விட்டு போயிங்கு
முப்பத்தொன்று ஆனதனால் வெம்பிமனம் அழுகிறதே!

சிறுபராயம் முதல் இயலா முதுமைவரை
உறுதியுடன் நின்று தமிழுக்காய் வாழ்ந்தனையே
கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிட
நல்வழி காட்டி எம்மை வளர்த்தனையே
அறிவுக்கு ஆதாரமாய் திகழ்ந்த சொல்லேருழவரே
முறிந்து போனது மக்கள் மனங்களையா!

பிஞ்சு அகவைதனில் கொஞ்சு தமிழதை
பஞ்சமின்றி கற்று புலமை பெற்றீரே
அஞ்சா நெஞ்சமுடன் வெளியிட்ட தீப்பொறி
நின் திறமைதனை பறைசாற்றி நின்றதுவே
சிங்கக் குரலோன் எனும் நாமம் பெற்றிங்கு
நடமாடும் பல்கலைக்கழகம் ஆனீரப்பா!

ஆண்டுகள் பல உருண்டோடி விடினும்
மாண்டு போன் ஆருயிர் அப்பாவே உங்கள் நினைவதை
இப்புவிதனில் வாழும்வரை நாம் மறந்திலோம்
தமிழ்கூறு நல்லுலகு செழித்திட நல்லாசி தந்திடப்பா!



அன்பு மனைவி, மகன்மார் கட்டபொம்மன் (காலமானார்), தமிழோவியன் (லண்டன்), கஜேந்திரன் (காலமானார்), கவீந்திரன் (டென்மார்க்), கலைத்தீபன் (லண்டன்), ராஜ்குமார் (கட்டார்), மகள்மார் தேன்மொழி (இந்தியா), ரஜனி, அருள்மொழி (இந்தியா), கவிதா, அமுதமொழி, யாழினி, சகோதர சகோதரிகள் பத்திநாதர், சபீனார், மரியதாஸ், அன்ரன் சேவியர் (பிரான்ஸ்) பீதாம்பரம் மேரி விக்டோறியா (கனடா), ராஜேஸ்வரி (காலமானார்), பாலசுப்ரமணியம் பசிந்தா மற்) றும் மருமக்கள், மருமகள்கள், பேரப்பிள்ளைகள்.

*இல: 616, கோரியடி றோட்,*
*மட்டக்களப்பு.*

# மிகப்பரந்த CDMA
# வலையமைப்பில் முதன்முறையாக
# வீட்டுத்தொலைபேசிக்கும் SMS வசதி

சண்டெல் வழங்கும் "போயாச்சு வாங்கியாச்சு வந்தாச்சு" தொலைபேசி. வீட்டுக்கு வாங்கி வந்ததுமே பேசலாம். பேச விரும்பாவிட்டால் SMS அனுப்பலாம்.

**2005 நவம்பர் 01 வரை SMS பாவனை இலவசம்.**

(தற்போது, இந்த SMS வசதி CDMA தொலைபேசி வலையமைப்பிற்குள் மட்டுமே)




## நாடெங்கிலுமுள்ள சண்டெல் சேவை நிலையங்கள்

**பிரதான நிலையங்கள்**

| | |
|---|---|
| **கொழும்பு** - 10, எக்செல் வேர்ல்ட், 338, ரி.பீ. ஜயா மாவத்தை. | 011-4920000 |
| **கொழும்பு 2** - 110, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை. | 011-4747490-1 |
| **நுகேகொட** - 132, ஹைலெவல் வீதி. | 011-4304492 |
| **கல்கிசை** - 294, காலி வீதி. | 011-4747534 |
| **குருநாகல்** - 193, கொழும்பு வீதி. | 037-4690000 |
| **கண்டி** - 220, கொழும்பு வீதி. (சேர் பெறற் சொய்ஸா வீதி) | 081-4474700-4 |
| **காலி** - 143, கொழும்பு வீதி, களுவெல்ல. | 091-4389389 |

**பிராந்திய நிலையங்கள்**

| | |
|---|---|
| **கம்பஹா** - 17/A, ஹோலி குறோஸ் வீதி. | 033-4920000-1 |
| **நீர்கொழும்பு** - 6E, டொக்டர் ஹெக்டர் ஜயலத் பெர்னாண்டோ மாவத்தை. | 031-4920000-1 |
| **ஜா எல** - 92/1, நீர்கொழும்பு வீதி. | 011-4920022-3 |
| **வத்தளை** - 165/C, நீர்கொழும்பு வீதி. | 011-4920011-2 |
| **புத்தளம்** - 56, 1ஆம் மாடி, கே.கே. வீதி. | 032-4920000-1 |
| **குளியாப்பிட்டி** - 194, 1ஆம் மாடி, பிரதான வீதி | 037-4920000-1 |
| **மாலபே** - 835 3/A, புதிய கண்டி வீதி. | 011-4920033-4 |
| **ஹொரணை** 25 ½, பாணந்துறை வீதி. | 034-4920011-2 |
| **பாணந்துறை** - 1ஆம் மாடி, 350B, காலி வீதி. | 038-4920000-1 |
| **களுத்துறை வடக்கு** - 8, நவோதய வீதி. | 034-4920000-1 |
| **அம்பலாங்கொடை** - 11/E, புதிய வீதி. | 091-4920000-1 |
| **அளுத்கம** - 339 1/1, காலி வீதி. | 034-4920022-3 |
| **மாத்தறை** - 32/B/14, தர்மபால மாவத்தை. | 041-4920000-1 |
| **தங்காலை** - 35, பெலியத்தை வீதி. | 047-4920022-3 |
| **ஹம்பாந்தோட்டை** - 33, எல்.எம்.ஆர். தாஸிம் மாவத்தை. | 047-4920000-1 |
| **எம்பிலிப்பிட்டிய** - ரஸிக கட்டடம், 1ஆம் மாடி, பல்லேகம. | 047-4920011-2 |
| **அவிசாவளை** - 31/1, இரத்தினபுரி வீதி. | 036-4920000-1 |
| **இரத்தினபுரி** - 96, பிரதான வீதி. | 045-4920000-1 |
| **ஹட்டன்** - 136, திம்புல்ல வீதி. | 051-4920000-1 |
| **பண்டாரவளை** - 56, பிரதான வீதி. | 057-4920000-1 |
| **பதுளை** - இல.226/11, நவீன கட்டடத் தொகுதி | 055-4920000-1 |
| **நுவரெலியா** - இல.1/1, புதிய கடைத்தொகுதி, கண்டி வீதி. | 052-4920000-1 |
| **தம்புள்ளை** - சுஜாதா கட்டடம், 1ஆம் மாடி, குருநாகல் சந்தி. | 066-4920011-2 |
| **மாத்தளை** - 97, கிங்ஸ் வீதி. | 066-4920000-1 |
| **கம்பளை** - 79, கண்டி வீதி. | 081-4920000-1 |
| **வரக்காபொல** - 198/A, மீரிகம சந்தி. | 035-4920011-2 |
| **பொலன்னறுவை** - 843, மட்டக்களப்பு வீதி, கதுருவெல. | 027-4920000-1 |
| **அநுராதபுரம்** - 514/5, சமன்ல கட்டடம், மைத்திரிபால சேனாநாயக்க மாவத்தை, புதிய நகரம். | 025-4920000-1 |
| **திருகோணமலை** - 392, நீதிமன்ற வீதி. | 026-4920000-1 |
| **வவுனியா** - 234B 1/1, கண்டி வீதி. | 024-4920000-1 |
| **அம்பாறை** - 3, டீ.எஸ். சேனாநாயக்க வீதி. | 063-4920000-1 |

## SUNTEL OFF THE SHELF CONNECT

- ☑ அனைத்தும் உள்ளடங்கிய கொள்வனவு விலை ரூ. 14,900/-
- ☑ மாதாந்த வாடகை ரூ. 300/- (VAT நீங்கலாக)
- ☑ சாதாரண தொலைபேசிக் கட்டணங்கள்
- ☑ உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசம்
- ☑ CLI ☑ IDD ☑ SMS
- ☑ அதிவேக தரவு அனுப்பீடு (இணைத்தள தொடர்பு)
- ☑ பெறுமதி சேர்க்கப்பட்ட சேவைகள்
  - அழைப்பை முன்செலுத்துதல்
  - அழைப்பை இடமாற்றம் செய்தல்
  - முத்தரப்பு உரையாடல்
  - உடனடித் தொடர்பு - பேபி கோல்

தொலைபேசி சிறப்பம்சங்கள்

- ☑ ஃபோன் குறிப்பேடு
- ☑ பொலிபோனிக் மணியொலிகள்
- ☑ ஸ்பீக்கர் வசதி
- ☑ விசாலமான காட்சித் திரை
- ☑ குரூப் SMS

**Suntel SMS**

**வெறும் வாய்ப்பேச்சு அல்ல!**

வாடிக்கையாளர் சேவை


உடனடித் தொலைபேசி - 4747474

**Suntel**

தொலைத்தொடர்பில் உங்கள் ஆயுட்காலப் பங்காளி

புதிய யுகத்தின் தேசிய தொலைத்தொடர்பு வலையமைப்பு

# ஹரிபொட்டர் நூலாசிரியை ஜே.கே.றோலிங்




31.07.1965 இல் தெற்கு இங்கிலாந்தில் பிறந்த Joanne Rowling, தனது நூல்வெளியீட்டாளர்கள் ஆரம்பத்தில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க Joanne Kathleen Rowling எனத் தனது பெயரை மாற்றிக் கொண்டார். Kathleen என்பது அவரது விருப்பத்துக்குரிய பாட்டியின் பெயராகும். 'ஜோ' என்று மற்றவர்கள் தன்னை அழைப்பதையே றோலிங் விரும்புகின்றார்.

எக்ஸ்டா பல்கலைக்கழகத்தில் பிரான்சிய மொழி படித்து 1987 இல் பட்டதாரியாக வெளியேறிய அவர் சிறிது காலம் சர்வதேச மன்னிப்புச்சபையில் ஆய்வு உதவியாளராகப் பணியாற்றினார். அவருடன் ஒட்டிப் பிறந்த, எழுதவேண்டும் என்ற ஆவலின் காரணமாக, நேரம் கிடைக்கும் போதெல்லாம் சிற்றுண்டிச்சாலைகளிலும், உணவகங்களிலும் அமர்ந்திருந்து எழுதுவதையே தனது பொழுது போக்காக்கிக் கொண்டார்.

1991 இல் அவருக்கு 26 வயதாக இருக்கும் போது ஆங்கிலத்தை இரண்டாவது மொழியாகக் கற்பிக்கும் ஒரு ஆசிரியையாக போர்த்துக்கல் நாட்டுக்கு சென்றார். அங்கு பணியாற்றிக் கொண்டிருந்தபோது தொலைக்காட்சி எழுத்தாளரான Jorge Artantes என்பவரைக் காதலித்துத் திருமணம் செய்து கொண்டார். அந்த மணவாழ்க்கை அவருக்கு இனிப்பாக அமையவில்லை. கணவரை விவாகரத்துச் செய்துவிட்டு, தனது கசப்பான அனுபவங்களுடன் திருமண வாழ்க்கைக்கு தனது பரிசாகக் கிடைத்த குழந்தை Jassic வுடன் ஸ்கொத்லாந்துக்குத் திரும்பினார்.

அங்கு வறுமையின் கோரப்பிடியில் சிக்கி வாடிவதங்கினார் றோலிங். வேலை ஒன்றும் கிடைக்காத நிலையில் அறை ஒன்றை வாடகைக்கு அமர்த்தி அதில் தனது குழந்தையுடன் வசித்து வந்தார். குழந்தையைப் பராமரிப்பதற்காகவும் சிக்கனமாகச் சீவிப்பதற்காகவும் தனது வயிற்றையே கட்டிப்போட வேண்டிய பரிதாப நிலை அவருக்கு ஏற்பட்டது.

1997 இல்Harry Potter முதல் புத்தகத்தை அவர் எழுதத் தொடங்கியபோது அவருக்கு காகிதங்கள் வாங்கி எழுதுவதற்கு கூட வசதி இருக்கவில்லை. அந்த நூலுக்காக அவர் எழுதிய முதல்வரிகளை ஹோட்டல் ஒன்றில் இருந்த போது அவர்கள் கை துடைப்பதற்காக அவருக்கு வழங்கிய டிஷ்யூ பேப்பரில்தான் எழுதினார்.

மான்செஸ்டர் – லண்டன் ரயிலில் பயணம் செய்து கொண்டிருந்தபோது தனது முதல் Harry Potter நாவலை எழுத ஆரம்பித்தார். அவர் எழுதி முடித்தபோது அந்தப்புத்தகம் Harry Potter and The Philosopher's Stone என்ற பெயர் தாங்கி வெளிவந்தது.

Harry Potter என்ற பெயர் றோலிங் சிறு வயதில் வசித்த வீட்டுக்குப் பக்கத்தில் இருந்த ஒருவரின் பெயராகும்.

1997 இல் Scottish Art Council அவரது இந்த முதல் சிறுவர் நாவலை வெளியிடுவதற்காக 8000 பவுண்களை நன்கொடையாக வழங்கியது. அதே ஆண்டு புத்தக விற்பனை உரிமை நியூயோர்க்கில் ஏலத்துக்கு விடப்பட்டபோது 105000டலர்கள் விலை போயிற்று.

1999இல் 'நியூயோர்க் டைம்ஸ்' வெளியிட்ட மிக அதிகம் விற்பனையான புத்தகங்களின் பட்டியலில் Harry Potter இன் முதல் மூன்று புத்தகங்களும் முதல் மூன்று இடங்களையும் பிடித்துக் கொண்டன.

26 டிசம்பர் 2001 இல் டாக்டர் Neil Murray ஐ மறுமணம்செய்து கொண்ட றோலிங்குக்கு இப்பொழுது மொத்தம் மூன்று குழந்தைகள் உள்ளனர்.

சர்வதேச விற்பனைச் சந்தையில் இடம் பிடித்துக் கொண்ட தனது சிறுவர் நாவல்கள் மூலம் கிடைக்கும் பணத்தில் பெரும் பகுதியை வறிய நாடுகளில் உள்ள குழந்தைகள் நலனுக்காகச் செலவிடத் தீர்மானித்துள்ளார் றோலிங்.

புத்தக விற்பனை மூலம் பிரிட்டனில் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதி பிரிட்டிஷ் அபிவிருத்தித்திட்டங்களுக்கு வழங்கப்படவிருக்கிறது. மிகுதி ஆபிரிக்க நாடுகளில் வறுமையால் வாடும் குழந்தைகளின் நலன்களுக்குப் பயன்படுத்தப்படும்.

சர்வதேச ரீதியாக கிடைக்கும் எஞ்சிய பணம் ஏனைய வறிய நாடுகளில் உள்ள சிறுவர்களுக்கு உதவுவதற்காக வழங்கப்படும்.

வறுமையின் கொடூரத்தாக்குதலை தனது முதலாவது திருமணத்தின் பின்னர் நன்கு அனுபவித்த றோலிங் இப்போது உலகில் உள்ள பணக்காரர்கள் வரிசையில் தானும்ஒருவராக இடம் பிடித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

## குழந்தை இலக்கியப் படைப்பில் கொடிகட்டிப் பறக்கிறார் ஜே.கே.றோலிங்




குழந்தைகள் நாவலான ஹரிபொட்டரின் ஆறாம் பாகம் கடந்த மாதம் 16 ஆம் திகதி விற்பனைக்கு விடப்பட்டபோது உலகெங்கும் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியது. அதன் நூலாசிரியையான ஜே.கே.றோலிங் குழந்தை எழுத்தாளர் வரிசையில் மாபெரும் சாதனை படைத்து உயர்ந்து நிற்கிறார்.

ஹரிபொட்டர் நாவலின் ஆறாம் பாகம் Half Blood Prince. அது விற்பனைக்கு விடப்பட்ட முதல் நாளன்று மட்டும் உலகெங்கும் விநாடிக்கு 13 புத்தகங்கள் வீதம் விற்பனையாகி மொத்தம் ஒரு கோடி பிரதிகள் 24 மணிநேரத்தில் விற்றுத் தீர்ந்தன. இப்புத்தகத்தை வாங்கிய முதல் எழுபது பேர் அதன் ஆசிரியையை நேர் காணும் சந்தர்ப்பத்தைப் பெற்றனர்.

முதல்நாளன்று விற்பனை செய்யப்பட்ட ஒரு கோடி பிரதிகளில் 20 லட்சம் பிரதிகள் லண்டனில் விற்பனையாகியுள்ளன. இந்தப் புத்தகம் உலகில் உள்ள 15 நாடுகளில் விற்பனைக்குவிடப்பட்டு இருந்தது. பிரிட்டன், அமெரிக்கா, பிரேசில்,பிலிப்பைன்ஸ்போன்ற நாடுகளில் கடந்த 15 ஆம் திகதியே –அதாவது புத்தகம் விற்பனைக்கு விடப்பட இருந்த தினத்துக்கு முதல் நாளே– அதன் விற்பனை கொடிகட்டிப் பறந்தது. மக்கள் விடிய விடிய ஆடிப், பாடி இந்த நிகழ்ச்சியை உற்சாகம் கரைபுரண்டோட கொண்டாடி மகிழ்ந்தனர்.

'அமேசன் இணைய தளம்' இந்தப் புத்தகத்தின் இணைய தளம் மூலமான விற்பனையைப் பொறுப்பேற்றிருந்தது. இந்த இணையத்தளத்துக்கு 4 இலட்சத்துக்கும் மேற்பட்ட பிரதிகளுக்கான ஓடர்கள் கிடைத்ததாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பிரிட்டனின் றோயல் மெயில் தபால் சேவை, தபால் மூலம் அனுப்பப்பட்ட HARRY POTTER 6ஆம் பாக புத்தக விநியோகத்துக்காக 150 வான்களை சேவையில் ஈடுபடுத்தியதாகத் தெரியவருகிறது. குறிப்பிட்ட வான் சேவைமூலம் 5, 50, 000 பிரதிகள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

Harry potter இன்முதல் பாகம் Harry potter and the Order of Phoenix ஆகும். இது 2003 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. அப்போது வினாடிக்கு 8 புத்தகங்கள் மட்டும் விற்கப்பட்டதாகவும் தற்போது வெளியிடப்பட்ட Harry Potter ஆறாம் பாகம் விநாடிக்கு 13 புத்தகங்கள் விற்பனையானதன் மூலம் முதல் பாகத்தின் விற்பனைச் சாதனை முறியடிக்கப் பட்டுள்ளதாகவும் புத்தக வெளியீட்டாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தியா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் பல்லாயிரக்கணக்கானோர் போட்டி போட்டுக்கொண்டு Harry Potter ஆறாம் பாகத்தை வாங்கியதாகச் சொல்லப்படுகிறது. முதல் ஐந்து பாகங்களும் 200 நாடுகளில் 20லட்சம் பிரதிகள் விற்பனையாகியிருக்கின்றன. குறிப்பிட்ட ஐந்து பாகங்களும் மொத்தம் 62 மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

Harry Potter இன் 7 ஆம் பாகத்துடன் இத்தொடர் முடிவடையும் என நூலாசிரியையான ஜே.கே. றோலிங் ஏற்கெனவே அறிவித்துவிட்டார்.

# செவ்வாய் உயிர் உள்ளது!

'செவ்வாய் வெறுவாய்' என்று சொல்லுவார்கள். அதற்குக் காரணம், செவ்வாயில் உயிர்கள் இல்லை என்பதால்தான்.

உயிர்கள்தோன்றவும், வாழவும் நீர் வேண்டும். கடந்த 300 கோடி ஆண்டுகளாக செவ்வாயில் தண்ணீர் இல்லை!

தண்ணீர் ஓடிய பாதைகள் உள்ளன. தண்ணீர் உடனே ஆவியாகிவிடும். இதனால் செவ்வாயில் கடல்களோ, ஏரிகளோ இருந்ததாகச் சான்றுகள் இல்லை! தண்ணீர் தேங்கி நின்றால்தான் அதில் உயிர்கள் தோன்றும்!

### கடல் எப்படி தோன்றியது?

இந்தப் பனிக்கடல் எப்படித் தோன்றியது?

செவ்வாயில் தரைக்கு அடியில் நீர் இருக்கிறது. அந்த நீர் பெருகி மண்ணைப் பிளந்துகொண்டு, (ஊற்றுப்போல) வெளியே வர முயற்சித்தது. அந்த நீர்தான் ஒரு பள்ளத்தில் தேங்கி, கடலாகிவிட்டது என்று அறிவியலாளர் கூறு கிறார்கள்.

இது 50 இலட்சம் ஆண்டுக்கு முன் நடந்திருக்க வேண்டும் என்று அவர்கள் மதிப்பிட்டுள் ளார்கள்!



### பனிக்கடல்

செவ்வாயில் பனிக்கடல் ஒன்றை அறிவியலாளர்கள் இப்போது கண்டுபிடித்திருக்கிறார்கள்.

இந்தக் கடலின் நீளம் 800 கிலோமீட்டர் ஆகும்.

செவ்வாயில் இரவில் குளிர் அதிகம். அந்தக்குளிரில் கடல்நீர் பனிக்கட்டியாக உறைந்துவிடும்.

செவ்வாயில் பகலில் வெய்யில் அதிகம். அவ்வளவு வெயில்!! ஆனால், இந்தப் பனிக்கடல் ஏன் ஆவியாகவில்லை?

பனிக்கட்டி மீது எரிமலைச் சாம்பல் படிந்திருக்கிறது! படிந்துள்ள சாம்பலின் உயரம் 2 கி.மீ.! பனிக்கட்டியை வெய்யில் தாக்காதபடி இந்த சாம்பல் தடுத்துவிடுகிறது.

### உயிர்கள்

செவ்வாயில் தண்ணீர் இருப்பதால் உயிர்கள் இருந்திருக்கவேண்டும் என்று ஆராய்ச்சியாளர்கள் மதிப்பிட்டார்கள்.

"இப்போது உயிர்கள் இருக்கக்கூடும்!" என்று அவர்கள் சொல்லுகிறார்கள்!

செவ்வாயின் அமைப்பு நமது பூமியை ஒத்திருக்கிறது. எனவேதான், செவ்வாய் பற்றிய ஆராய்ச்சியில் நிபுணர்கள் மிகுந்த ஆர்வத்துடன் இருக்கிறார்கள்!

# சுவடுகள்

'சுனாமி' வந்ததுதான் வந்தது. கூடவே அழிவுகளையும் அள்ளிக்கொண்டு வந்தது. இன்னும் ஏழு மாதங்கள் கழிந்துவிட்ட நிலையிலும் பயத்தைக் கழிக்க முடியாமல் இருக்கிறது மக்களிடம்.

அதனை அனுபவித்து அல்லல்பட்ட மக்களை நேரில் பலதடவைகள் கண்டிருக்கிறேன். கிட்டத்தட்ட 15 இற்கும் மேற்பட்ட விவரணங்களை கண்ணீர் மனதுடன் செய்திருக்கிறேன் தொலைக் காட்சிக்காக.


அகதி முகாமில் மூவரை சுனாமிக்கு பறிகொடுத்த பெண்.

அண்மையில் மணற்காடு, திக்கம் சுனாமி அகதிகளின் இடைத் தங்கல் முகாம்களுக்கு போயிருந்தேன்.

மணற்காடு அகதி முகாமில் இருப்பவர்கள் அநேகமாக கிறிஸ்தவர்கள். அவர்கள் எல்லோருடைய குரலும் "இங்கு இருக்க முடியாது நோய் வந்து மூன்று பேர் இறந்து போனார்கள்" என்றே ஏகோபித்து ஒலித்தன. காரணமும் சொன்னார்கள். கிட்டத்தட்ட 200 குடும்பங்கள் ஒன்றாக இருக்கின்றன. உஷ்ணம், தகர வெக்கை காரணமாக நோய் வருகிறது.

"அத்தோடு ஏற்கனவே இப்பொழுது வீடு கட்டப்பட்டிருக்கும் தனியார் தோட்டத்துக்கு வலப்புறமும், இடப்புறமும் இரண்டு சைவக் கோவில்கள் இருக்கின்றன. கிறிஸ்தவர்களாகிய நாம் இங்கு வந்து இருப்பது அந்தத் தெய்வங்களுக்கு பிடிக்கவில்லை போலும். அதனாலேயே மூன்று மரணங்கள் நிகழ்ந்து விட்டன. எங்களை கடற்கரைக்கு எங்கள் இல்லிடங்களுக்கே அனுப்பச் சொல்லுங்கள் ஐயா" என்று எங்களிடம் வேண்டுகோள்விடுத்தனர். உண்மையில் மக்கள் இப்பொழுது மரண பயத்தில் இருக்கிறார்கள்.

தெய்வங்கள் மனிதர்களை தண்டிப்பதில்லை என்பதை சொன்னவர்கள் எல்லோரிட்மும் சொன்னேன்.

அடுத்த மரணம் யாருடையது என்று பயமாக இருப்பதாக சொன்னார்கள். திடீரென்று நெஞ்சடைப்பு, திடீரென்று மரணம் அவர்களை அச்சப்படுத்தி இருக்கி


மனற்காடு அகதிகள் இடைத்தங்கல் முகாம்

றது. அவர்கள் மனத்தளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். யாழ். மாவட்ட சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் கேதீஸ்வரன் கொஞ்சம் தனது பணிகளுக்கிடையில் மணற்காடு அகதிகளின் நோய்கள் தொடர்பாக கவனமெடுத்தால் நல்லது என்பது எனது வேண்டுகோள்.

*****

2005 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 27 ஆம் திகதி எங்களது டொமினிக் ஜீவாவுக்கு வயது 78.

அதே வெள்ளை வேட்டி, ஜுப்பா, அதே உற்சாகம், அதே கதை, அதே தேடல், அதே உறுதி, அதே உணவு - எல்லாமே அதே; அப்படி இருப்பதனால் தான் 'மல்லிகை'க்கும் ஜீவாவுக்கும் என் மனதில் இறக்கும் வரை ஓர் இடம் ஒதுக்கப்பட்டே இருக்கின்றது.

அண்மையில் மந்திகைக்கு அப்பால் 'கூவில்' எனும் பகுதிக்கு சீவல் தொழிலாளிகள் பற்றிய அவர்கள் தொழில், வாழ்வு, நிலைமைகள் தொடர்பாக ஒரு 'விவரணம்' செய்வதற்கு சென்றேன்.

அங்கு ஒரு 'கள்ளுத் தவறணை'க்கு சென்று 'கள்' அருந்துபவர்களோடு கதைத்து அவர்களை படம் பிடித்து பேட்டியும் எடுத்தேன்.

அப்பொழுது டானியல், ஜீவா பற்றி பேச்சு வந்தது. மல்லிகை பற்றி மிகவும் வாஞ்சையோடு விசாரித்தார்கள். இப்பொழுது தொடர்ந்து மல்லிகை வருவது அவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. மல்லிகை வாசிக்க ஆர்வமாக இருப்பதாகவும் பருத்தித்துறைப் பக்கம் ஏன் வருவதில்லை என்றும் கேட்டார்கள். எப்பொழுதும் மல்லிகை அவர்களின் மனங்களில் இருக்கிறது. பருத்தித்துறை, சாவகச்சேரி, நெல்லியடி பகுதிகளுக்கும் மல்லிகை அனுப்பலாமே ஜீவா. பிறந்த நாள் வாழ்த்துக்கள்.

*****

சாவகச்சேரியில் நான் சார்ந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக 'விவரணம்' ஒன்று செய்ய அண்மையில் சென்றிருந்தேன். 1980 ஆம் ஆண்டு சாவகச்சேரியில் இருந்தேன். ஒரு கரேஜில் வெல்டிங் பழகுவதற்காக.

அப்பொழுது எல்லாம், எனக்குப் பிடித்தமானது ஒன்று தான் சந்தையில் இருந்தது. 'புட்டு வெள்ளரிக்காய்' கரைச்சு, தனிய என்று சாப்பிடுவது எனக்கு மிகவும் பிடிக்கும்.

இந்தமுறை போனபொழுது சாவகச்சேரி, யுத்தத்தில் இருந்து மீள எழும்புவது மனதுக்கு சந்தோஷமாக இருந்தாலும் மக்கள் யுத்தம் வந்து விடுமென்றே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் மிகவும் பயமாக. 1990 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதி வடபுலத்தில் இருந்து போகச் சொல்லப்பட்ட முஸ்லிம்கள் 5 குடும்பங்கள் சாவகச்சேரியில் பள்ளிவாசல் காணியில் வந்து குடியமர்ந்துள்ளன. அவர்கள் சொன்னது இன்னும் மனதுக்குள் இருக்கிறது. "என்ன வந்தாலும் மௌத்து (இறப்பு) வந்தாலும் நாங்கள் பிறந்த மண்ணில் வரட்டும்."


சாவகச்சேரி சந்தை

ஒரு தையல்காரரை பேட்டி கண்டேன். "யுத்தத்திற்கு பிறகு சாவகச்சேரியில் இருக்கும் உங்கள் மனநிலை என்ன?"

அவர் சொன்னது "உண்மையில் இப்பொழுது அரசாங்கமோ, புலிகளோ யுத்தத்தை விரும்பவில்லை. ஏதோ ஒரு வகையில் சமாதானத்தைக் கொண்டுவர வேண்டும் என்பதில் பிரபாகரன் உறுதியாக இருக்கிறார். அவர் தனது காலத்துக்குள்ளேயே ஒரு நிரந்தரத் தீர்வு தமிழ் மக்களுக்கு எழுத்து மூலமானதை பெற்றுக் கொடுக்க விளைகிறார்.

ஆனால் அவரின் கண்ணுக்குப் பின்னால் என்ன நடக்குமோ தெரியாது.

ஆனால் ஊடகங்கள் தான் யுத்தப் பீதியை பரபரப்புக்காக செய்கின்றன. உண்மையில் யுத்தம் வரக்கூடிய சாத்தியம் உடனடியாக இல்லை.

முன்னுக்குப்பின் முரணான தகவல்களை கொடுத்து ஊடகங்கள் தவறான பயத்தை மக்களுக்கு ஊட்டுகின்றன

மக்களின் மனதில் தைரியத்தை வரவழைக்கும் செய்திகள் தகவல்களை யாழ்ப்பாணத்து பத்திரிகைகளும் சரி கொழும்புப் பத்திரிகைகளும் சரி தருவதில்லை. நான் [illegible] வது தமிழ் பத்திரிகைகளைத் தான், ஆங்கில சிங்கள பத்திரிகைகளைப் பற்றி எமக்கு பிரச்சினை இல்லை."

எனது நெற்றிப்பொட்டில் அறைந்தது மாதிரி இருந்தது அந்த ரெயிலரின் சொல்.

உண்மையில் ஊடகங்கள்தான் மக்களை பதற வைக்கின்றன. சும்மா பரபரப்புக்காக இந்தக் காலப்பகுதியில் எந்தப் பத்திரிகையாவது, வானொலியாவது, தொலைக்காட்சியாவது மக்களை, தமிழர்களை ஆற்றுப்படுத்தினவா? 20 வருடகால யுத்தம், அகதி அலைக்கழிவு என்று துன்பத்திலேயே மூழ்கி இருக்கும் மக்களை மேலும் மேலும் பயமுட்டி அச்சப்படுத்தும் செயலையே செய்கின்றன.

எனது நண்பரொருவன் ஊடகம் தொடர்பான கருத்தரங்கு ஒன்றிற்கு சென்றிருந்தான். அங்கு சொன்னார்களாம்.

"நீங்கள் இரண்டு கண்ணால் கண்ட துயரங்களை ஆயிரம் கண்களுக்கு கடத்தி அவர்களையும் அழவைக்காதீர்கள்" எவ்வளவு உண்மை.

'சுனாமி'யின் பின்பு பிரேதங்களாகவே காட்டிக் காட்டி எத்தனை பேர் செய்திகள் பார்ப்பதையே நிறுத்தி விட்டனர். அவ்வளவு மனவலி.

*****

இங்கே கொழும்பு மட்டக்குளி பகுதியில் ஒருவர் நடுச்சாமத்தில் வீட்டுச் சாமான்கள் எல்லாவற்றையும் உரப்பையில் கட்டிக் கொண்டிருந்தாராம். அத்தோடு ரீவி, டெக், பெறுமதியான சாமான்களை எல்லாம் எப்படிக் கொண்டு



போகமுடியும் என்று பக்கத்து வீட்டு நண்பரிடம் கேட்டு அவசரப்பட்டு தடுமாறிக் கொண்டிருந்தாராம். அயல் வீட்டுக்காரர் பயந்து போய் ஏன் என்ன விசயம் என்று கேட்க அவர் சொன்ன பதில் "பைப்பில் தண்ணி மிக அதிகமாக வருகிறது 'சுனாமி'யோ என்று பயமாய்க்கிடக்கு."

*****

'பழஞ்சோறு பிரட்டல்' இதனைப் பார்த்த உடனேயே உமிழ்நீர் சுரப்பிகள் தனது வேலையை செய்யத் தொடங்கிவிடும். பழைய மீன்கறி, கத்தரிக்காய் பொரிச்சு வைச்ச குழம்பு பழையது காலையில் கறிச்சட்டிக்குள் போட்டு பிரட்டி எடுத்து குழைத்து உருண்டையாக்கி அந்த உருண்டையின் மேல் பழைய மீன்கறியின் துண்டு ஒன்று விள்ளி போட்டு அம்மா தந்தால்...... இன்னும் இன்னும் மனதில் அச்சொட்டாய் இருக்கிறது; வாழை இலைத்துண்டில் அற்புதமாய் அமர்ந்திருக்கும் குழையல் உருண்டை....

அமுதுப்புலவர் லண்டனில் இருக்கிறார். மேடையில் பேசினால் நன்றாக சிரிக்க வைப்பார். பெரியவர் அமுது புலவரின் கவிதை ஒன்று என்னுள்ளே இருக்கிறது

'தெ[illegible]ம் இனிக்கும் பூநகரி
நீ[illegible]ர் மொட்டைக் கறுப்பனிலே
க[illegible]டியாப் பழஞ்சோறு
க[illegible]ாய்ப் பிழிந்து சட்டியிலே
மி[illegible] குழம்பு கத்திரிக்காய்
வ[illegible]ம் கீரை மரவள்ளி
[illegible]ம் ஊறுகாய் உப்பு
கு[illegible]து அம்மா நீட்டுவாள்'

-அமுதுப் புலவர் 'பழஞ்சோ[illegible]
தொகுப்பு: 'அமுதுவின் கவிதைக[illegible]
(இன்னும் பதியும்)

**இளைய அப்துல்லாஹ்**




# அனகொண்டா

நிலத்திலும் நீரிலும் வாழக் கூடிய ஊர்வன வகைகளில் மிகப் பெரியது அனகொண்டா என்னும் மலைப் பாம்பு இது அமார் ? மீற்றர் நீளம் வரை வளரும்.

நீர் நிலைகளின் அருகே வாழும். தண்ணீர் அருந்துவதற்காக நீர் நிலைகளைத் தேடி வரும் வாத்துக்கள், நாய்கள், பன்றிகள், ஆடுகள், மான்கள் இவற்றின் உணவு.

கிடைத்த உணவை முதலில் தன் உடலால் சுற்றி ஒரு பிழி பிழிவது போல அழுத்தும். அந்த அழுத்தம் தாங்காமல் அகப்பட்ட உயிரினம் இறந்து போகும். 70 கிலோ எடையுள்ள உயிரினத்தைக் கூட பிடித்துக் கொள்ளும் வல்லமை இந்த அனகொண்டாவிற்கு உண்டு. இப்படி பெரிய பெரிய இரைகளை வயிறார தின்று பின்னர் ஒரு மாதம் வரை ஜாலியாக் தூங்கி 'ரெஸ்ட்' எடுக்கும். வருடத்திற்கு 30 தடவைகளுக்கு மேல் இரைகளை உட்கொள்வதில்லை. அனகொண்டா 113 கிலோவுக்கு மேல் எடை கொண்டது. இது முட்டையிடும் ரகம். ஒரு தடவைக்கு 10 முதல் 100 முட்டைகளை இடும். முட்டையிட்ட பின் அதைச் சுற்றி பாதுகாப்பாக படுத்துக் கொண்டு காக்கும். இரண்டு மாதங்கள் அடைகாத்தபின் இரண்டரை அடி நீளமுள்ள குட்டிகள் வெளிவரும். வெளிவந்த இந்தக் குட்டிகள் 25 ஆண்டுகள் வரை உயிர் வாழ்ந்து போகும் வரை விலங்குகளை கதி கலங்க வைக்கும். தென் அமெரிக்க பிரேசில் பகுதிகளில் இப்படி கதி கலங்க வைக்கும் அனகொண்டாக்கள் அதிகம்.

அனகொண்டாக்கள் விஷம் அற்றவை ஆனால் பயங்கரமானவை.

# ஐ.ஆர்.ஏ

# ஆயுதம் இனி வேண்டாம்

ஐரிஷ் குடியரசு இராணுவமான ஐ.ஆர்.ஏ ஆயுதங்களைக் கைவிட்டு சமாதானப்பாதைக்குத் திரும்புமாறு தனது அங்கத்தவர்களைக் கேட்டுள்ளமை பற்றிய செய்திகள் கடந்த வாரம் பரபரப்பை ஏற்படுத்தி இருந்தன. அத்துடன் இந்தச் செய்திகள் வடஅயர்லாந்தில் அடுத்து நடக்கப் போவது என்ன என்பதை அறிவதற்கான ஆவலையும், உலக மக்கள் மத்தியில் - குறிப்பாக விடுதலை இயக்கங்களிடையே தூண்டிவிட்டுள்ளது.

ஐரிஷ் குடியரசு இராணுவத்தினர் கடந்த 30 ஆண்டு காலமாக பிரிட்டிஷ் ஏகாதிபதிபத்தியத்தின் கை வட அயர்லாந்தில் தொடர்ந்து இருப்பதற்கு எதிராகவும், பிரிந்து போயுள்ள அயர்லாந்து மீண்டும் ஒரு குடையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டுமென்று கோரியும் போராட்டம் நடத்தி வந்தனர்.

இப்போது தமது இந்த நோக்கத்தை எட்டிப் பிடிப்பதற்கு தாம் ஜனநாயக வழிக்குத் திரும்பி இருப்பதாகவும், தமது இலட்சியத்தில் வெற்றிகாண தாம் இதுவரை கைக்கொண்டுவந்த வன்முறைகளைக் கைவிடுவதாகவும் அறிவித்திருக்கின்றனர்.

இவர்களது இந்த முப்பது ஆண்டு கால வன்முறைப் போராட்டங்களின்போது வடஅயர்லாந்தும் பிரிட்டனும் பேரழிவுகளை பல்வேறு மட்டங்களில் சந்தித்திருந்தன. கடந்த டிசெம்பர் மாதம் வடஅயர்லாந்தின் வங்கியொன்றில் திடீர் தாக்குதல் நடத்தி 26.5 மில்லியன் பவுண்களை ஐரிஸ் குடியரசு இராணுவத்தினர் அள்ளிச் சென்றனர். தவிர கடந்த ஜனவரியில் ரொபேர்ட் மக்கார்த்தி என்ற நபர் இவர்களால் படுகொலை செய்யப்பட்டார். இந்த நிலையில், இவர்கள் மீது வன்முறையைக் கைவிடுமாறு அழுத்தங்கள் முன்னெப்போதும் இல்லாதவாறு அதிகரித்து வந்ததையடுத்தே இவர்கள் வன்முறையைக் கைவிடுவதற்கான முடிவுக்கு வந்ததாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

### வட அயர்லாந்தில் மோதல்

வட அயர்லாந்தில் இரண்டு மதப்பிரிவினர் உள்ளனர். ஒரு பிரிவினர் புரட்டஸ்தாந்து மதத்தையும் ஏனையோர் கத்தோலிக்க மதத்தையும் பின்பற்றுகின்றனர். இவர்களில் புரட்டஸ்தாந்து மதத்தவரே பெரும்பான்மையினராக இருப்பதுடன் தாம் இன்னமும் பிரிட்டிஷ் பிரஜைகளே எனவும், பிரிட்டனுடனான தமது தொப்புள் உறவு அறுந்துவிடக்கூடாது எனவும் நம்புகின்றனர். ஆனால், ஆயுதம் தூக்கிப்போராடும் ஐ.ஆர்.ஏ. இயக்கத்தினர் கத்தோலிக்கர்களாக இருப்பதுடன் வட அயர்லாந்தில் இருந்து பிரிட்டன் முற்றாக வெளியேறிவிடவேண்டும் என்றும் முன்னர் கூறப்பட்டுள்ளது போல தற்போது பிரிந்துள்ள அயர்லாந்து மீண்டும் இணைக்கப்படவேண்டும் என்றும் கோரிவருகின்றனர்.

இவ்வாறெல்லாம் கூறப்படுவதை வாசிக்கும் வாசகர்கள் அயர்லாந்துப் பிரச்சினையின் பின்னணியை அறிந்து கொள்வது அவசியம். அப்போதுதான் அங்கு நிலவும் நடைமுறைச் சிக்கல்களை தெளிவாகப் புரிந்துகொள்ளமுடியும்.

### பிரச்சினையின் பின்னணி

அயர்லாந்துப் பிரச்சினை பிரிட்டனின் மிகப் பழைமை வாய்ந்த குடியேற்ற நாட்டுப் பிரச்சினையுடன் பின்னிப் பிணைந்ததொன்றாகும். பிரிட்டன் உலகம் பூராவும் தன்கையில் இருந்த குடியேற்ற நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கி சூரியன் அஸ்தமிக்காத தனது சாம்ராஜ்யத்துக்கு மூடுவிழா நடத்தியபோதும் தனது காலடியில் இருந்த இன்னொரு குடியேற்றநாடான அயர்லாந்துக்கு மட்டும் முழு அளவில் சுதந்திரம் வழங்கமுடியவில்லை. அந்த நாள்முதல் இந்த நாள்வரை இந்தப் பிரச்சினைக்குத் திருப்திகரமான தீர்வொன்றைக் காண வல்லரசான பிரிட்டனால் முடியவில்லை.

1920ஆம் ஆண்டு அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியில் அயர்லாந்தைவிட்டு வெளியேறுவது எனப் பிரிட்டன் முடிவு செய்தது. ஆனால் வடஅயர்லாந்தைக் கைகழுவிவிட்டு வெளியேற மட்டும் அதனால் முடியவில்லை. ஏனெனில், வடஅயர்லாந்தின் புரட்டஸ்தாந்து மதத்தவர்கள் தாம் பிரிட்டிஷ் பிரஜைகள் எனவும் தாமே பெரும்பான்மையினர் எனவும் சுட்டிக் காட்டியதைப் புறக்கணித்து வெளியேற பிரிட்டனால் முடியவில்லை.

எனவே, 1920இல் பிரிட்டன் அயர்லாந்தைவிட்டு வெளியேறியபோது அந்த நாட்டைத் துண்டாடவேண்டிய நிர்ப்பந்தத்துக்குள் தள்ளப்பட்டிருந்தது.

இப்போது வட அயர்லாந்து என வர்ணிக்கப்படும் அயர்லாந்தின் வடகிழக்குப் பகுதியை ஒரு துண்டாகவும், எஞ்சிய மறுபகுதியை இன்னொரு பிரிவாகவும் துண்டாடிவிட்டு பிரிட்டன் வெளியேறியது. வடஅயர்லாந்து தவிர்ந்த அயர்லாந்தின் மறுபகுதி இப்போது சுதந்திரமாக இயங்குகிறது. இது உரோமன் கத்தோலிக்க பகுதி.

பிரிட்டன் அயர்லாந்தை விட்டு வெளியேறியபோது வட அயர்லாந்தில் உள்ள தனது இரத்த உறவினர்களான புரட்டஸ்தாந்து மதத்தைச் சேர்ந்த பெரும்பான்மையினருடன் தனது உறவைத் தொடர்ந்து பேணுவதில் அக்கறை கொண்டிருந்ததை முன்னர் எடுத்துக்காட்டியிருந்தோம். அத்துடன், அப்போது அங்கிருந்த புரட்டஸ்தாந்து மதத்தவர் தாம் பிரிட்டிஷாராக தொடர்ந்து வாழ்வதற்குத் தமக்கிருக்கும் உரிமைக்காகப் போராடப் போவதாகவும் அச்சுறுத்தினர். இந்த நிலையில்தான் பிரிட்டன் அயர்லாந்தில் பிரிவினையைத் தவிர வேறு மார்க்கம் எதுவும் இல்லை என்று கண்டு கொண்டது.

ஆனால், இந்தப் பிரிவினையை வடஅயர்லாந்தின் சிறுபான்மையினரான கத்தோலிக்கர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை.

சிறுபான்மையினரான கத்தோலிக்கர்களைப் பிரதிநிதித்துவம் வகிக்கும் ஐரிஷ் தீவிரவாதிகள் அயர்லாந்துடன் வடஅயர்லாந்து மீண்டும் இணைக்கப்படவேண்டுமென்றும், பிரிட்டிஷ் முடியாட்சியின் சின்னம் தொடர்ந்தும் அங்கு இருப்பதை அனுமதிக்க முடியாது என்று கூறியதுடன் தமக்கு பூரண சுதந்திரம் வழங்கப்படவேண்டும் என்றும் கேட்டு போராட ஆரம்பித்தனர். அந்தப் போராட்டம்தான் இப்போது ஐரிஷ் குடியரசு இராணுவத்தால் முன்னெடுக்கப்படுகிறது.

### ஐ.ஆர்.ஏ.அறிவிப்பு

இப்போது தாம் நடத்தும் இந்தப் போராட்டத்தை கைவிடுவதாக ஐரிஷ் குடியரசு இராணுவமும், அதன் அரசியல் பிரிவான சின்பெயினும் (Sinn Fein) அறிவித்திருப்பது பிரிட்டனை தீவிரவாதத் தடைச்சட்டத்தை நீக்கத் தூண்டியுள்ளது. இந்தச் சட்டம் அமுலாகும்போது ஐரிஷ் தீவிரவாதிகள் தமது வீடுகளுக்குத் திரும்பமுடியும்.

பிரிட்டிஷ் பிரதமர் டோனிபிளேயர் ஐ.ஆர்.ஏயின்இந்த முடிவு வரலாற்றுச் சிறப்புவாய்ந்ததென்று புகழாரம் சூட்டியுள்ளார். ஆனால், அயர்லாந்து பிரதமர் பேட்டி அஹேறன், இலக்கை அடைவதற்கு இன்னும் கடின உழைப்புத் தேவை என்று கூறியிருக்கிறார்.

புரட்டாஸ்தாந்து மதத்தவரின் Democratic Unionists தலைவர் பெயிஸ்ஸி ஐ.ஆர். ஏயின் சொல்லும் செயலும் ஒன்றாக இருக்குமா? எனக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

பல்வேறு காலகட்டங்களில் ஒன்றுபட்ட அயர்லாந்தின் சுதந்திரம் சம்பந்தமாக நடைபெற்ற பேச்சுகள் தோல்வியிலேயே முடிவடைந்திருக்கின்றன.

2003 ஆண்டு இடம்பெற்ற





பேச்சுகளும், கடந்த ஆண்டு இடம்பெற்ற பேச்சுகளும் ஸ்தம்பித்துப் போனமையை இவற்றுக்கான அண்மைக்காலச் சான்றுகளாகக் குறிப்பிடலாம்.

தற்போது ஐ.ஆர்.ஏ தம்வசமுள்ள ஆயுதங்களைப் புதைப்பதற்கும், அவ்வாறு தமது ஆயுதங்கள் புதைக்கப்படுவதைப் பார்வையிட சுயாதீன சர்வதேச கமிஷன் ஒன்றுக்கு அனுமதிவழங்குவதற்கும் சம்மதித்துள்ளதாகத் தெரிகிறது.

ஆனால், ஐரிஷ் குடியரசு இராணுவம் தனது அமைப்பைக் கலைத்து விடுவதற்கோ அல்லது வன்முறைகள் நியாயமற்றவை என்று கூறுவதற்கோ மறுத்துவிட்டது.

இங்கே நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய ஒரு விடயம் உண்டு. விடுதலை இயக்கங்கள் தமது இலட்சியம் இறந்துபோக அனுமதிப்பதில்லை என்பதே அது.

## ஜெரி அடம்ஸ்



*லண்டனில் அல்குவைதா தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல்களின் அதிர்ச்சி, பிரிட்டனின் இதயத்தை அழுத்திப் பிடித்திருக்கும் இவ்வேளையில், தமது ஆயுதங்களைக் கீழே போடுவதாகவும், நிறுத்தி வைக்கப்பட்டுள்ள பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படவேண்டுமென்னும் ஐரிஷ் குடியரசு இராணுவம் அறிவித்த செய்தி டோனிபிளேயரின் வரண்ட தொண்டைக்குப் பால் வார்த்திருக்கிறது.*

*ஐ.ஆர்.ஏ. ஆயுதங்களைக் கீழே வைத்து ஜனநாயக, அரசியல் அபிவிருத்திப் பணிகளில் ஈடுபடுமாறு தனது போராளிகளைக் கேட்டிருக்கிறது.*

*வட அயர்லாந்தில் புரட்டஸ்தாந்து மக்களின் முக்கிய அரசியல் கட்சியான Democratic Unionists Party யின் தலைவரான இயன் பயஸ்லி, ஐ. ஆர்.ஏ. ஆயுதங்களைக் கீழே வைக்குமாறு போராளிகளைக் கேட்டுக்கொண்டுள்ளபோதும் தனது ஏனைய நடவடிக்கைகளை கைவிடுவதாக அது அறிவிக்கவில்லையே என அங்கலாய்க்கிறார்.*


*ஐரிஷ் குடியரசு இராணுவத்தின் அரசியல் பிரிவான சின்பெயினின் (Sinn Fein) தலைவர் ஜெரி அடம்ஸ் அயர்லாந்தின் தலைநகரான டப்ளினிலுள்ள ஹோட்டல் ஒன்றில் வைத்து ஆயுதங்களைக் கீழே போட்டு சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க உதவுவதற்கு தாம் முன்வைத்துள்ளதாக அறிவித்துள்ளார்.*

*சமாதான நடவடிக்கையின் கீழ் ஐரிஷ் குடியரசு இராணுவம் ஆயுதங்களைக் கீழே போடும் அதே சமயம் வட அயர்லாந்தில் இருந்து பிரிட்டன்தனது இராணுவத்தைத் திருப்பி அழைக்கவேண்டும் என்றும், ஒற்றுமையை வலுப்படுத்த வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார் அவர்.*

# காதலர்களிடம் ஏற்படும் சந்தேகமும் எதிர்காலம் பற்றிய சிந்தனைகளும்

கே:– வயது 16. பெண். நான் ஒருவரை காதலிக்கின்றேன். அவரைத்தான் திருமணம் செய்ய உத்தேசித்து உள்ளேன். ஆனால் ஒரு பிரச்சினை. அவர் அழகானவர். ஆனால், எதிலும் சோம்பலாக, ஆர்வமற்றவராக இருகின்றார். கூச்ச சுபாவமும் அதிகம். முன்னின்று ஒரு வேலையை பொறுப்பெடுத்து செய்வதில் ஆர்வமும் இல்லை. பயமும் கூட இருக்கிறது. நான் இவரைத் திருமணம் செய்து குழந்தை பிறந்தால் குழந்தை புத்திசாலியாக இருக்குமா அல்லது அவரைப்போல் சோம்பல், ஆர்வக்குறைவுடன் பிறக்குமா? உங்கள் பதிலில் தான் எனது முடிவு தங்கியுள்ளது?

ப:– உங்கள் வினாவைப்படித்ததும் – நான் அறிந்த ஒரு சம்பவம் நினைவுக்கு வருகின்றது. ஜோர்ஜ் பெனார்ட் ஷா என்ற பிரபல ஆங்கில கதாசிரியர் அறிவுமிக்கவர். ஆனால் அழகற்றவர். அவரை ஒரு அழகிய பெண் சந்தித்து தன்னை மணம் முடிக்கக் கேட்டாள். அழகற்ற தன்னை ஏன் அந்த அழகி திருமணம் செய்ய விரும்புகின்றாள் என்று காரணத்தைக் கேட்டார் பெனார்ட் ஷா. அதற்கு அவள் – தான் பெனாட்ஷாவை திருமணம் செய்து கொண்டால் தனக்கு தன்னைப்போல் அழகோடும், பெனார்ட்ஷாவைப் போல் அறிவோடும் குழந்தை பிறக்கும். அதுதான் காரணம் என்றாள். நகைச் சுவை உணர்வுமிக்க பெனார்ட்ஷா – கலகலவென சிரித்துக் கொண்டு, ''அம்மணி – பிறக்கும் குழந்தை – என்னைப் போல் அழகோடும், உன்னைப் போல் அறிவோடும் பிறந்தால் என்ன ஆவது'' – என்றார். அந்த அழகி வாயடைத்து நின்றாள். இது போல் தற்செயலாக உங்களிருவரினதும் திருமணத்தின் பின்னர் பிறக்கும் குழந்தை நீங்கள் விரும்புவரைப் போன்ற அழகோடும் – உங்கள் அறிவோடும் பிறக்கும் சந்தர்ப்பம் வரலாம் அல்லவா?



காதல் என்பது எப்படி ஏற்படுகின்றது என்பதை இன்னும் விஞ்ஞானம் சரியாகக் கண்டறியவில்லை என்றே சொல்லலாம். இரு எதிரெதிர் ஹோர்மோன்களின் இழப்பு சக்தி என்று உடலியல் விஞ்ஞானிகளும், எப்படி காந்தத்தின் எதிரெதிர் முனைகளில் ஒரு காந்தக் கவர்ச்சி ஏற்படுகின்றதோ அது போல் ஒரு ஆணுக்கும் பெண்ணுக்கும் உள்ள வித்தியாசமான உணர்வுகள், விருப்பங்கள்? ஆசைகள், பாவனைகள் என்பவற்றின் கவர்ச்சியின் பிரதிபலிப்புதான் காதல் என்று சமூக விஞ்ஞானிகளும் கருத்து பகிர்கின்றார்கள்.

இப்படி இரு எதிர் முனைகளான உங்கள் இருவருக்குமிடையே ஏற்பட்டதுதான் உங்கள் காதல். எனவே காதல் பற்றி ஒரு தீர்மானத்திற்கு வந்த பின்னர் ஏன் இந்த மாதிரியான – எடக்கு முடக்கான கேள்வி மனதில் உருவாகிறது?

சரி – ஒரு மனிதனின் ஆர்வம், சோம்பேறித்தனம், தலைமைத்துவம், குணாதிசயங்கள் எல்லாம் சிறுவயதிலிருந்து அவன் வளரும் சூழலில் தான் தங்கியுள்ளன. ஏதோ ஒரு இக்கட்டான சூழலில் உங்கள் காதலர் வளர்ந்திருக்கலாம். அதனால்தான் இந்த ஒதுங்கும் சுபாவம், பயம், முன்னேறத் தயக்கம் என்பன ஏற்பட்டிருக்கும். இதனை ஒருவகையான (INFERIORITY COMPLEX) தாழ்வு மனப்பான்மை என்றே கூறலாம். ஒரு மனோதத்துவ வைத்தியரிடம் உங்கள் காதலரை அழைத்துச் சென்று இதற்குரிய சிகிச்சை பெறுதல் நல்லது. இந்த சிகிச்சையில் மருந்து மாத்திரைகள் இருக்க மாட்டாது. நோயாளியின் பிரச்சினையை மனோதத்துவ நிபுணர் – நோயாளி மூலமே அறியச் செய்து, புரிய வைத்து, தைரியமூட்டி, அவரது பழக்கவழக்கத்தை மாற்றும் மனோ பயிற்சிகளை சொல்லிக் கொடுப்பார். எனவே பயமின்றி அழைத்துச் செல்லுங்கள்.

அடுத்த படியாக, இம்மாதிரியான குண நலன்கள், சில நோய்களைப்போல் – உதாரணமாக நீரழிவு, கண் குருட்டுத்தன்மை, நிறப்பார்வை குறைவு (COLOR BLINDNESS) போன்ற நோய்கள் போல் பரம்பரை காரணிகளால் – தலை முறை தலைமுறையாகக் கொண்டு செல்லப்படுவதில்லை என்பதை நான் உங்களுக்கு உறுதியாக கூற முடியும். எனவே திருமணம் செய்வதற்கு எதுவித தடையுமில்லை.

கே:– எனது மகனுக்கு வயது 3 வருடங்களாகின்றது. அவர் மூச்செடுத்து அழும்போது ஆண் உறுப்புக்கு அருகில் இரண்டு கட்டிகள் ஏற்படுகின்றன. சாதாரணமான நேரத்தில் அவ்வளவாகத் தெரிவதில்லை. மருத்துவர் ஒருவரிடம் காட்டியபோது இது அண்டவாயு சத்திரகிசிச்சை செய்ய வேண்டுமென்றார். எனது மகனுக்கு இந்த நோய் ஏற்பட்டது ஏன்? சத்திரசிகிச்சையின்றி குணமாக்க முடியுமா?

ப:– இதனை ஆங்கிலத்தில் INGUINAL HERNIA (ஹேர்னியா) அல்லது குடலிறக்கம் என்று சொல்லலாம். குழந்தை கருப்பையில் வளரும் போது ஆண் குழந்தையின் விதை (TESTIS) வயிற்றறையில் உருவாகி – பிறக்கும் தறுவாயில் மெல்ல மெல்ல கீழிறங்கி – விதைப்பையினுள் வருகின்றது. இந்த விதை செல்லும் பாதை சில வேலைகளில் அடைபட்டுப் போகாமல் திறந்தே இருக்கின்றது. இப்படியான குழந்தைகளுக்கு இந்த பாதையினூடாக வயிற்றறையில் உள்ள உணவுக் குழாயின் ஒரு பகுதி – முக்கி இருமும் போதோ – அழும்போதோ – வெளியே தள்ளப்படுகிறது இதனைத்தான் குடல் இறக்கம் என்பார்கள்.

இந்த குறைபாடுதான் உங்கள் மகனுக்கு ஏற்பட்டுள்ளது. சிறியதொரு சத்திரசிகிச்சை மூலம் இந்த பாதையை தடைசெய்து கட்டுப் போடுவதால் – இக்குறையை தீர்க்கமுடியும். வேறு சிகிச்சைமுறைகள் பலனளிக்க மாட்டா.

**கே:– ஆண். வயது 16. எனது வலது மார்பகத்தில் சிறிய கட்டி அடிக்கடி ஏற்படுகின்றது. சில நாட்களில் அது இல்லாமல் போய்விடும். மார்பகமும் சிறிது பெருத்து இருக்கின்றது. இது பற்றி உங்கள் கருத்தை வேண்டுகின்றேன்.**

ப:– அடிக்கடி ஏற்பட்டு, அடிக்கடி மறைந்து போகும் மார்பகத்தில் உள்ள கட்டி, அநேகமாக தீதுதரக்கூடிய ஒன்றல்ல. எமது சருமத்தில் உள்ள SEBACEOUS சுரப்பிகள் அடைபட்டு கட்டிகள் போல் வீங்கலாம். சிறிது நாட்களின் பின்னர் வீக்கம் குறைந்து ஒரு குண்டுமணி அளவில் சிறுகி – மறையலாம். திரும்பவும் சுரப்புகள் கூடும்போது மறுபடியும் வீங்கலாம். எனவே ஒரு வைத்தியரிடம் கட்டி வீங்கி இருக்கும்போது காட்டுங்கள். நான் நிதானித்தது போன்று SEBACEOUS எண்ணெய் கட்டியாக இருந்தால், வெளிநோயாளர் பிரிவிலேயே, சிறிய சிகிச்சை மூலம் அவர் அகற்றிவிடுவார்.

அடுத்ததாக உங்கள் மார்பகம் பெருப்பதாக கூறியிருந்தீர்கள். இந்த வளர் இளம்பராய ADOLESCENT வயதில், பால் ஹார்மோன்கள் (SEX HORMONES) சுரக்கும் காலம், ஆண்களுக்கு TESTOSTERONE ஹோர்மோன்களும் இந்தக் காலத்தில் சுரக்கின்றன. ஆனால் ஆண்களுக்கு ஒரு குறைந்த அளவில் ஈஸ்ரொஜன் ஹோர்மோனும் பெண்களுக்கு ஒரு குறைந்த அளவில் டெஸ்டோஸ்ரீரோன் ஹோர்மோனும் சுரப்பது வழக்கம். ஏதோ ஒரு காரணத்தால் ஆண்களுக்கு சுரக்கின்ற பெண்களின் சுரப்பு அதிகமானால், பெண்மைக்குரிய உளப்பண்பும் உடல் வாகையும் ஆணுக்கு ஏற்படலாம். இதில் ஒன்றுதான் மார்பகம் பெருத்தல். இதனை GYNAE COMASTIA கைனோ கொமஸ்ரியா – என்பர். இப்படி மார்பகம் அதிகளவில் பெருப்பது ஒரு குறிப்பிட்ட காலம் வரைதான். அதன் பின்னர் இந்த பெண்மை சுரப்பு தானாகவே குறைந்துவிடுகிறது. ஆனால் பெருத்த மார்பகம் அப்படியே இருந்துவிடுகின்றது. இதனை சத்திரசிகிச்சை மூலமாகத்தான் பருமனைக் குறைத்து பழைய நிலைக்கு கொண்டுவர முடியும்.



இலவச மருத்துவ ஆலோசனைகளை
'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார்
டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
நீங்கள் கேள்விகளை
அனுப்பவேண்டிய முகவரி
இலவச மருத்துவ ஆலோசனை
'சுடர் ஒளி'
85, ஜயந்தமல்லிமாராச்சி மாவத்தை
கொழும்பு – 14

# ஸ்ரீலங்காவின் மதமாற்றத் தடைச்சட்டமும் அமெரிக்காவின் தலையீடும்

மதமாற்றத் தடைச் சட்டத்தை நாட்டில் அமுல்நடத்துவதற்கு ஸ்ரீலங்கா அரசாங்கம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் பற்றி அமெரிக்கா ஆழ்ந்த கவலையை வெளியிட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேனாட் குணத்திலங்காவைச் சந்தித்த அமெரிக்க ராஜாங்கச் செயலாளர் கிறிஸ்டினா றொக்கா, மதத்தைச் சட்டமாக்க முடியாதென்றும், ஸ்ரீலங்காவின் இப்படியானதொரு நடவடிக்கை எதிர்பார்க்காத ஒன்று என்றும் தெரிவித்துள்ளார்.

இதற்கான மசோதா நிறைவேற்றப்படமாட்டாது என இலங்கை அரசு வாக்குறுதி அளித்துள்ளதையும் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவருக்கு அவர் நினைவுபடுத்தினார்.

''அமெரிக்க செனட்டர்களும், காங்கிரஸ் பிரதிநிதிகளும் ராஜாங்கத்திணைக்களத்துக்கு வருகைதந்து இலங்கை அரசாங்கத்தின் குறிப்பிட்ட விடயம் சம்பந்தமான நடவடிக்கை பற்றி முறையிடுகின்றனர். நெருக்கடி சிறிது சிறிதாக அதிகரித்துவருகிறது. ஸ்ரீலங்காவுக்கு அமெரிக்கா வழங்கும் உதவியிலும், வரிச்சலுகைகளிலும் இவ்விடயம் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.''-இவ்வாறு றொக்கா மேலும் தெரிவித்திருக்கிறார்.

பௌத்த சாசன அமைச்சர் ரட்ணசிறி விக்ரமநாயக்க கடந்தஆண்டு ஒக்டோபர் மாதம் இது தொடர்பான சட்ட வரைவுக்கு அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெற்றிருந்தார்.

இப்போது தயாரிக்கப்பட்டுள்ள சட்டவரைவின்படி ஒருவரை மதம் மாற்றுவதும், மதம்மாற மறுக்கும் ஒருவருக்குத் தண்டனை வழங்குவதும், மதமாற்றத்துக்காக நிதியை வைத்திருப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட செயற்பாடுகளில் ஈடுபடும் ஒருவர் நீதிமன்றம் ஒன்றினால் குற்றவாளியாகக் காணப்படுமிடத்து அவருக்கு ஐந்து வருடத்துக்குக் குறையாத சிறைத்தண்டனை வழங்கவும் அவரிடமிருந்து 1,00,000 ருபா வரையிலான தண்டப்பணம் அறவிடவும் இந்தச் சட்ட வரைவு வகைசெய்கிறது. வயது குறைந்த ஒருவருக்கெதிராக இத்தகைய குற்றமிழைக்கும் ஒருவருக்கு 7 வருடச் சிறைத்தண்டனையுடன் **5,00,000 ருபா அபராதமும் விதிக்கப்படும்.**

ஒரு பாடசாலையில், ஒரு உயர்கல்வி நிலையத்தில், பொலிஸ் அல்லது படையினரின் கட்டுப்பாடுள்ள பகுதியில், அகதிமுகாமில், ஆஸ்பத்திரியில், குழந்தைகள், வயோதிபர், நோய்வாய்ப்பட்டோர் ஆகியோருக்கான நிலையங்களில் இத்தகைய குற்றத்தைப் புரியும் ஒருவருக்கு தண்டனை வழங்கும்போது அவர் குற்றம் புரிந்த பாதிப்புக்குள்ளான சூழ்நிலை கவனத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் எனவும் குறிப்பிட்ட சட்டவரைவு மேலும் கூறுகிறது.

இத்தகையதொரு குற்றம் ஒரு குழுவினரால் இழைக்கப்பட்டால் இந்தக் குற்றத்தைத் தாம் இழைத்ததாக அவர்கள் நிரூபிக்கத் தவறின் அந்தக் குழுக்களிலுள்ள அனைவருமே குற்றவாளிகளாகக் காணப்படுவர்.

# திருமணம் எப்போது?

விம்பிள்டன் டெனிஸ் போட்டியில் 'ஹாட்ரிக்' சாதனை படைத்து முதல்நிலை வீரராக திகழ்ந்து வருபவர் ரோஜர் பெடரர்.



சுவிட்ஸர்லாந்து நாட்டைச் சேர்ந்த இந்த பிரபல வீரரின் காதலி தான் மிரோஸ்லாவா வார்வினிக். இவரும் ஒரு டெனிஸ் வீராங்கனைதான்.

பெடரேஷன் கிண்ணம் மற்றும் இந்த ஆண்டு 'ஜூனியர்' அவுஸ்திரேலியப் பகிரங்க டெனிஸ் போட்டி ஆகியவற்றில் கலந்து கொண்டு வெற்றி பெற்றுள்ளார். இவர் 2000ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிக்கான சுவிட்ஸர்லாந்து அணியிலும் இடம்பிடித்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஸ்லோவாக்கியா நாட்டில் பிறந்த இவர் தனது 2 வயதிலேயே சுவிட்ஸர்லாந்துக்கு வந்துவிட்டார்.

வார்வினிக் சுவிட்ஸர்லாந்து அணியில் இடம்பெற்றதுமே ரோஜர் பெடரருக்கும் அவருக்கும் இடையே மனதளவில் காதல் நுழையத் தொடங்கிவிட்டது.

அன்றிலிருந்து இன்று வரை கடந்த 5 ஆண்டுகளாக இவர்களின் காதல் நீடித்து வருகிறது.

இந்த நிலையில் இவர்களின் காதல் எப்போது திருமணத்தில் நிறைவடையப் போகிறது என்பதுதான் இன்னும் தெரியவில்லை.

காதலர்களுக்குள் செல்லப் பெயர் இல்லாமலா இருக்கும். வார்வினிக்கை, ரோஜர் பெடரர் 'மிர்கா' என்று செல்லமாக அழைக்கிறார்.

# காலபந்தில் 'ரீ – பிளே' வேண்டாம் ஜாம்பவான் பீலே கூறுகிறார்

கிரிக்கெட்டில் பிரட்மன் எவ்வளவு பெரிய ஜாம்பவானாகத் திகழ்ந்தாரோ அந்த அளவிற்கு கால்பந்தில் ஒரு காலத்தில் கொடி கட்டிப் பறந்தவர் பிரேசிலின் பீலே.



தற்போது 64 வயதாகும் பீலே கால்பந்து உலகிலிருந்து விலகினாலும் இந்த வயதிலும் அந்த விளையாட்டின் வளர்ச்சியில் அக்கறை கொண்டவராக இருக்கிறார். அதற்காக கால்பந்து அமைப்புகளில் பங்கு கொண்டு பணியாற்றுகிறார்.

தற்போது எல்லா விளையாட்டுக்களிலும் தொழில்நுட்பம் புகுந்திருக்கிறது. கிரிக்கெட்டில் 'ரீ – பிளே' பார்த்து நடுவர் முடிவெடுப்பதுபோல, கால்பந்திலும் நடுவருக்கு சந்தேகம் வந்துவிட்டால் அவர் தொலைக்காட்சியில் 'ரீ – பிளே' பார்த்து முடிவெடுக்கும் வசதி அறிமுகப்படுத்த பரிசீலனைகள் நடந்து வருகின்றன. இது சரியா? என பீலேவிடம் கேட்டபோது, அதை தாம் விரும்பவில்லை என்று அவர் கூறினார்.

''நவீன தொழில்நுட்பங்களை தொலைக்காட்சியில் புகுத்துவது சரிதான். ஆனால், அதில் 'ரீ – பிளே' பார்த்து முடிவெடுப்பது எல்லாம் கால்பந்திற்கு ஒத்துவராது. ஆட்டத்திற்கு இடையில் இடைவெளி விட்டு முடிவுக்காக காத்திருக்க முடியாது. கால்பந்தாட்டம் இடையில் நிறுத்தம் இல்லாமல் தொடர்ச்சியாக விளையாடக்கூடிய விளையாட்டு'' என்கிறார் பீலே.

கடந்த வாரம் அமெரிக்காவில் நடைபெற்ற ஸ்டான்போர்ட் டெனிஸ் தொடரில் பெல்ஜிய வீராங்கனை கிலிஜஸ்டர்ஸ் சம்பியன் பட்டம் வென்றார். இறுதியட்டத்தில் இவர் விம்பிள்டன் சம்பியன் வீனஸ் வில்லியம்ஸை 7–5, 6 –2 என்ற செட்களில் வீழ்த்தினார். வீனஸின் ஆட்டதின் ஒரு அதிரடிக் காட்சியைப் படத்தில் காண்க.



## விளையாட்டுச் செய்திகள்

ஷெனாயா

## சொற்சிலம்பம் போட்டி இல. 172

சொற்சிலம்பம் 172 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பிவைக்கவேண்டிய கடைசித்தினம் ஆகஸ்ட் 13 ஆம் திகதி ஆகும். விடைகள் ஆகஸ்ட் 21ஆம் ஆம் திகதி சுடர் ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகஸ்ட் 28ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.170க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.

தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250ரூபாவும், இரண்டாவது பரிசாக 150ரூபாவும், மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிர்ஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

**அனுப்ப வேண்டிய முகவரி:**
'சுடர் ஒளி'
85,ஜெயந்தமல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14.

## சொற்சிலம்பம் போட்டி இல. 172

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | ■ | 11 | 12 | | |
| 13 | | | 14 | ■ | 15 | | ■ |
| | ■ | 16 | | 17 | | ■ | 18 |
| 19 | 20 | ■ | 21 | | ■ | 22 | |
| ■ | 23 | 24 | | | 25 | ■ | |
| 26 | | | ■ | 27 | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.170

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 பா | 2 த | 3 க | ம் | ■ | 4 அ | 5 வ | 6 தி |
| 7 யா | ச | ம் | ■ | 8 ச | க | ட | ம் |
| 9 ச | ம் | ப | ந் | த | ன் | ■ | பு |
| ம் | ■ | ள | ■ | 10 க | ற | 11 வை | ■ |
| ■ | 12 சி | ம் | 13 ம | ம் | ■ | 14 கா | 15 வி |
| 16 மு | றி | ■ | தி | ■ | 17 ஆ | ரி | யா |
| 18 க | ய | ல் | ■ | 19 க | வ | ■ | ழ |
| 20 தா | து | ■ | 21 அ | ட | ம் | ப | ன் |

## சொற்சிலம்பம் போட்டி இல.172

### இடமிருந்து வலம்

1. அளவுக்கு மிகுதியாக.
6. காயத்தின் அடையாளம் / தழும்பு.
7. எரிந்த பின் மிஞ்சுவது.
8. சேர்.
9. முட்டாளை இப்படி அழைப்பர்.
11. இயல்பு / ஒருவரின் தன்மை.
13. திடீரென ஏற்படுவது.
15. சென்னி.
16. வயிற்றில் சுரப்பது / சமிபாட்டுடன்தொடர்புடையது.
19. நெருப்பில்லாமல் இது வருமா?
21. மூன்று / விளக்கில் எரிவது.
22. இசைப்பாட்டு.
23. விவரத்தை வெளியிடுதல்.
26. முழங்கும் தோற்கருவி.
27. வாக்குச் சீட்டில் போடுவது.

### மேலிருந்து கீழ்

1. மரியாதை கெடுத்தல்.
2. தூங்கும் இடம்.
3. அதிக / கூட.
4. சாகுபடி செய்யப்படாத நிலம்.
5. புண்ணிய இடம்.
8. தூக்கம் / சோகம்.
10. சிறிய குடுவை.
12. கால்.
14. மகள்.
17. நிறுத்தும் இடம்.
18. முகம் பார்க்க உதவும்.
20. இயலாது எனக் கூறும் பதிலை இப்படிச் சொல்வர்.
24. ரகம் / விதம்.
25. பறவை.

## சொற்சிலம்பம் போட்டி இல. 169

1. திருமதி ப.கமலாதேவி
   40/2, கலைமகள் வீதி,
   அரியாலை, யாழ்ப்பாணம்.
2. எ.ஆர்.எம். ரிஷாட்
   இல. 91/1A, 1/1, ஹில் ஸ்ரீட்,
   தெஹிவளை.
3. திருமதி எஸ்.ஹமீட்,
   "C", 2/2,
   எல்விட்டிகல தொடர்மாடி,
   கொழும்பு – 08.

### பாராட்டுப் பெறுவோர்

1. திருமதி எஸ்.சிவசோதி
   150, நாவலர் வீதி,
   யாழ்ப்பாணம்.
2. சி.மயூரி
   2006 கலைப்பிரிவு,
   கிளிநொச்சி மத்திய கல்லூரி,
   கிளிநொச்சி.
3. இ.யூஜினாமரியா
   85/4, மவுண் கார்மல் வீதி,
   குருநகர், யாழ்ப்பாணம்.
4. வ.துரைராஜா
   22--3/1, மூர் வீதி, வெள்ளவத்தை.
5. எஸ்.கி.வதனி
   இல. 249/9,
   யோகா பரிசோதனை நிலையம்,
   நீர்கொழும்பு வீதி, வத்தளை.
6. திருமதி வை.டி.மூர்த்தி
   4, முருகன் பிளேஸ்,
   ஹவ்லொக் றோட், கொழும்பு 6.
7. கு.கஜேந்தினி
   இல, 403, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி.
8. எஸ்.வசந்தி
   இல.56, கண்ணகிபுரம், ஓர்ஸ் ஹில்,
   திருகோணமலை.
9. த.மைதிலி
   பருத்தித்துறை, சாரையடி,
   புலோலி தெற்கு, புலோலி.
10. எம்.நாகேந்திரன்
    நியூபெராடைஸ்,
    09, கவுடுபெலெல்ல, மாத்தளை.

# காதல் தோல்விக்கு தற்கொலை தீர்வே அல்ல...!

மொட்டாகி, அரும்பாகி, மலராவது தான் காதல் என்கின்றனர். இப்படி உருவாக்கம் பெற்ற காதலை யாராலும் அழிக்க முடியாது என்றுதான் கூறவேண்டும். ஐந்தறிவு கொண்ட ஜீவன் தொடக்கம் ஆறறிவு கொண்ட மானிடன் வரை காதல் கொள்ளத்தான் செய்கின்றார்கள். இதனை தடுக்கவோ அல்லது வெறுக்கவோ முடியாது அல்லவா!

சுடர் எரியும் நெருப்பில் நெய்யை ஊற்றினால் என்னவாகும். நெருப்பு அணைய மறுக்கும். சுடர் மேலும் அதிகரிக்கும். இதே போன்றதுதான் காதல்! ஒருவர் உள்ளம் காதல் வயப்பட்டால் ஆலமர விருட்சம் போல இருக்கும். நகமும் சதையும் என்றுகூட கூறலாம். இப்படிப் பிரிக்க முடியாது இருக்கும்!

ஆகவே, நாம் காதலை கொச்சைப் படுத்தவோ அதன் புனிதத்துவம் கெடவோ ஒருபோதும் இடம் கொடுக்கக் கூடாது. எவருக்கும் காதல் வரலாம். பலவந்தமாக திணிக்கும் ஓர் பொருள் இல்லை காதல்.

காதலிக்கத் தெரியாதவர்களே காதலுக்கு வேறுபட்ட விதத்தில் அர்த்தம் கற்பிக்கின்றனர். இவ்வாறான நிலைமாற வேண்டுமாயின் காதலின் தனித்தன்மையை உணர்ந்து அதன் புனிதத்துவம் கெடாது காதலிப்பவர்கள் நிதானமான ஒழுங்கமைப்புடன் காதலிக்கத் தவறக்கூடாது.

"காதலித்துப் பார்.... உன்னைச் சுற்றி ஒளிவட்டம் தோன்றும்!" - என்றார் கவிஞர் வைரமுத்து. இது முற்றிலும் காதலித்து அனுபவித்தவர்களுக்கு புரிந்து விடும். நாம் செலுத்தும் அன்பு ஒருவருக்கு ஒருவர் வேறுபட்டது. காதலிக்கும் ஆணோ, பெண்ணோ அடுத்தவர் பார்த்து சீ! என்ன அசிங்கமடா என்று கண்ணை மூடிக்கொள்ளும் அளவுக்கு காதலை கொச்சைப்படுத்தக் கூடாது. சமுதாயத்தில் நாம் ஓர் அங்கம். அவ்வளவு தான். நாம் இரு கண்களால் மட்டும்தான் இச்சமுதாயத்தைப் பார்க்கிறோம். ஆனால், எம்மை ஆயிரம் கண்கள் பார்க்கின்றன என்பதை எம் சுய உணர்வுடன் நாம் நோக்க வேண்டும். பொது இடங்களில் எல்லை மீறி நடக்கக் கூடாது என்பது காதலர்களின் பொது



விதி! ஆனால் இதனையும் மீறி அநாகரிகமான முறையில் நடப்பவர்கள் தங்கள் நிலையை பற்றிச் சிந்திக்காது நடக்கின்றனர். இந்நிலைமாற வேண்டுமல்லவா...!

நான்கு சுவருக்குள் நடப்பதை நாம் காதல் என்னும்போர்வையில் சிக்கி ஏன் அரங்கேற்றவேண்டும். இவ்வாறு செய்வது காதலை மாசுபடுத்துவது போன்ற செயல் அல்லவா! காதலை குறைகூற முடியாது. ஆனால் காதலிப்பவர்கள் புரிந்துணர்வுடன் நடக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

எமது இதிகாசகாதலர்களை இன்றும் போற்றுகிறார்களே ஏன்? எதனால்? என்பதையும் நாம் சிந்திக்கவேண்டும். அவர்கள் காதலர்களாக மட்டும் இறக்கவில்லை! காதலின் மகத்துவத்தை உணர்த்திவிட்டு மாய்ந்துவிட்டார்கள். இன்றைய வரம்பு மீறிய காதலர்களாக அவர்களும் வாழ்ந்திருந்தால் அவர்களின் பெயர்களை நாம் இன்னும் கூறத்தான் முடியுமா? எமக்குப்பின்பு இன்னும் ஒரு சமுதாயம் உதயமாகப்போகிறது என்று ஒவ்வொரு காதலரும் நினைத்து நடந்துகொண்டால் நிச்சயம் காதலின் புனிதத்துவம் அழிந்துவிடாது. ஆகவே, காதல் புனிதமானது. தெய்வீகமானது. அதனை மாசுபடுத்தி விடாதீர்கள்! காதலிக்கும் காதலர்களுக்கு இவ் அம்மணியின் வேண்டுகோள்! காதல் தோல்வி என்றதும் தற்கொலையை நாடக்கூடாது. தற்கொலை இதற்குத் தீர்வே அல்ல. காதலிக்கும்போதே ஒருவரையொருவர் புரிந்துகொண்டு மனம் திறந்து பேசுங்கள். உடனுக்குடன் உங்கள் பிரச்சினையை தீர்த்துக்கொள்ளுங்கள் காதலன் வாங்கிக்கொடுப்பதை காதலி உண்டுவிட்டு காதலி வாங்கிக்கொடுப்பதை காதலன் உண்டுவிட்டு இடையில் விட்டுச்செல்வது இல்லை காதல். உங்கள் காதல் வெற்றிபெற்று கடைசி அத்தியாயமான திருமண பந்தத்தில் இணையவேண்டும்.

எனவே, ஒவ்வொரு காதலரும் வரட்டுப் பிடிவாதத்தை விட்டொழித்து நான்குபேர் மத்தியில் நாகரிகத்துடன் நடந்து உங்கள் தெய்வீக காதலை பலரும் போற்றும்படி செய்யுங்கள். நிச்சயம் ஒளிமயமான வாழ்வு உங்களைத் தேடிவரும் என்பது நிதர்ஷன உலகின் நிஜமே!

## பெண் — மீரா சுதர்சன்

### வாரம் ஒரு குளிர்பானம்




**தேவையான பொருட்கள்:-**

நெல்லிக்காய்—20
சீனி—2 கப்
தண்ணீர்—1 கப்
கலரிங்(பச்சை)—சிறிதளவு
சிட்ரிக் அசிட்—1 டீஸ்பூன்.

**செய்முறை:-**

நெல்லிக்காயை கழுவித் துடைத்து, ஆவியில் சிறிது நேரம் வேகவைத்து எடுங்கள். ஆறியதும் கொட்டைகளை நீக்கி, மிக்ஸியில் நன்கு அரையுங்கள். சர்க்கரையுடன் தண்ணீர், சிட்ரிக் அசிட் கலந்து அடுப்பில்வைத்து சர்க்கரை கரையும்வரை கொதிக்கவிடுங்கள். பின் இறக்கி நெல்லிக்காய்விழுது சேர்த்து வடிகட்டி ஆறவிடுங்கள். ஆறியதும் கலர் பவுடர் கலந்து போத்தல்களில் ஊற்றி பிரிஜ்ஜில் வையுங்கள். தேவையானபோது எடுத்து தண்ணீர் கலந்து உபயோகிக்கலாம்.

### அழகு டிப்ஸ்

*முட்டை வெண்கருவுடன் அரை டீஸ்பூன் தேன் கலந்து முகத்தில் இருபது நிமிடம் ஊறவையுங்கள். பிறகு குளிர்ந்த தண்ணீரில் முகத்தைக் கழுவுங்கள். வாரம் இரு முறை செய்தாலே போதும். பளிச்சென்று வித்தியாசம் தெரியும்.

*இரண்டு டேபிள் ஸ்பூன் மஞ்சள் தூள், அதே அளவு ஆரஞ்சு ஜூஸ் கலந்து முகத்தில் பூசிக்கழுவினால் மாசுமறுவற்று, பூனைமுடிகள் அகன்று முகம் பளபளக்கும்.

# பெண்ணிற்கு முழுமை தாய்மை



பிரசவ வேதனை என்பார்களே.... எப்படி இருக்கும் என்பதை அனுபவித்துப் பார்த்தால் தான் உணரமுடியும். வலியால் துடி துடித்து மருத்துவச்சியால் பிரசவம் பார்த்த காலம் மலையேறி விட்டது.

ஒரு பெண் எப்போது முழுமையடைகின்றாள்? 'தாய்மை' என்ற ஸ்தானத்தை அடையும் போதுதான். அதற்காக அவள் பலவிதமான சோதனைகளை தாங்க வேண்டியிருக்கிறது. ஓர் ஆண், ஒரு பெண்ணை கைபிடிக்கும்போது, ஒருவருக்கொருவர் சுகத்திலும், துக்கத்திலும் பங்கேற்க வேண்டும் என்று உறுதி செய்கிறார்கள்.

ஆனால், ஓர் ஆண் அந்த பெண்ணிற்கு 'தாய்மை' என்ற ஸ்தானத்தை அளிக்க முடியுமே தவிர, அதில் ஏற்படும் பலவிதமான கஷ்டங்களில் பங்கேற்க முடியாது. அது இயற்கையும் கூட.

ஒரு பெண் தான் கருவுற்றிருப்பது உறுதியான நேரத்தில் இருந்து அந்த குழந்தையைப் பெற்றெடுக்கும் வரை பலவிதமான சோதனைகளை அனுபவிக்கிறாள். அவள் இறந்து பிறக்கிறாள் என்றே சொல்லலாம். இதனால்தான் பெரியவர்கள் ஒரு பெண் பிரசவம் முடிந்து தாயும், சேயும் நலமாக வீடு திரும்பும் பொழுதும், 'புனர்ஜென்மம்' என்று கூறுகிறார்கள்.

பொதுவாக கருவுற்றிருக்கும் நேரத்தில், அந்த பெண்ணிடம் பிரசவ வலி என்பது மிகவும் கஷ்டமான ஒன்றுதான் ஆனால், அதைத் தாங்கித்தான் ஆக வேண்டும் என்று பெரியவர்கள் கூறுவது உண்டு. இதைக் கேட்டுக் கேட்டு அவள் மனதளவில் தன்னை தயார்ப்படுத்திக் கொள்கிறாள்.

எத்தனையோ பேர் குழந்தைப் பேறின்றி அவதிப்படுகிறார்கள். ஆனால், இப்பொழுதெல்லாம் 'சோதனைக் குழாய் மூலம் குழந்தை கருவுற்றாலும், பிரசவத்தின்போது அப் பெண் அந்த பிரசவ வலியை தாங்கியே ஆக வேண்டும். ஆனால், இந்த வலியும் வேதனையும் இன்றி வெளிநாட்டுப் பெண்கள் குழந்தை பெற்றுக் கொள்கிறார்கள். இது எப்படிச் சாத்தியம்? வலியில்லாமல் குழந்தை பெறுவதா? எப்படி முடியும்? என்று கேட்கிறீர்களா? கண்டிப்பாக முடியும் என்கின்றார் இந்திய மகப்பேறு மருத்துவ நிபுணர் டாக்டர் மனுலட்சுமி. 'எபிடியூரல் வலிநீக்கி' என்ற புதிய முறையால் வலியில்லாமலேயே சுகப்பிரசவம் சாத்தியமே என்கிறார்.

"பிரசவத்தின் போது கருப்பை சுருங்கி விரிவதனால் அதன் வாய்ப் புறம் மெதுவாக நெகிழ்ந்து திறக்கிறது. திறந்த கருப்பை வழியாக குழந்தை வெளியே வருகிறது. கருப்பை சுருங்கும்போது இடுப்பிலும், அடிவயிற்றிலும் பெண்களுக்குக் கடுமையான வலி ஏற்படுகிறது. இந்த வேதனை முதலில் குறைந்தும், போகப் போக மிகுந்தும் காணப்படுகிறது.

இந்தவலி முதல் பிரசவத்தின்போது 8 இலிருந்து 12 மணி நேரமும் நீடிக்கும். எபிடியூரல் வலிநீக்கி(EPIDURAL ANALGESIA)என்ற நவீன மருத்துவ சிகிச்சை பல வருடங்களாக வளர்ந்த நாடுகளில் வெற்றிகரமாக கையாளப்பட்டுவருகிறது. முதுகுத் தண்டில் ஒரு சிறிய ஊசிமூலம், ஒரு சிறு நூல் போன்ற பிளாஸ்டிக் குழாயை இணைத்து அங்குள்ள உணர்வு அறிவிக்கும் நரம்புகளை செயலிழக்கச் செய்வதே இந்த எளிய முறையாகும். இதனால் பிரசவவலி தாய்மார்களால் உணரப்படுவதில்லை.


ஊசி போட்டால் எவ்வளவு நேரம் வலி தெரியாது என்று கேள்வி எழலாம். பிரசவ வலி ஏற்பட்டது தொடக்கம் குழந்தைப்பேறு முடியும் வரை அவ்வப்போது மருந்து செலுத்துவதன் மூலம் நீண்ட நேரம் வலியில்லாமல் இருக்கச் செய்ய முடியும்.

குழந்தைக்கும், தாய்க்கும் இதனால் எந்த வித பாதிப்பும் ஏற்படாது. இந்த முறை பாதுகாப்பானது."

—இவ்வாறு மருத்துவ நிபுணர் குறிப்பிட்டார்.

கர்ப்பகாலத்தின் போது உணவு முறையில் மிகவும் கவனமாக இருத்தல் வேண்டும். எளிமையான ஊட்டச்சத்துள்ள உணவுகளை உண்ணுதல் வேண்டும். வயிற்றில் உள்ள சிசுவுக்கும் சேர்த்து உணவு உட்கொள்ளல் வேண்டும். மற்றும் ஆடைகளை இறுக்கம் இல்லாமல் அணிதலுடன் கர்ப்பகாலத்தில் வீட்டு வேலைகளையும் செய்தல் எளிமையான உடற்பயிற்சி ஆகும். அத்துடன் வசதியான குளியல் தொட்டிகளைப் பயன்படுத்தி சுத்தமான நீர் கொண்டு குளித்தல் வேண்டும். வெதுவெதுப்பான நீரில் தினம் குளிப்பது மிகவும் நல்லது என்பர். மற்றும் முக்கிய பராமரிப்பாக மார்பகக் காம்புகளை தினமும் சோப்பு நீர்கொண்டு கழுவ வேண்டும்.

கர்ப்பகாலத்தின் போது மது, புகை என்பவற்றை தவிர்த்தல் வேண்டும். கருத்தரித்த முதல் மூன்று மாதத்தில் கட்டாயம் இரத்த அழுத்தம், எடை, உயரம் போன்ற மருத்துவப் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும். மூன்று மாதத்திற்குள் வாந்தி, மயக்கம், அதிகமான காய்ச்சல், சளி, இருமல், இரத்தக் கசிவு இருந்தாலும் உடனே



மருத்துவரை அணுகவேண்டும்.

பத்து மாதங்கள்.... ஒரு பெண், குழந்தையை வயிற்றில் மட்டுமா சுமக்கிறாள்? ஆயிரம் கனவுகளை மனதிலும் அல்லவா சுமக்கிறாள். "அம்மா" என்ற அந்தக் குரல் ஒலி அவள் காதில் விழும்போது.... அப்பப்பா அவள் அடையும் மகிழ்வு இருக்கிறதே! அது சொல்லில் அடங்காது. ஆம். பெண்ணாகப் பிறக்க மாதவம் புரிந்திருக்கவேண்டும்.



# அறிவியல்

# சூரிய மின் சக்தி



சூரிய சக்தியை மின் சக்தியாகப் பயன்படுத்த முடியும் என்றவிஞ்ஞான உண்மையை அண்மையில்தான் உலகம் புரிந்து கொண்டது.

நிலக்கரியில் இருந்து நாம் பெற்றுக் கொள்ளும் சக்தி எப்படி அதற்குக் கிடைத்தது? சூரியனிலிருந்து தான்? எப்படி என்று கேட்கிறீர்களா? சரித்திர காலத்துக்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த தாவரங்கள் அவற்றின் இலைகளில் சூரிய சக்தியைச் சேமித்து வைத்திருந்தன. இந்தத் தாவரங்கள் காய்ந்து, மடிந்து நிலக்கரிப்படிவுகளாகக் காலப் போக்கில் மாறின. அப்போதும் அவற்றிடமிருந்த சூரியசக்தி அழிந்துவிடவில்லை. இவ்வாறு அழிந்துவிடாமல் இருக்கும் அந்தச் சக்திதான் நிலக்கரியை நாம் எரிக்கும் போது வெளியேறி எமக்கு உதவுகிறது. கோடிக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்னர்



சூரியகதிர் தட்டுகள்

தாவரங்கள் சேர்த்து வைத்திருந்த சூரிய சக்தியைத்தான் இப்போது இரசாயன சக்தியாக நிலக்கரியை எரிப்பதன் மூலம் நாம் பெற்றுக் கொள்கிறோம். காற்றின் மூலமும், அலைகள் வாயிலாகவும் நாம் பெற்றுக் கொள்ளும் சக்தியும் இதேவகையைச் சேர்ந்ததுதான். காற்று அலைகளை உண்டாக்குகின்றது. அப்படியானால் காற்று எப்படி உருவாகின்றது. வளிமண்டலத்திற்கு சூரியன் வெப்ப மேற்றுவதன் மூலம் காற்று உருவாகின்றது.

சூரியன் பூமியிலிருந்து 15 கோடி கி.மீ தூரத்திலிருக்கிறது. அதனது சக்தியின் ஒரு சிறு பகுதியே பூமியை வந்தடைகிறது. ஆனால், எமது தேவைக்கு மேலாகவே அதனது சக்தி எம்மை வந்தடைகிறது. ஒவ்வொரு நிமிடமும் எமது தேவைக்கு மேலாக சூரிய சக்தி எமக்குக் கிடைக்கிறது. ஆனால் அதைச் சரியாகப் பயன்படுத்துக் கொள்ளும் ஆற்றலை நாம் வளர்த்துக் கொள்ளவேண்டும்.

## கண்ணாடித் துண்டுகள் பொருத்தப்பட்டுள்ள கருவி

1. சூரிய வெப்ப உலைகளில் பொருத்தப்பட்டுள்ள முகம்பார்க்கும் ஏராளமான கண்ணாடித் துண்டுகள் மூலம் சூரிய சக்தி ஒரே அளவில் இடத்தில் குவிக்கப்பட்டு மிக அதிக வெப்பம் உற்பத்தியாக்கப்படுகிறது. இவ்வாறு பெறப்பட்ட சூரிய சக்தியை உணவு சமைத்தல், சூடாக்குதல் போன்ற பல்வேறு தேவைகளுக்குப் பயன்படுத்த முடியும்.




கண்ணாடித் துண்டுகள் பொருத்தப்பட்ட கருவி

## சூரியவெப்ப மின் கலன்கள்

2. சூரிய மின்கலங்கள் ஒளியை (light) மின்சாரமாக மாற்றுகின்றன. ஒரு சதுர மீட்டர் அளவுள்ள சூரியதட்டிலிருந்து (Solar Panel) 100 வாட் சக்தியுள்ள மின்குமிழ் (பல்ப்) ஒன்றுக்கு ஒளியேற்றக்கூடிய மின்சக்தி, வெப்பக் காலநிலையின் (Sunny Climute) போது கிடைக்கிறது.

சூரிய வெப்பத்தின் மூலம் தண்ணீரை வெப்பமாக்கல்




## சூரிய வெப்பதின் மூலம் தண்ணீரை வெப்பமாக்கல்

3. தண்ணீரைச் சூடாக்க சூரியனிலிருந் கிடைக்கும் வெப்பத்தைப் பாவிக்க முடியும். தட்டில் காணப்படும் குழாய்கள் மூலம் நீர் பாய்ச்சப் படுகிறது. குழாய்களுக்கு கறுப்பு நிறவண்ணம் தீட்டப்படுள்ளது. அதனால் சூரிய ஒளி அவற்றின் மீது பாய்ச்சப்படும் போது அவை வெப்பமாகித் தண்ணீரும் வெப்பமடைந்து விடுகிறது.

### சாதகமான நிலைமைகள்

* சூரிய சக்தி இலவசமாகக் கிடைக்கிறது.

* வெப்பமான கால நிலை உள்ள நாடுகளில் பின் தங்கிய பகுதிகளுக்கு மின்சார வசதியை வழங்குவதற்கான வசதியில்லாத போது சூரிய சக்தி மூலம் அதை வழங்க முடியும்.

* தோட்டவிளக்குகள், பாட்டரிகளுக்கு மின்சக்தியேற்றும் கருவிகள் போன்ற மின்சத்தி அதிகம் தேவையற்ற விடயங்களுக்கு சூரிய மின்சக்தியை இலகுவாகப் பாவிக்க முடியும்.

### பாதகமான நிலைமைகள்

* இரவில் சூரிய சக்தியைப் பெற்றுக் கொள்ள முடியாது.

* சூரியசக்திக்கான மின் நிலையங்களை நிர்மாணிப்பதற்கான செலவு மிக அதிகம்.

* சூரிய ஒளி மிக்க சிறந்த காலநிலை நிலவினாலன்றி அதன் நம்பகத்தன்மை மிகக் குறைவு.



சூரிய வெப்ப மின் கலன்கள்

## திரி இன் வன்

ஜப்பானின் தொலைத்தொடர்பு நாயகன் என் வர்ணிக்கப்படும் KDDI நிறுவனத்தின் பணியாளர் ஒருவர் கைகளில் வைத்திருக்கும் கையடக்கத் தொலைபேசிகளைப் பாருங்கள். ஜப்பானின் கஸியோ (Casio) கம்ப்யூட்டர் நிறுவனம் தயாரித்துள்ள இந்தக் கையடக்கத் தொலைபேசிகள் ஒன்றில் மூன்று அதாவது ஆங்கிலத்தில் கூறுவதானால் (Three in one) வசதிகளைக் கொண்டிருக்கின்றன. கமெரா, நீரில் பயணம் செய்யும்போது பயன்படக்கூடிய திசையறிகருவி, அதிர்ச்சியைத் தாங்கிக் கொள்ளும் மேலுறை (Shock Proof Body) ஆகியவற்றை ஒருங்கே கொண்டுள்ளன இந்தக் கையடக்கத் தொலைபேசிகள்.



## தொலைக்காட்சி 102"



உலகிலேயே மிக நீளமான தொலைக்காட்சிப் பெட்டியை தென்கொரியாவின் சாம்சுங் நிறுவனம் தயாரித்திருக்கிறது. நீங்கள் படத்தில் பார்க்கும் இந்த தொலைக்காட்சிப் பெட்டியின் நீளம் 102". உலகின் பொருளாதாரத் துறையில் அசுர வேகத்தில் வளர்ந்துவரும் சீனாவில் இடம்பெற்ற உயர் தொழில்நுட்ப கண்காட்சியொன்றில் இது காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தது. கையடக்கத் தொலைபேசிகள், உடுபிடவைகள், கார்கள், கைத்தொழில் உபகரணங்கள் ஆகியவற்றைத் தயாரிப்பதில் இன்று உலகில் உள்ள முன்னணி நாடுகளில் ஒன்றாக விளங்குகிறது சீனா. இப்போது கணனித் துறையில் முன்னணி வகிக்கும் நாடான இந்தியாவுடன் நட்புறவை வளர்த்து, தனது நாட்டில் அந்தத் துறையை விஸ்தரிப்பதிலும் ஆர்வம் கொண்டுள்ளது இந்த நாடு.

## கியூபா



அமைவிடம்:– கரிபியன் கடலுக்கும் புளோரிடாவுக்கு தெற்கே வட அத்திலாந்திக் சமுத்திரத்துக்கும் இடையில் அமைந்துள்ளது.

தலைநகர்:– ஹவானா.

பரப்பளவு:– 110, 860 சதுரகிலோ மீட்டர் நிலஅளவு. (கரிபியன் கடலில் உள்ள பெரிய நாடு).

கரையோரம்:– 3735 கி.மீ.

காலநிலை:– வெப்பக்காலநிலை, வரண்டகாலம் (நவம்பர் முதல் ஏப்பரல் வரை), மழைகாலம் ( மே முதல் அக்டோபர் வரை)

மூலவளங்கள்:– இரும்புத்தாது நிக்கல், மங்கனீஸ், உப்பு, மரம், பெற்றோலியம், பயிர் செய்யக்கூடிய நிலம்.



சனத்தொகை:– 11, 141, 997 (யூலை 2000)

மதம்:– றோமன் கத்தோலிக்கர் புரட்டஸ்தாந்து மதத்தவர், யூதர்கள்.

இனங்கள்:– முலாட்டோ 51%, வெள்ளையர் 37%, கறுப்பினத்தவர் 11%, சீனர் 1%.

மொழி:– ஸ்பானிய மொழி




# பிள்ளைகளின் பிறப்பில் இளவரசர் சார்ள்ஸுக்கு சந்தேகம்



இராணுவ அதிகாரி ஜேம்ஸ் ஹெவிட்டுடன் இளவரசி டயானா தொடர்பு வைத்திருந்ததால் 'இளவரசர் ஹரியின் தந்தை சார்ள்ஸ் அல்ல, ஹெவிட்டே' என்ற வதந்தி கிளம்பியது. இதனால், ஹரிக்கு மரபணு சோதனை நடத்தப்பட்டு அவரின் தந்தை இளவரசர் சார்ள்ஸ் தான் என்பது நிரூபிக்கப்பட்டது.

இதை பிரிட்டனில் அதிரடி தகவல்களை வெளியிட்டு அவ்வப்போது பரபரப்பை ஏற்படுத்திவரும் 'சன்' பத்திரிகை வெளியிட்டுள்ளது. இதுதொடர்பாக அந்தப் பத்திரிகையில் கூறப்பட்டுள்ளதாவது:

இராணுவ அதிகாரி ஜேம்ஸ் ஹெவிட்டுடன் தொடர்பு வைத்திருந்ததை தொலைக்காட்சி ஒன்றுக்கு அளித்த பேட்டியில் இளவரசி டயானா ஒப்புக்கொண்டார். இதனால், பிரிட்டனின் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு இளவரசர் ஹரியின் பிறப்பில் சந்தேகம் எழுந்தது. உடன் இளவரசர் ஹரிக்கு மரபணு சோதனை நடத்தப்பட்டது. அதில், அவரின் தந்தை இளவரசர் சார்ள்ஸ் தான் என்பது உறுதி செய்யப்பட்டது.

ஹெவிட்டுடனான தொடர்பு பற்றி டயானா தெரிவித்ததும், ஹரியின் தந்தை ஹெவிட்டே என்ற வதந்திகள் கிளம்பின. இதைக் கேட்டு எலிசபெத் ராணியின் கணவர் இளவரசர் பிலிப் அதிர்ந்தார். அதன் பின்னரே ஹரிக்கு மரபணு சோதனை நடத்தப்பட்டது. சோதனை நடக்கும்போது ஹரிக்கு 11வயது. சோதனை நடத்தப்பட்டதற்கான காரணம் அவரிடம் தெரிவிக்கப்படவில்லை. ஹாரிக்கு மரபணு சோதனை நடத்தப்பட்ட அதே நேரத்தில் அவரின் சோதரர் வில்லியமுக்கும் சோதனை நடந்தது. இறுதியில் இருவரும் சார்ள்ஸின் பிள்ளைகளே என்பது நிரூபணமானது.

டயானாவின் நீண்ட காலத் தோழியான சிமோன் சிம்மன்ஸ் 'டயானா: தி லாஸ்ட் வேர்ட்'' என்ற புதிய புத்தகத்தை எழுதியுள்ளார். அந்தப் புத்தகத்தில்தான் அவர் இவ்வாறு எழுதியுள்ளார்.

ஹரிக்கு மரபணு சோதனை நடத்தக் கோரி மன்னர் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரே தனக்கு கடிதம் எழுதியதையும் டயானா என்னிடம் காட்டினார். ஆனால், கடிதம் எழுதியவர் இளவரசர் பிலிப் என்பதை அவர் என்னிடம் உறுதியாகச் சொல்லவில்லை. இராணுவ அதிகாரி ஹெவிட்டுடன் தனக்குத் தொடர்பு இருந்ததை டயானா ஒப்புக் கொண்டதால் இந்தப் பிரச்சினை எழுந்தது.

– இவ்வாறு சிமோன் கூறியுள்ளார்.

# நிர்வாண போஸ்க்கு 5 மில்லியன் டொலர்



'பிளேபோய்' என்ற நிர்வாணப்பட சஞ்சிகைக்கு நிர்வாணமாகப் போஸ் கொடுக்குமாறு ஜெனிபர் அனிஸ்டன் என்ற இந்த அழகியைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார் ஹியூஹெவ்னர். அவ்வாறு ஜெனிபர் போஸ்கொடுத்தால் 5 மில்லியன் டொலரை அவருக்கு அதற்கான ஊதியமாகத் தருவதாகவும் கூறுகிறார் ஹெவ்னர்.

தொடர்ந்து தொலைபேசி அழைப்புகளைக் கொடுத்துக் கொண்டிருக்கும் ஹெவ்னரின் அழைப்புகளுக்கு ஜெனிபர் பதில் அளித்த வகையிலும் இதுவரை ஆம் அல்லது முடியாது என்று மட்டும் சொல்லவில்லை.

ஆனால் ஹெவ்னரோ ஜெனிபரை விட்டபாடில்லை. ஏன் இந்தத் தயக்கம் என்று மன்றாடிக் கேட்ட படி இருக்கிறாராம்.

குட்டக் குட்ட குனிந்த தலைகள்... கூண்டுக்குள் அடைபட்ட கிளிகள்... எல்லாம் ஒரு காலம். இன்றோ, வானம் மட்டுமே எல்லை. பல்துறை வளர்ச்சியில் மட்டுமல்ல; ஆடை குறைப்பிலாவது கூட. சென்னை, நுங்கம்பாக்கம் வர்த்தக மையம் அரங்கில் நடந்த பஷன் ஷோவில், பாரதி கண்ட புதுமைப்பெண்கள் 'ஹெவ்ம், பீஷம் ரிப்பள் சைஸ்' உள்ளாடைகளுடன் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் மத்தியில் மிடுக்காக நடை போட்டனர். எண்டதற்கெல்லாம் கூப்பாடு போடும் பெண்கள் அமைப்புகளே... நீங்கள் எங்கே? தமிழகத் தலைநகரில் நாகரீகம் என்ற பெயரில் ஆபாசம் விற்பனை. 'பாரத நாடு பழம் பெரும் நாடு. நீரதன் புதல்வர், இந்நினைவை அகற்றாதீர்.' இப்படி இருந்தால்... சென்னையில் நிலைக்கும் மட்டுமா வரும்....?



# ஹொலிவுட் நடிகையின் மார்பழகுக்கு மௌசு



**ஹொலிவூட்டில் ஒளிவீசும்** நட்சத்திரமாக தற்போது புகழேணியில் நிற்கிறார் கமரன் டயஸ் என்ற நடிகை. விம்மி நிற்கும் மார்பகங்களை அப்பட்டமாகத் திறந்து காட்டி நிற்கும் தனது படங்களை விற்கப்போவதாகப் பயமுறுத்தி தம்மிடமிருந்து பெருந்தொகையான பணத்தை அபகரிக்க முயன்றார் என்று குற்றஞ்சாட்டி புகைப் படப்பிடிப்பாளர் ஜோன்ரட்டன் மீது அவர் தொடர்ந்த வழக்கில் நீதி மன்றம் 6 வருட சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது.

தாம் 19 வயது நிரம்பிய பருவக் குயிலாக இருந்த போது, ஜோன் ரட்டன் திரண்டு நிமிர்ந்த தமது மார்பழகை படம் பிடித்தார் என்பதை கமரன் ஏற்றுக் கொண்டார். தான் அப்போது ஒரு மாடல் அழகியாகத் தொழில் பார்த்து வந்ததாகவும் கமரன் கூறுகின்றார்.

இந்தத் தீர்ப்பைப் பற்றிக் கருத்து வெளியிட்ட கமரன், ''இந்தச் சம்பவம் மிகவும் துரதிர்ஷ்டவசமானது. நீதி தனது கடமையைச் சரிவர நிறைவேற்றியிருக்கிறது. இது பற்றி நான் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று தெரிவித்தார்.

# கோபுர தீபம்


சுடர் ஒளி சிறுகதை

—சந்திரகாந்தா—

என்னவென்று சொல்லத் தெரியாத உணர்வின் ஊற்று காஞ்சனாவின் நெஞ்சுக்குள் பொங்கிக் கொண்டிருந்தது. இந்தச் சந்தோசப் பரபரப்பு இதுவரை அவளுக்குள் ஏற்பட்டிராத ஒன்று.

ஆல்பத்துள் இருந்த ராகுலனின் படத்தை மீண்டும் எடுத்துப் பார்த்தாள். வசீகரமாகவும் வாட்டசாட்டமாகவும் ராகுலன் இருந்தான். சிவதாசனை விட எடுப்பாக இருந்தான். நல்ல உத்தியோகத்திலுமிருந்தான். இதுவரை பேசிய கல்யாணங்கள் குழம்பிப்போனது, இப்படி ஒரு நல்ல மாப்பிள்ளை கிடைக்கத் தானோ என்று நினைத்தபோது அவளின் மனது பூரித்தது.

தரகர் வந்து படத்தையும் சாதகத்தையும் அப்பாவின் கையில் கொடுத்த



அன்றே அவன் அவள் மனதில் நிறைந்து விட்டான். பின்னர், பெண் பார்க்க வந்து அவளைப் பிடித்திருப்பதாகச் சொன்ன போது அவள் ஆனந்தத்தின் எல்லைக்கே சென்றாள்.

எல்லாம் மளமளவென்று எதுவித தடங்கலுமின்றி நிகழ்ந்தன. இதோ கலியாணத்திற்கு நாள் குறித்தும் ஆகிவிட்டது. காஞ்சனாவின் மனதில் தென்றல் வீசியது.

தொலைபேசியில் தொடர்பு கொண்டு 'வீட்டிற்கு வரலாமா?' என்று ராகுலன் கேட்ட போது அப்பா மறுக்கவில்லை. "வாங்க தம்பி... இனி என்ன அவ எங்களுக்கா பிள்ளை; உங்கட ஆள் தானே?" என்று பச்சைக்கொடி காட்டினார்.

அப்பாவுக்கு இவ்வளவு விசாலமான மனம் இருக்கும் என அவள் நினைத்திருக்கவில்லை. இதோ இன்னும் சிறிது நேரத்தில் ராகுலன் வரப்போகிறான். அதுதான் காஞ்சனாவுக்கு இந்தப் பரபரப்பு.

அவள் குட்டிபோட்ட பூனைபோல வாசலுக்கும் உள்ளுக்குமாக நடந்து கொண்டிருந்போதே கேற் கிறீச்சிட்டது. நிமிர்ந்து பார்த்தாள். அவன் தான் என்றதும் எங்கிருந்தோ வெட்கம் அவளைச் சூழ்ந்து கொண்டது. உள்ளே சென்று அம்மாவை முன்னுக்கு அனுப்பினாள்.

"வாங்கோ தம்பி... காஞ்சனா, இங்கே அவர் வந்திருக்கிறார்..." அம்மா உள்ளே திரும்பிக் குரல் கொடுத்தாள். வெளியே வந்த காஞ்சனா, "வாங்கோ" என்று முகம் மலர அவனை வரவேற்றாள். குரல் தான் தொண்டைக்குள் மெலிதாய் ஒலித்தது.

இருவரும் ஹோலில் அமர்ந்தார்கள். அம்மா கொண்டு வந்த தேநீரையும், வடையையும் வாங்கிப் பரிமாறினாள் காஞ்சனா. சிறிது மௌனம் நிலவியது. எப்படிக் கதைப்பது என்ற தயக்கம்.

அவன் அவளைப் பார்த்து மகிழ்வோடு சிரித்தான்.

"கூறைச் சேலை எடுக்க வேணும் உங்களோடு சேர்ந்து போய் வாங்குவம் என்று தங்கச்சி அகல்யா சொன்னவ" ஒருவாறு சொல்லி முடித்தான் ராகுலன்.

அவள் சிறிது தயங்கினாள். என்ன பதில் சொல்வதென்று புரியாத தடுமாற்றம். எனினும், அவனுடன் வெளியில் போவதை நினைக்க மகிழ்ச்சியாக இருந்தது.

அவன் அவளையே நோக்கியபடி இருந்தான்.

அவள் பதில் சொல்லாமல் தடுமாறினாள்.

"நான் மாமியைக் கேட்கட்டே?"

"அதுக்கிடையில் மாமி முறை கொண்டாடுறியள்..."

"இனி என்ன; முடிவு எடுத்தாச்சுத்தானே..! இரண்டு கிழமையில் கலியாணம்..."

"அம்மாவை சம்மதிப்பினமோ தெரியாது..."

"நான் கேட்டால் மறுக்க மாட்டினம்..."

அவர்கள் கதைத்துக் கொண்டிருந்போதே அம்மா கூப்பிட்டாள்.

"தம்பியைச் சாப்பிட்டிட்டுப் போகச் சொல்லுபிள்ளை"

அவன் சம்பிரதாய பூர்வமாக மறுத்தான். அவள் விடவில்லை. "கையைக் கழுவுங்கோ..." என்றபடி செம்பை நீட்டினாள்.

இது என்ன சங்கடம் என்று நினைத்தபடி காஞ்சனாவிடம் இருந்து செம்பை வாங்கினான்.

"நேரம் போட்டுது..."

"பரவாயில்லை. சாப்பிட்டிட்டுப்போகலாம். இறைச்சிக்கறி..." காஞ்சனா மெல்லிய குரலில் கூறிவிட்டு மேசையில் சாப்பாடு எடுத்து வைப்பதில் அம்மாவுக்கு உதவினாள்.

அவள் அன்பாய்க் கதைத்தது அவனுக்கு உற்சாகத்தைத் தந்தது. போன முறை பெண் பார்க்க வந்தபோது தூர நின்று வாய் மூடி மௌனியாக நின்ற காஞ்சனா, இன்று அவனுக்கு அருகில் வந்து நின்று பரிமாறினாள். இனிதாகக் கதைக்கிறாள்.

அவள் பக்கத்தில் நிற்க, தான் சாப்பிடுவது ஒரு கனவு போல ராகுலனுக்கு இருந்தது. போதும், போதும் என்று சொல்ல அவள் பரிமாறியது அவனுக்கு மகிழ்ச்சியைத் தந்தது.

இரண்டு மூன்று தசாப்தங்களுக்கு முன்னர் இப்படியெல்லாம் நினைத்துப் பார்க்க முடியுமா? தாலி ஏறும் வரை கதைக்கவே முடியாதே.

"சாப்பாடு எப்படி தம்பி...?"

"நல்லாக இருக்கு மாமி... நீங்கள் தானே சமைத்தது?"

அவன் மாமி என்று அழைத்தபோது வெட்கமாகவும், மகிழ்ச்சியாகவும் அவளுக்கு இருந்தது.

"பிள்ளையும் நன்றாகச் சமைப்பாள். ரீச்சர் வேலை பார்த்தாலும் வீட்டு வேலைகளிலும் வலு கெட்டிக்காரி..." மகளுக்கு சான்றிதழ் வழங்கினார் அம்மா.

"நீங்கள் தவறாக நினைக்காட்டி, காஞ்சனாவை நாளைக்கு வெளியே கூட்டிக் கொண்டு போகலாமே? கூறைப்புடைவை எடுக்க வேணும்... தங்கச்சி அகல்யாவும் வாறாள்..."

"சரி... வேணுமென்னா இவளுடைய சினேகிதி ஜெயந்தியையும் சேர்த்து அனுப்புறன்..."

அவன் உற்சாகமாக நிமிர்ந்தான்.

அம்மா இவ்வளவு சந்தோசமாக அனுமதி தருவாள் என்று காஞ்சனா கூட நினைத்திருக்கவில்லை. அவளுக்கு குதூகலமாக இருந்தது.

அவன் சாப்பிட்டு முடிந்ததும் கைகளுவ ஒத்தாசை புரிந்தாள். அவள் நீட்டிய துவாயை வாங்கி கைகளைத் துடைத்துக் கொண்டான் ராகுலன்.

"சிவதாசனைத் தெரியுமா?"

திடீரென்று ராகுலன் கேட்டதும் அவள் ஒரு கனம் ஆடிப் போனாள்.

"ஏன், சொந்தக்காரர் தான்..." அவளது நெஞ்சு படபடவென்று அடித்துக் கொண்டது.

"முந்தி என்னோட படிச்சவன்... உங்களைப் பேசி வந்தபோது, அவனோடு தொடர்பு கொண்டு தான் விசாரிச்சனான்..."

காஞ்சனாவுக்கு திக் என்றது.

"அருமையான பிள்ளை.. நல்ல வடிவு... சிறப்பான குடும்பம். வீடு, வாசல், பொருள், பண்டம் எதற்கும் குறைவில்லை. நீ அதிஷ்டசாலியடா, என்று சொன்னவன்..."

அவனது அடுத்த வார்த்தை அவளுக்கு ஆறுதலளித்தது.

"அப்ப நான் போட்டு வாறன். காலமை எட்டு மணிக்கு ரெடியாக நில்லுங்கோ"

அவன் கையசைத்து விடை பெற்றபோது அவளது மனசு குதூகலித்தாலும், சிவதாசனின் நினைவுகள் மனதை உறுத்தியதால், அந்த மகிழ்வில் பாதி பறிபோனது.

சிவதாசன் வேறு யாருமில்லை, அவளது முறைமச்சான் தான். சின்ன வயதிலிருந்தே ஓடிப்பிடித்து விளையாடிய நண்பன்தான். அந்த நட்பு காதலாக வளர வாய்ப்பிருக்காவிட்டாலும், அவனைப்பற்றி அவள் மனதில் ஓர் அழகான இடமிருந்தது.

அவளுக்கு ஆசிரிய நியமனம் கிடைத்த பின்னர் ஒரு நாள் அவளைச் சந்தித்து வாழ்த்தினான்.

"உங்களுக்கு ரீச்சர் வேலை கிடைச்சது எனக்கு மகிழ்ச்சி... ஆனாலும் ஒரு கவலை..." ஆதங்கத்துடன் கூறினான் சிவதாசன்.

"ஏன்?" காஞ்சனா அவனை நிமிர்ந்து பார்த்தாள். ஆனாலும் அவன் சொல்ல வருவது அவளுக்குப் புரிவது போலிருந்தது.

அவன் தான் தொடர்ந்தான் "ஏற்கனவே மாமிக்கு எங்களோட சரிவாறேல்லை. நீங்கள் வசதியானனீங்கள்.. இப்ப ரீச்சராயும் விட்டியள்..." அவன் நெடுமூச்செறிந்தான்.

காஞ்சனா எதும் பேசாது அவனோடு நடந்தாள்.

"நீங்கள் என்னைக் கட்டுவியளே? பொருண்மிய வேலை, அரசாங்க வேலையில்லை..."

"எனக்குப் பிரச்சினையில்ல. ஆனால், அப்பா அம்மாவை தான் சம்மதிக்க மாட்டினம். டொக்டர், இஞ்சினியர் எண்டு பார்த்துக் கொண்டு திரியினம்" காஞ்சனா அப்படிச் சொன்னாலும் அவள் மனதிலும் ஏனோ பெற்றோர்களுடைய எண்ணமே மேலோங்கியிருந்தது.

"அம்மாவை விட்டு உங்கட விட்டிலை கேட்பிக்கட்டே?"

அவன் ஆதங்கத்தோடு கேட்டபோது அவள் விருப்பமில்லாவிட்டாலும் தலையசைத்தாள்.

மறுநாள் அவர்கள் கலியாணம் பேசி வந்தபோது வீட்டில் சம்மதிக்கவில்லை.

"பிள்ளைக்கும் விருப்பமாம்"

அம்மா காஞ்சனாவைத் திரும்பிப் பார்த்தாள். அவளது பார்வையில் காஞ்சனா ஒரு கனம் ஆடித் தான் போனாள்.

"இல்லை அம்மா... அவர் கேட்டவர். வீட்டிலை கேளுங்கோ எண்டு சொன்னனான்..." காஞ்சனா தடுமாறினாள்.

"நாங்கள் வேற இடதில் பேசியிருக்கிறம்..." அம்மாவின் வார்த்தையில் மாமாவும், மாமியும் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்.

"நாங்கள் இறங்கி, வீடு தேடிப்போய் பொம்பிளை கேட்டது தான் பிழை..." நடந்தது இவ்வளவு தான்.

இரவு முழுவதும் காஞ்சனாவுக்கு உறக்கம் வரவில்லை. சிவதாசனை ஏமாற்றி விட்டேனோ என அவளின் மனது தவித்துக் கொண்டிருந்தாலும், அதையும் மீறி ராகுலனின் இனிய நினைவும் திரையிட்டது.

அன்றிரவு ராகுலனின் மனநிலையில் ஒரே குதூகலம். காஞ்சனாவுடன் கதைத்தது, மறுநாள் கூடிக் கொண்டு ரவுனுக்குப் போகப் போவது என பல இனிய கற்பனைகளில் மிதந்த வண்ணமிருந்தான்.

காலையில் திட்டமிட்டபடி தங்கை அகல்யாவுடன் புறப்பட்டு காஞ்சனாவின் வீட்டிற்குப் போனபோது அவள் தயாராக நின்றாள்.

நால்வரும் ஒட்டோவில் ஏறினார்கள். நெருக்கத்தில் காஞ்சனா அமர்ந்திருந்தது அவனுக்குள் ஆனந்தப் பரவசத்தை ஏற்படுத்தியது. அவள் பக்கத்திலிருக்க பயணம் போவது ஒரு கனவுமாதிரி இருந்தது.

காஞ்சனா அவனுக்கு பிடித்த இளநீல நிற சேலை அணிந்திருந்தாள். நெற்றியில் சிவப்பு நிற ஒட்டுப் பொட்டுக்கு மேல் மெலிதான விபூதிக்கீறல். இருவரும் தனியாக பயணம் போனால் எவ்வளவு நல்லாக இருக்கும் என எண்ணினான்.

காற்று கொஞ்சம் அதிகமாகவே வீசியது. காஞ்சனாவின் முன்மயிர், காற்றுக்கு நெற்றியில் வந்துவிழுந்தது. ஒரு கையால் ஒதுக்கிக் கொண்டு கடந்து வரும் கடைவீதியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். காற்றில் அவளது சேலைத் தலைப்பு அவனது மடியில் வந்தது. அதை இழுத்தெடுக்க முடியாத வெட்கத்திலும் இன்பப்பரபரப்பிலும் அவள் மிதந்தாள்.

'இந்தச் சேலையில் நீங்கள் நல்ல வடிவு' என்று சொல்ல வேண்டும் என்று நினைத்தான். அதிகம் பழக முன்னரே இப்படிச் சொல்வது சரியில்லை என்பதாலும், அருகில் வேறிருவர் இருந்ததாலும் அவன் தன் எண்ணத்தைக் கட்டுப்படுத்தினான். மீண்டும் அவன் பார்வை அவள் மீது பதிந்தது. கழுத்தில் ஒரு மெல்லி சங்கிலி, கையில் காப்பு, முகத்தில் பளீரிடும் மூக்குத்தியுடன் போட்டி போட்டு கொண்டு அவளது முத்துப்பற்கள் பளபளத்தன. முகத்தின் பவுடர் வாசனை, மனதில் தென்றலடிக்க வைத்தது.

கடையில் உடுப்புகளைத் தெரிவு செய்த போது, அவனுக்கான உடைகளை அவளே தேர்ந்தெடுத்த போது ராகுலன் மகிழ்ந்தான். அவனது விருப்பப்படி மேலதிக மாற்றுப் புடவை, கூறை என்பவற்றை இளநீல நிறத்தில் வாங்கினார்கள்.

வீட்டிற்குத் திரும்பியபோது மதியமாகி விட்டது.

இன்றும் அவனுக்கு மாமியின் கைவண்ணத்தில் பெரு விருந்து காத்திருந்தது. "அண்ணாவின்ர புண்ணியத்தில் எங்களுக்கும் நல்ல சாப்பாடு.." அகல்யா அண்ணாவின் காதில் கிசு கிசுத்தாள். அப்போது தண்ணீருடன் வந்த காஞ்சனா,

"என்னவாம்? அகல்யா என்ன சொல்லுறா?... அக்காவுடன் இறுதிப் பரீட்சை முடிஞ்சவுடன அவவுக்கும் டும் டும் தானே?"

அகல்யாவும் நாணத்தோடு சிரித்தாள்.

"நான் யூ. கே போய் இன்னும் படிக்க வேணும்..."

"டொக்டராகவோ இஞ்சினியராகவோ படிச்சால் பிறகு மாப்பிள்ளை தேடேலாது..." காஞ்சனா சிரித்தாள்.

விடைபெற்றுக் கொண்டு வீட்டிற்குச் சென்ற பின்னரும் ராகுலன் குதூகலமாக இருந்தான்.

(24)ஆம் பக்கம் பார்க்க

விடுதலை



# அதிகாரத்தின் அரூப கரங்கள்

மிஷேல் பூக்கோ (Michel Foucault, 1926 - 1980) ஒரு பிரஞ்சு தத்துவாசிரியர். ஒரு புதுமையான சமூகச் சிந்தனையாளர். சமூக உலகத்தையும், மனித உறவுகளையும் ஒரு புதிய பரிமாணத்தில் வித்தியாசமாக நோக்கியவர். அறிவுலகங்களை அகழாய்வு செய்தவர். அவற்றின் ரிஷிமூலகங்களைக் கண்டுபிடித்துக் காட்டியவர். அதிகார உறவுகளின் சிலந்தி வலைக்குள் மனித வாழ்வு சிக்குண்டு கிடப்பதை மிகவும் நுட்பமாக எடுத்து விளக்கியவர். அறிவுலகமும் அதிகார உலகமும் கூட்டுச் சேர்ந்து மனித அடக்குமுறைக்கு ஒத்துழைக்கும் தந்திரோபாயங்களைப் பிட்டுக்காட்டியவர். மேற்குலகின் அரச அதிகார நிறுவனங்களான காவற்றுறை, நீதித்துறை, சிறைச்சாலைகள், நிர்வாகத் துறை, படைத்துறை ஆகியன எவ்வாறு தனிமனிதர்களைச் சமூகப் பொம்மைகளாக வனைந்து இறுக்கமான சமூகக் கட்டுப்பாட்டை பேணி வருகின்றன என்பதை மிகவும் ஆழமாகவும் துல்லியமாகவும் விளக்கியவர். அவர் நிறைய எழுதினார். பல துறைகள் பற்றி எழுதினார். பைத்திய வைத்தியம் பற்றியும், பாலியல், வரலாறு பற்றியும், தார்மீக தத்துவங்கள் பற்றியும், சிந்தனை உலகங்களின் படிநிலை வளர்ச்சி பற்றியும் பல்வேறு துறைகளை ஆழமாக ஆய்வு செய்து எழுதினார். அவரது எழுத்துக்கள் மேற்குலக சிந்தனைப் பாரம்பரியத்தில் என்றுமில்லாத புதிய தாக்கத்தை ஏற்படுத்தின. அவரது எழுத்தில் புதுமையும், பார்வையில் அபாரமான கூர்மையும் இருந்தன. அதனால் அவர், பிற்கால நவீனத்துவத்தின் (Post - Modernism) பிதாமகர் எனப் போற்றப்பட்டவர்.

மிஷேல் பூக்கோவின் ஆய்வுலகம் பரந்தது. அதனை ஒரு கட்டுரையில் முழுமையாக விளக்குவது கடினம். அவரது புதுமையான சமூக தரிசனத்தைச் சுருக்கமாக விளக்கும் அறிமுகக் குறிப்பாகவே இதனை எழுதுகிறேன்.

தத்துவப் போதனாசிரியராகப் பிரஞ்சு அறிவுலகத்தில் பிரவேசித்த பூக்கோ, ஆரம்பத்தில் மாக்சிய சிந்தனையால் ஈர்க்கப்பட்டார்.

ஐம்பதுகளின் முற்பகுதியில், இரண்டாம் உலகப் பெரும்போரின் இடிபாடுகளிலிருந்து விரக்தியுடன் வெளிவந்த ஐரோப்பிய இளம் பரம்பரை ஒரு புதிய யுகத்தைக் கனவு கண்டது. அநீதியும் வன்முறையும் ஒழிந்த ஒரு புதிய சமூக ஒழுங்கைத் தேடியது. அந்தத் தேடுதலில் ஈடுபட்ட இளம் அறிவுஜீவிகளுக்கு மாக்சிய சிந்தனை புதிய வெளிச்சத்தைக் காட்டியது. மாற்று உலகத்திற்காக ஏங்கிய பூக்கோ மாக்சியத்தை தழுவினார். பிரஞ்சு கம்யூனிச இயக்கத்தில் இணைந்துகொண்டார். இந்த ஈடுபாடு சொற்ப காலத்திற்கே நீடித்தது.

பிரஞ்சு கம்யூனிச இயக்கம் வைதீக மாக்சிய கோட்பாடுகளை இறுக்கமாகப் பற்றி நின்றது. புதிய விசாரணைகளுக்கு இடைவெளி கொடுக்க மறுத்தது. புதிய பார்வைகளை ஏற்க மறுத்தது. எல்லா உறவுகளையும், எல்லாப் புறநிலைகளையும் விளக்கும் பொதுவுண்மையாக, எல்லாக் காலத்திற்கும் பொருந்தும் மெய்யுண்மையாக மாக்சியத்தை வழிபட்டது. இயற்கையினதும், வாழ்க்கையினதும், வரலாற்றினதும் மாற்ற முடியாத நியதிகளாக, விஞ்ஞான விதிகளாக, இயங்கியலை வரித்துக் கொண்டது. அந்த விதிகளின் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தால், மனித வரலாறு ஒரு புதிய யுகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருப்பதாக எண்ணியது. இத்தகைய மரபுவாதத்தை, குருட்டுத்தனமான தத்துவ வழிபாட்டை பூக்கோவால் ஜீரணிக்க முடியவில்லை. "மாக்சியம் புதிதாக சுவாசிக்க விரும்பவில்லை. அது பத்தொன்பதாம் நூற்றாண்டின் பழமையில் புதைந்து கிடக்கிறது" எனக் கண்டித்தார் பூக்கோ. மூன்றாண்டு கால ஈடுபாட்டுடன் கம்யூனிச இயக்கத்திலிருந்து விலகிக் கொண்டார். மாக்சிய தத்துவத்தைப் புதுப்பிப்பதற்கு அவர் முனையவில்லை. முற்றிலும் வித்தியாசமாக, புதிதாக அவர் சமூக உலகத்தை விசாரிக்க முனைந்தார்.

மேற்குலகத் தத்துவாசிரியர்களில் ஜெர்மானிய சிந்தனையாளரான நீச்சேயின் எழுத்துக்கள் பூக்கோவை வெகுவாக ஆகர்ஷித்துக் கொண்டன. நீச்சேயின் படைப்புகளில் ஒரு விசித்திரமான புதுமையை அவர் கண்டார். ஏனைய தத்துவாசிரியர்கள் போன்று, கருத்துலகக் கோட்டைகளை நீச்சே கட்டியெழுப்ப விழையவில்லை. பிரபஞ்சத்தின் இரகசியம் பற்றியும் மனித வாழ்வின் அர்த்தம் பற்றியும், தேடுதல்களை நடத்தவில்லை. கடவுளையோ மனிதனையோ மையப் புள்ளியாக வைத்து வாழ்விற்கு விளக்கம் அளிக்கவில்லை. நீச்சே எல்லாவற்றையும் எள்ளி நகையாடினார். எல்லாவற்றையும் ஈவிரக்கமின்றி விமர்சித்தார். எல்லாவற்றையும் நிராகரித்தார். அவரது எழுத்துக்கள் மேற்குலக மனிதனின் நீண்டகாலக் கனவுகளைக் கலைத்தன. கிறிஸ்தவ நாகரிகத்தின் தார்மீக முகமூடிகளைக் கிழித்துக் காட்டியது. நீச்சேயின் கண்டனத் திறனாய்வும் அவரது மரபுமூல (Geneological) விசாரணை முறைமையும் பூக்கோவை வெகுவாகக் கவர்ந்தன. பொய்மைகளைப் போர்த்தியவாறு, மறைபொருளாகப் புதைந்து கிடக்கும் மெய்மைகளைக் கண்டுகொள்வதற்கு மூலங்களைத் தேடும் விசாரணையே சிறந்ததாக அவருக்குத் தோன்றியது. நீச்சேயின் வழி தழுவி, வேர்களைத் தோண்டும் தனது ஆய்வு முறைமையை 'அகழாய்வு' என வர்ணித்தார் பூக்கோ. தனது ஆய்வு முறைமை பற்றி எழுதிய நூலுக்கு 'அறிவின் அகழாய்வு' (The Archaeology of Knowledge) எனத் தலைப்பிட்டார். அறிவுலகங்களை 'அகழாய்வு' செய்யும் நுட்பமான ஆய்வு முறைமையை அறிமுகப்படுத்தியதால் அவரை 'சிந்தனைப் பாரம்பரியங்களின் வரலாற்றாசிரியர்' என அழைப்பதுண்டு.



மிஷேல் பூக்கோ

பூக்கோவின் பார்வையில் அறிவுலகங்கள் பலரகமானவை. விஞ்ஞானம், மருத்துவம், பொருளியல், சமூகவியல், சட்டவியல், அரசியல் என்ற ரீதியில் சிந்தனையுலகங்கள் பல பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் தனக்கே உரித்தான கட்டமைவு விதிகளையும், செயல்நெறிகளையும் கொண்டவை. காலத்திற்கேற்ப, சமூகப் பண்பாட்டு புறநிலைகளுக்கேற்ப, சிந்தனையுலகங்கள் மாற்றங்களைச் சந்திக்கின்றன. இந்த மாற்றங்களாகக் கட்டவிழும் வரலாறு சிக்கலானது. காலச் சீரற்றது. முறிவுகளையும் முரண்பாடுகளையும், கொண்டது. இந்த அறிவுலகங்கள் தனியுலகமாக சமூக வாழ்விற்குப் புறம்பாக இயங்கவில்லை. அவை சமூக உலகத்தை ஊடுருவி நிற்கின்றன. சமூக நிறுவனத் தளத்திலிருந்து செயற்படுகின்றன. சமூக உறவுகளோடு பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. இந்தச் சிந்தனை உலகங்களின் உருவாக்கம், அவற்றின் கட்டமைவு, அவற்றின் செயல்நெறிகள், அவற்றின் நிறுவனமயமாக்கல், அவற்றின் சமூக உறவுநிலைகள், அவற்றின் மாற்றம், வளர்ச்சி பற்றிய வரலாறு ஆகிய பன்முக விசாரணைகளைக் கொண்டதாக பூக்கோவின் 'அகழாய்வு' அமைகிறது. இந்தச் சிக்கலான ஆய்வுமுறைமை பற்றியோ, அதன் சாதக பாதக அம்சங்கள் பற்றியோ எடுத்து விளக்குவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. பூக்கோவின் ஆய்வு புலப்படுத்திக் காட்டும் சில சமூக உண்மைகள் பற்றியே நாம் இங்கு விளக்கிக் கூற விரும்புகிறோம்.

அறிவுலகத்தை சமூக வாழ்வியக்கத்தின் ஆழத்தில் அலசிப் பார்த்த பூக்கோவுக்கு ஒரு விசித்திரமான உண்மை புலப்பட்டது. அறிவுலகமானது தனியுலகமாக நின்று, மனித விமோசனத்திற்கு வெளிச்சம் காட்டவில்லை. மாறாக, அது அதிகார உலகத்துடன் கைகோத்து நின்று மனிதர்களை விலங்கிட்டு வைத்திருக்கிறது என்ற கசப்பான உண்மையை அவர் கண்டுகொண்டார்.

தற்கால சமூக உலகம் ஒரு விபரீதமான வளர்ச்சிப் பாதையில் செல்கிறது. சாதாரண மனித உறவுகள் அசாதாரண அதிகார உறவுகளாக மாறி வருகின்றன. அதிகாரமானது சமூக வாழ்வின் சகல மட்டங்களிலும் ஊடுருவி நிற்கிறது. சகல சமூக அமைப்புகளிலும், சகல சமூக உறவுகளிலும் மையம் கொண்டிருக்கிறது. அதிகாரத்தின் இந்த மேலாதிக்கத்திற்கு அறிவு துணைபோகிறது. அறிவும் அதிகாரமும் ஒன்றோடு ஒன்று கூட்டுச் சேர்ந்து, ஒன்றுக்கொன்று முண்டுகொடுத்துச் செயற்படுகின்றன. இந்த எதிர்மறையான கூட்டுறவு ஆதிக்க உறவுகளை மேலும் வலுப்படுத்துகிறது. அறிவும் அதிகாரமும் ஒன்றிணைந்து, மிகவும் நுட்பமான முறையில், புலன்களுக்கு புலப்படாத வகையில், மனித உறவுகளை நெறிப்படுத்தி, ஒழுங்கமைத்து, கட்டுப்படுத்தி, மனித வாழ்வுமீது என்றுமில்லாத ஆதிக்கத்தைச் செலுத்தி வருகின்றன. அறிவும் அதிகாரமும் கூட்டாக பின்னிவிட்ட ஆதிக்க வலைக்குள் தற்கால மனிதன் மீளமுடியாதவாறு சிக்குப்பட்டுக் கிடக்கிறான் என்ற மையக் கருத்தையே பூக்கோவின் ஆய்வுகள் புலப்படுத்திக் காட்டுகின்றன.

தமிழீழ விடுதலைப் புலிகளின்
மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கத்தின்
மற்றொரு பரிமாணத்தை – பக்கத்தை –
அந்த மனிதருள் புதைந்திருக்கும்
இன்னொரு அதிசய ஜீவனை –
வெளிப்படுத்துகிறது
'விடுதலை' கட்டுரைத் தொகுப்பு.

அதிகாரம் பற்றியும் அதன் தோற்றுவாய் பற்றியும் அது மையம் கொள்ளும் நிறுவனங்கள் பற்றியும் காலம் காலமாக நம்பப்பட்டு வந்த கருத்துக்களை பூக்கோவின் விசாரணைகள் தகர்த்து விட முனைகின்றன.

அதிகாரமானது சமூகப் படிநிலையின் சிகரத்தின் மீது குவிந்து கிடக்கவில்லை. அல்லது அரசின் நிர்வாகச் சிம்மாசனத்திலிருந்து ஆட்சி புரியவில்லை. அன்றி, அது ஆளும் வர்க்கத்தின் அசையாச் சொத்துமல்ல. அதிகாரமானது எந்தவொரு மையத்திலிருந்தும் பிரவாகம் எடுக்கவில்லை. அது எங்கும், எல்லா இடங்களிலும் வியாபித்து நிற்கிறது. எங்கெங்கெல்லாம் மனிதர்கள் உறவுகொண்டு, கூட்டாக, குழுவாக, அமைப்பாக இயங்குகிறார்களோ, அங்கெல்லாம் அதிகார உறவுகள் இருக்கத்தான் செய்கின்றன. அதிகாரம் மையம் கொள்ளும் நுண் தளங்கள் (Micro - Centers of Power) பல ரகமானவை. அது குடும்பத்திலும் இருக்கிறது. கோவில் நிர்வாகத்திலும் இருக்கிறது. அதிகாரம் என்பது அரசியலுக்குச் சொந்தமானதல்ல. அதன் வீச்சு பரந்தது. அது சிறிய அளவிலும், பெரிய அளவிலும் எல்லா சமூக நிறுவனங்களிலும் பரந்து, செறிந்து கிடக்கிறது என்கிறார் பூக்கோ.

தற்கால சமூக வாழ்வில் அதிகாரம் எவ்வாறு மேலாண்மை செலுத்துகிறது? அது எவ்விதம் செயற்படுத்தப்படுகிறது? அதிகாரத்தை வலுப்படுத்தி, நிலைப்படுத்தி, செயற்படுத்துவதில் அறிவுலகங்களும் அவை சார்ந்த நிறுவனங்களும் எவ்வாறு துணைபோகின்றன? இந்தக் கேள்விகளுக்கு விடை காணும் வகையில், குற்றவியல், பாலியல், மனநோயியல் போன்ற துறைகளில் ஆழமான அகழாய்வை நிகழ்த்திப் பல உண்மைகளைத் தோண்டி எடுத்திருக்கிறார் பூக்கோ. இந்த 'அகழாய்வு' சமூகத்தின் அடித்தளத்திற்கும் அடியிலுள்ள பாதாள உலகத்திற்கும் அவரை இட்டுச்சென்றது. அங்கு வசித்த 'மனிதப் பேய்களின்' இருண்மையான வாழ்க்கை அனுபவம் அவரை வெகுவாகக் கவர்ந்தது. கொலைகாரர்கள், குற்றவாளிகள், பைத்தியக்காரர்கள், காமுகர்கள் என்ற முத்திரைகள் குத்தி இவர்களை வேண்டாதோராக, தீண்டாதோராகச் சமூகம் விலக்கி வைத்திருந்தது; ஒதுக்கி வைத்திருந்தது. இவர்கள் சமூகம் வரித்து விட்ட ஒழுக்க நெறிக்குள் வாழ மறுத்தவர்கள். சமூகத்தின் கட்டுப்பாடுகளை மீறியவர்கள். சமூகம் எண்ணியபடி சிந்திக்க மறுத்தவர்கள். சமூகத்தின் நியமங்களை நிராகரித்தவர்கள். இந்த அந்நியமானவர்களின் அனுபவக் கிடங்கிற்குள் இருப்பின் உண்மைகள் பல ஒளிந்து கிடந்தன. இந்த அனுபவக் கிடங்குகளை அகழாய்வு செய்தார் பூக்கோ.

(தொடரும்)

மதியுரைஞர் பாலாவின் மற்றொரு பரிமாணம்

# பொலிஸில் மாட்டிய த்ரிஷா



-த்ரிஷா-

தமிழ்த் திரையுலகில் தற்போது முன்னணியில் திகழ்ந்து வரும் நாயகி த்ரிஷா.

கதாநாயகிகள் மத்தியில் தற்போது பரவலாக பல கிசுகிசுக்களும், செய்திகளும், பேட்டிகளும் வந்தவண்ணமே உள்ளன. இதில் தற்போது அண்மையில் கிடைத்த தகவல்தான் இது.

கடந்த மாத இறுதிவரை வதந்தியாகவே இருந்து வந்த த்ரிஷாவின் விஷயம் சென்னை மாநகர பொலிஸ் கமிஷனரால் உண்மையாக்கப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து மகாவலிபுரம் செல்லும் வீதியில் உள்ள ஈஞ்சம் பாக்கத்தில் நள்ளிரவில் குடித்துவிட்டு துள்ளர் பாடலை ஒலிக்கவிட்டு அதிகாலை 2.30 மணிக்கு ஆண் நண்பர்களுடன் நடனம் ஆடிக்கொண்டிருந்த நடிகை த்ரிஷாவும் அவருடைய நண்பர்களும் பொலிஸாரால் எச்சரிக்கை செய்யப்பட்டு அனுப்பப்பட்டனர். இதுதான் செய்தியாளர்களுக்கு கிடைத்த தகவல்.

இதனை உடனே பத்திரிகையில் பிரசுரம் செய்த நிருபர் ஒருவரை தொலைபேசியில் அழைத்த த்ரிஷாவின் தாயார், அப்படி ஒரு விஷயமே நடக்கவில்லை என்று மறுத்தார்.

த்ரிஷாவிடம் இதுபற்றிக் கேட்டபோது, "அந்தச் செய்தி தவறானது. நான் தெலுங்கு படப்பிடிப்புக்காக ஹைதராபாத் போய் இருந்தேன். படப்பிடிப்புக்குப் பிறகு எனக்கு ஒருநாள் ஓய்வு கிடைத்தது. நான் சென்னை வந்தால் எனது தோழிகளை சந்திப்பது வழக்கம்.

அன்று வழக்கம் போல தோழிகளைச் சந்தித்தேன். கிழக்குக் கடற்கரைவீதியின் அருகில் உள்ள என் தோழியின் வீட்டிற்குச் சென்றிருந்த போது என் காரை வீதிஓரமாக நிறுத்தி வைத்திருந்தேன். ரோந்து வந்த பொலிசார் விசாரித்துவிட்டு, 'இது மோசமான இடம் உடனே சென்றுவிடுங்கள். இங்கு இருப்பதாக இருந்தால் ஈஞ்சம்பக்கத்திலிருந்து பாதுகாப்புக்காக பொலிஸாரை வரவழைக்கிறோம்' என்றார்கள். நான் தேவையில்லை என்றதும் அவர்கள் போய்விட்டார்கள்." என்று த்ரிஷா கூறினார்.

ஆனால் மறுநாள் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் இந்தச் செய்தியை உண்மை என்று ஒப்புக்கொண்டார் பொலிஸ் கமிஷனர். பொதுமக்களுக்கு இடையூறு விளைவித்ததாக த்ரிஷா மீது எப்.ஐ.ஆர் போடப்பட்டுள்ளதாம்.

த்ரிஷா என்றாலே பரபரப்புக்கு பஞ்சமில்லை என்றாகிவிட்டது. இந்த நிலையில் இப்படி ஒரு செய்தி. மிகவும் குழம்பிப்போயிருந்கிறாராம் த்ரிஷா. கடந்த வாரம் இதே ஈஞ்சம் பாக்கத்தில் குடித்துவிட்டு ரகளை செய்த பழம் பெரும் நடிகை லட்சுமியின் மகள் ஐஸ்வர்யாவை காவல்நிலையத்திற்கே கொண்டு சென்று விசாரித்திருக்கிறார்கள். லட்சுமியே உயர் பொலிஸ் அதிகாரிகளிடம் பேசி ஐஸ்வர்யாவை விடுவித்தாராம்.

ஒரே நாளில் நட்சத்திர அந்தஸ்து பெற்றுவிட்டது ஈஞ்சம் பாக்கம். பாவம்... அந்த ஊர் மக்கள்தான் தூக்கம் இல்லாமல் தவிக்கிறார்கள்.

எது எப்படியோ த்ரிஷாவின் புண்ணியத்தினால் இந்த ஈஞ்சம் பாக்கக் கிராமத்திற்கு தற்போது பொலிஸ் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

# நந்தாவின் 'கோடம்பாக்கம்'

உதவி இயக்குனராக இருந்து இயக்குனராக மாறும் கேரக்டரில் நந்தா நடிக்கும் படம் 'கோடம்பாக்கம்'. இயக்குனர் சேரனிடம் பயிற்சி பெற்ற ஜெகன்ஜி இயக்கும் இப்படத்தை ஏஏஏ மூவிஸ்இன்டர்நெஷனல் எனும் நிறுவனம் தயாரிக்கிறது. இப்படத்தின் முதல் கட்ட படப்பிடிப்பு மேட்டூரைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் 50 நாட்கள் தொடர்ந்து நடந்தது.



"கோடம்பாக்கம்"
-நந்தா, தேஜாஸ்ரீ, தியா-

பாடல் காட்சிகளை இங்கிலாந்து, இலங்கை ஆகிய நாடுகளில் படமாக்கவுள்ளார்கள். நாயகன் நந்தா சினிமா இயக்குனராக நடிப்பதால் அதன் பின்னணியாக தென்னிந்தியாவில் உள்ள அனைத்து டப்பிங் தியேட்டர்களிலும் இப்படத்தின் படப்பிடிப்பு நடக்கவுள்ளது.

இப்படத்தில் தியா, தேஜாஸ்ரீ ஆகியோர் கதாநாயகிகளாக நடிக்கவுள்ளனர். மற்றும் மணிவண்ணன், ரமேஷ்கண்ணா, மனோபாலா உட்பட பலர் நடித்துள்ளனர். இப்படத்தில் இயக்குனர் சேரன் ஒரு சிறப்புத் தோற்றத்தில் தோன்றுகிறார்.

சிற்பியின்இசையில் சங்கர் மகாதேவன், சிலோன் மனோகர் (ஏ.ஈ.மனோகரன்) ஜாஸி கிஃப்ட் ஆகியோர் இப்படத்திற்காக பாடல்களைப் பாடியுள்ளார்கள்.

# எப்படி இருந்தனான் இப்படி....?

'எப்படி இருந்தநான் இப்படி ஆயிட்டேன்?' விவேக்கின் இப் புகழ் பெற்ற வசனத்தை வேதனையோடு உச்சரித்தாராம் கே.எஸ்.ரவிக்குமார். ஐக்குபாயில் சறுக்கிய ரவிக்குமார் அடுத்தடுத்து சந்தித்தபிரச்சினைகள் ஏராளம்.

ரஜினிக்காக, ரவிக்குமார் இயக்க விருந்த ஐக்குபாய் படத்தை ரஜினி நிராகரித்த வேகத்தோடு அஜித்தை வைத்து காட்பாதர் படத்தைத் துவங்கினார். பல்வேறு பிரச்சினைகளால் அந்தபடப்பிடிப்பு தொடரமுடியாமல் போனது.

அந்த படத்தை அப்படியே போட்டு விட்டு அமுதா துரைராஜ் தயாரிப்பில் சிலம்பரசனை வைத்துஒரு படத்தை இயக்கலாம் என போனார். அங்கேயும் பிரச்சினை. ஆரம்பத்தில் ஒரு கோடி ரூபாய் சம்பளத்திற்கு நடிக்க ஒப்புக் கொண்ட சிம்பு, 'தொட்டி ஜெயா' படத்தின் முதல் பகுதியை பார்த்ததும் தன் சம்பளத்தை இரண்டரைக் கோடியாக உயர்த்திவிட்டாராம். 'இது சரிவராது' என்று படத்தை துவக்கநிலையிலேயே நிறுத்திவிட்டார் அமுதா துரைராஜ். மறுபடியும் நின்று போன காட்பாதரில் கவனம் செலுத்திய ரவிக்குமார், அப்படப் பிடிப்புக்காக ஹைதராபாத் போனார். ஒரு வாரம் கூட படப்பிடிப்பு நடக்கவில்லை. பணப்பற்றாக்குறை காரணமாக சென்னைக்குத் திரும்பிவந்துவிட்டனர்.

இப்போது இன்னொரு படத்தை இயக்கிவிடும் முயற்சியில் முக்கிய மான கம்பெனி ஒன்றின் கதவை தட்டிக் கொண்டிருக்கிறார் ரவிக்குமார். தயாரிப்பாளர்களின் இயக்குனர் என்று செல்லமாக அழைக்கப்படும் ரவிக் குமாருக்கே இந்தக்கதி என்றால்.... ம் எல்லாம் நேரம்தான்.

# காதலித்த அனுபவம் எனக்கு இதுவரைக்கும் இல்லை -பூமிகா

'ரோஜாக்கூட்டம்' படத்தில் ஸ்ரீகாந்துடனும், 'பத்ரி' படத்தில் விஜய்யுடனும் என தமிழ்ப் படங்களில் நடித்தவர் பூமிகா.

திடீரென, 'இவர் இயக்குனர் ஒருவரைக் காதலிக்கிறார் அதனால் படங்களில் நடிக்கமாட்டார்' என்ற கதை உலாவியது. இதனாலோ என்னவோ புதுப்பட வாய்ப்புக்கள் இல்லாது போயின.



-பூமிகா-

இதனால் இந்திப் பக்கம் தாவினார் அவர். இந்தித் திரையுலகில் கொடிகட்டிப் பறக்கிறார். தமிழ்த்திரை உலகில் அறிமுகமான பின் இவர், தெலுங்கில் புகுந்தார். அங்கு இவர் நடித்த 10 படங்களில் 7 ஹிட் ஆனது.

தனக்கு மதுபானம் அதிகம் பிடிக்கும் என்று கூறும் பூமிகாவுக்கு தற்போது இந்தி சினிமாவில் நிறைய படங்கள் கைவசம் உள்ளன. 'சில்சிலே' என்ற படம் நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. இதில் தாராளமாக கவர்ச்சியைக் காட்டி நடித்துள்ளார்.

அவரிடம் பின்வரும் கேள்விக் கணைகளைத் தொடுத்தோம்.

**கே: 'சில்சிலே' படத்தில் கவர்ச்சி காட்ட எப்படிச் சம்மதிச்சீங்க?**

ப: முதலில் விருப்பம் இல்லை. பின்னர் கதை வித்தியாசமாக இருந்தது. அதனால் ஒத்துக்கிட்டேன். நடிச்சேன். சல்மான் கான், அஜய்தேவ்கான் ஆகியோருடன் நடித்தது சந்தோஷமாக இருக்கிறது.

**கே: உங்களுக்கு முன்னர் காதலில் விழுந்த அனுபவம் ஏதாவது உண்டா?**

ப: காதலில் விழுவது சுகமான அனுபவம். ஆனால் அப்படி வாய்ப்பு எனக்கு கிடைக்கவில்லை. அதற்கான நேரமும் என்னிடம் இல்லை.

**கே: யோகா மாஸ்டர் பரத் தாகூருடன் உங்களுக்கு காதலா? இருவரும் சேர்ந்து சுற்றுகிறீர்களே?**

ப: இதற்கு நான் பதில் சொல்லமாட்டேன். இது எனது சொந்த விஷயம். நாங்கள் இருவரும் நல்ல நண்பர்கள்.



'கலாப காதலன்'
-ஆர்யா, ரேணுகாமேனன்-

# மகன்மாரின் செயலால் பூரிப்படைந்தார் தந்தை

படத்திற்குப் படம், கதாபாத்திரத்திற்கு ஏற்றாற்போல் தன்னை மாற்றிக்கொள்ளும் நடிகர்களாக விக்ரம், சூர்யா, சிம்பு போன்றோர் முன்னணியில் உள்ளனர். இவர்களுடன் தற்போது புதிதாகக் கூட்டுச் சேர்ந்துள்ளவர்தான் கார்த்தி. இவர் சூர்யாவின் தம்பியாவார்.

படத்திற்குப் படம் வித்தியாசமான நடிப்பைக் காட்டும் சூர்யா விதவிதமாய் சாப்பாடு கேட்டு வீட்டில் ரகளை செய்திருக்கிறார் முன்பு.

ஆனால் பிதாமகன் படத்துக்காக சூர்யாவை கன்னம் உப்பச் சொல்லியிருந்தார் டைரக்டர் பாலா. ஆனால் கஜினி படத்துக்காக ஒட்டிய கன்னமும், விலா எலும்பு தெரியிற மாதிரியும்இளைக்க வேண்டும் என டைரக்டர் ஏ.ஆர்.முருகதாஸ் சொல்லிவிட்டார். இயக்குநரின் கட்டளைப்படி கடந்த 6 மாதமாக அரிசி சாப்பாட்டையே தொடவில்லை சூர்யா. வெறும் காய்கறிகளை மட்டுமே சாப்பிட்டு வந்தாராம்.

வீட்டில் மற்றவர்கள் சிக்கன், மட்டன் என விதவிதமாய் வெட்ட... அவர்களையெல்லாம் ஒரு முறை முறைத்துவிட்டு முட்டைக்கோஸ், கரட், என்று உண்டுவருகிறார்.



'கஜினி' -சூர்யா-

கடந்த வாரம் உள்ளே நுழைந்த சூர்யா, நிறைய காய்கறிகள் வெட்டி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டதும், மூஞ்சியை டென்ஷனாக வைத்துக் கொண்டு 'ஏன் இந்த கோழிக்குருமா, கோலா உருண்டையெல்லாம் செய்யமாட்டீங்களா? வாய்க்கு ருசியா காரசாரமா செஞ்சு போட வேண்டியதுதானே' என சமையற்கட்டுக்குள் போய் அம்மாவிடம் ரகளை செய்துவிட்டுதன் அறைக்குள்போய் ஒளிந்து கொண்டாராம்.

அப்புறம்தான் தெரிந்திருக்கிறது, கஜினி படத்தின் காட்சிகள் முடிவடைந்த விஷயம். அப்புறம் என்ன விதவிதமாய் சமைத்துப் போட்டாராம் சூர்யாவின் அம்மா.

இது இப்படியிருக்க, 'பருத்திவீரன்' ஹீரோவாக நடிக்கும் கார்த்தியை கூப்பிட்ட டைரக்டர் அமீர், என்ன செய்வியோ தெரியாது, இப்படி வெள்ளப்பழுத்தா மாதிரி இருக்காம, கன்னக்கரேல் என்று வரணும் எனச் சொல்லிவிட்டாராம். இதற்காக டவுசர் மட்டும் போட்டுக் கொண்டு பெசன்ட் நகர் பீச்சில் மத்தியான வேளையில் தினசரி காய்ந்திருக்கிறார் கார்த்தி.

தனது மகன்மாரின் நடிப்புப் பக்தியை பார்த்து மெய்சிலிர்த்த திரையுலக மார்க்கண்டேயர் சிவகுமார் பூரிப்பில் இருக்கிறார். இருவரின் படமும் ஒன்றாக வெளியாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. படம் வந்தால்தான் இருவரின் நிலைகளும் எப்படிஎன்று தெரியும்.

# இடுப்பில் கத்தி வைக்கிறேன் -நமீதா

நமீதா என்றாலே நாலடி தள்ளி நின்றுதான் பேசுகிறார்கள் இளம் ஹீரோக்கள்.

நமீதாவின் நெடுநெடு உயரமும் கிடுகிடு எடையும் சத்தியராஜ், சரத்குமார் போன்ற மூத்த 'பொடிபில்லர்'களுக்கு மட்டுமே ஜோடி சேரும் வகையில் இருப்பதால்தான் இந்த நாலடி இடைவெளி.

நிலைமை இப்படி இருக்க வயது முதிர்ந்த நடிகர்களும் நமீதாவை விட்டு உதிர்ந்து கொண்டிருக்கிறார்கள். காரணம் 'சிக்' கென்ற நமியின் இடுப்பு 'செக்'உரல் மாதிரி பெருத்துவிட்டது. மேலதிகமாக கை வாங்கித்தான் இடுப்பை அணைக்கமுடியும் என்று நிலைமை சீரியஸாக, உஷாரான நமி, இடுப்பு கொழுப்பை ஆப்பரேசன் செய்து குறைக்க இருக்கிறார்.

சில மாதங்களுக்கு முன்புதான் தனது சிறிய உதட்டை பெரிதாக்க ஆப்பரேஷன் செய்யப்போவதாக கூறிவந்தார். சத்தியராஜ் தலையிட்டு 'சின்னது தான் உனக்கு சிறப்பா இருக்கு' என்று அட்வைஸ் செய்ய ஆப்பரேஷன் திட்டத்தை கைவிட்டார்.

இப்போது பெரிசை சிறிசாக்கப்போகிறார். இதற்கு எந்த ஹீரோக்களிடமிருந்தும் எதிர்ப்பு வந்ததாக தெரியவில்லை.

டூயட்டில் தூக்கிச் சுமப்பவர்கள் அவர்கள் அல்லவா?



-நமீதா-

# ஸ்லிமாக அஜித்



ஊதிப்போன தனது உடம்மை குறைத்துவிட்ட அஜித் இளமையுடன் அழகாகத் தோன்றுகிறார்.

தமிழ் ஹீரோக்களில் மேக்கப் இல்லாமலே அழகான தோற்றம் கொண்டவர் அஜித். 'கெட்—அப்' சேஞ்ச் இல்லாத படங்களில் பெரும்பாலும் இவர் மேக்கப் போடாமல் கூட நடித்துவிடுவார். வெறும் ஈரடவலால் முகத்தை ஒத்தி துடைத்துவிட்டு நடிப்பதற்கு ரெடியாகிவிடுவார். ஆனால் கடந்த 2 வருடங்களாக உடல் உப்பி அவரது இளமை மிஸ்ஸிங். ஆனால் தற்போது உடல் இளைத்து மெல்லிதாக அழகாக காலேஜ் மாணவன் போல இளமையுடன் காட்சியளிக்கிறார் அஜித்.

சமீபத்தில் அவரது மைத்துனன் ரிச்சட் நடித்த 'எ பிலிம் பை அர்விந்த்' தெலுங்குப் படத்தை பார்க்க குட்லக் ப்ரிவியூ தியேட்டருக்கு குடும்பத்துடன் இரவுக் காட்சிக்கு வந்த அஜித்தைப் பார்த்த சினிமா புள்ளிகள் அஜித்தா இதுஎன்று பேசிக்கொண்டனர்.

சரத்குமாரும் தற்போது பத்துவயது குறைந்தவர் போல தோன்றுகிறார். அமெரிக்கா சென்று செய்த விசேஷ சிகிச்சையின் மாயம் இது என்று நாம் கேள்விப்பட்டோம். கன்னத்தில் கொஞ்சம் சதை பிடித்திருக்கிறது. கண்களை சுற்றியுள்ள பகுதி வழக்கத்தைவிட பொலிவாகத் தெரிகிறது.

இந்த அழகுச் சிகிச்சை ஐடியா, ராதிகா சரத்குமார் கொடுத்த ஆலோசனையா?

# தனுஷுக்கு சிறந்த ஜோடி நான்தான்

## சோனியா அகர்வால்

அப்பா, ''இவதான் என் வருங்கால மருமகள்'' என்கிறார். மகனோ, ''அது அவரோட விருப்பம். மற்றபடி நோ, கல்யாணம்'' என்கிறார். இவர்கள் இருவரின் வாயிலும் அரைபடும் சோனியா அகர்வாலோ, ''ஓ, அப்படியா சொல்கிறார்கள்!'' என்று வெறும் ஆச்சரியத்தை மட்டும் காட்டி, வெறுப்பேற்றுகிறார்.

உண்மையில் நடப்பது என்ன?

''இன்னும் நான்கு வருஷத்துக்கு சினிமாவைத் தவிர வேறு சிந்தனையில்லை. காதல் என்னுடைய வாழ்க்கையில் இரண்டு தடவைகள் வந்திருக்கிறது. அப்படியொரு உணர்வு இனி ஏற்பட்டால், அப்போது கல்யாணத்தைப் பற்றி யோசிக்கலாம்'' என்று 'புதுப்பேட்டை'யில் மூழ்கி விடுகிறார் செல்வராகவன்.

''சினிமாவில் நான் நிறைய சாதிக்க வேண்டியிருக்கிறது. பாசில் சார் இயக்கத்தில் 'ஒரு நாள் ஒரு கனவு', நந்தா பெரியசாமியின் 'ஒரு கல்லூரியின் கதை', கரு பழனியப்பனின் 'சதுரங்கம்' என வரிசையாக படங்கள் வெளியாவதற்கு தயாராக இருக்கின்றன. இப்போது, சரவணா செல்வரத்தினத்துக்காக எடுத்த 'எடுத்துக்கோ எடுத்துக்கோ' விளம்பரமும் ஹிட்டாயிடுச்சி. அப்புறம் செல்வாவோட 'புதுப்பேட்டை'யில் நடிக்கிறேன்'' என கண்களில் கனவு மிதக்க பேசுகிறார் சோனியா அகர்வால்.

பிளஸ்டூ முடித்து மாடலிங் செய்து கொண்டிருந்த இவரை சினிமாவுக்கு அழைத்து வந்தவர் செல்வராகவன். இவரது முதல் ஹீரோ தனுஷ்.

அண்ணன், தம்பி பற்றி சோனியாவின் கருத்து என்ன?

''என்னுள் இருந்த கலையை கண்டுபிடித்த ஜென்ஸ்மேன் செல்வராகவன்''

''தனுஷின் பேவரிட் நாயகி நான். காதல் கொண்டேனில் வெளுத்து வாங்கிய சுள்ளான் அவர்''

(யப்பா! ஒரு வழியா டைட்டிலை கொண்டு வந்திட்டோம்)

# பிரபு-முரளி 'பாசக்கிளிகள்'

கட்சி நடத்தும் நேரம் போக மீதி நேரத்தில் கதை வசனம் எழுதுவதில் ஆர்வம் காட்டுகிறார் கருணாநிதி. 'கண்ணம்மா', 'மண்ணின் மைந்தன்' படங்களைத் தொடர்ந்து செந்தமிழ் வசனத்தை சுடச்சுட பிரசவிக்கப் போகிறது 'பாசக்கிளிகள்' படத்துக்காக இவரின் பேனா.

தலைப்பைப் படித்தே பாதி கதையை ஊகித்துவிடலாம். பிரபு, முரளிஇருவரும் கதாநாயகர்கள். இவர்கள்தான் பச்சைக்கிளிகள் என்று சொல்லத் தேவையில்லை. படத்தில் மூன்று பாசக் கவிகளும் இருக்கிறார்கள். வாலி, வைரமுத்து, பா.விஜய். 'பச்சைக்கிளி'களுக்கு தாலாட்டு எழுதுகிறவர்கள் இந்த கவிகள்தான்.

சந்திரமுகிக்குப் பின்னர் பிரபுவுக்கும், நீண்ட கால இடைவெளியின் பின்னர் முரளிக்கும் கிடைக்கும் அரிய சந்தர்ப்பம் இது.

மற்றும் நாசர், வடிவேலு, பசுபதி, வினீத், தியாகு, நவ்யாநாயகர், மாளவிகா, ரோஜா, மனோரமா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

இப்படத்திற்கு வித்தியாசகர் இசையமைக்க, கருணாநிதி கதை, திரைக்கதை வசனம் எழுத இப்படத்தை இயக்குகிறார் அமிர்தம்.

மதுரை, பொள்ளாச்சி, மைசூர் ஆகிய பகுதிகளுக்கு 'பச்சைக்கிளி'கள் பறந்து செல்லவிருக்கின்றன.

# ராசி பலன்

**மேடம்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

(1,8) உரிய செவ்வாய் ராசியில் ஆட்சியாக இருப்பது தோசம். ஆனால், வலுவாக இருப்பதால் சில நன்மைகளும் உண்டு. மேலும் சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் தடைப்பட்டாலும் நிறைவேறும். ஆனால், சனி, செவ்வாய் ஒன்றை ஒன்று நோக்குவது பல பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும். (2,7) உரிய சுக்கிரன் 5இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். திருமணவாய்ப்பு உண்டு. நாலாம் இடத்தில் இரு தீய கிரகங்கள் இருப்பதால் தாய்க்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (9,12) உரிய குரு 6இல் இருப்பது நன்மை செய்யாது. பிதாவுக்கு கூடாது. சயன சுகம் இருக்காது. (10,11) உரிய சனி 4இல் இருப்பது தீங்கானது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. நண்பர்களுக்கு நல்ல பலன் இருக்காது. மூத்த சகோதரத்துக்கும் கூடாது.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

(1,6) உரிய சுக்கிரன் 4இல் இருப்பது விசேஷம். இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது பலன் செய்யாது. ராசியைக் குரு பார்ப்பது நல்லது. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். உடல் ஆரோக்கியம் உண்டு (2,5) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். நாலுக்குரிய சூரியன் மூன்றில் இருப்பது நல்லது. தாய் நலம். வாகன சுகம் உண்டு. (7,12) உரிய செவ்வாய் 12இல் இருப்பது நல்லதல்ல. ஒரு வகையில் தோசமானது. திருமண வாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் உண்டு. (9,10) உரிய சனி மூன்றில் இருப்பது நல்லது. பிதா நலம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும் அதிஷ்டம் இருக்கும். (8,11) உரிய குரு 5இல் இருப்பது நல்லது. நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கும் நல்லபலன் உண்டு.

**மிதுனம்: மிருகசீரிடம்3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் இரண்டில் இருப்பது நல்லது. மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைச் செய்யும் பிரயாண வாய்ப்பு உண்டு. தாய் நலம். வாகன சுகம் உண்டு. இரண்டாம் இடத்தில் இருதீய கிரகங்கள் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (5,12) உரிய சுக்கிரன் மூன்றில் இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (6,11) உரிய செவ்வாய் 11இல் ஆட்சியாக இருப்பது விசேஷம். உடல் ஆரோக்கியம் உண்டு. எதிரிகள் நண்பராவர். நண்பர்களுக்கு நல்லபலன் உண்டு. மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் உண்டு. (7,10) உரிய குரு 4இல் இருப்பது தோசமானது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

ராசிநாதன் சந்திரன் சிங்கம் முதல் விருச்சிகம் வரை சஞ்சரிப்பார். வார மத்தியில் நல்ல பலன் உண்டு. இருப்பினும் சனியும் சூரியனும் புதனும் ராசியில் இருப்பது பல பிரச்சினைகளைக் கொடுக்கும். மன அமைதி இருக்காது. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். இரண்டுக்குரிய சூரியன் ராசியில் இருப்பது நல்லபலனைச் செய்யாது. கையில் பணம் இருக்காது. (3,12) உரிய புதன் ராசியில் இருப்பது கூடாது. சயன சுகம் இருக்காது. இளைய சகோதரத்துக்கும் கூடாது. (4,11) உரிய சுக்கிரன் இரண்டில் இருப்பது விசேஷம். தாய் நலம். வாகன சுகம் உண்டு. நண்பர்கள் உதவி செய்வர். மூத்த சகோதரத்துக்கு நல்லது. (5,10) உரிய செவ்வாய் 10இல் ஆட்சியாக இருப்பது சமசுகம். தொழில் துறைமுன்னேறும். சில சிக்கல்கள் தோன்றக்கூடும். 7க்குரிய சனி ராசியில் இருப்பது திருமணவாய்ப்பை பாதிக்கலாம்.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் 12இல் இருப்பது பலன் செய்யாது. இருப்பினும் புதனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,11) உரிய புதன் 12இல் இருப்பது நல்ல பலன் செய்யாது. கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கும் நல்ல பலன் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (3,10) உரிய சுக்கிரன் ராசியில் இருப்பது நல்லது. தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய செவ்வாய் 9இல் இருப்பது நல்லதல்ல. தாய்க்கு நல்ல பலன் இல்லை. வாகன சுகம் இருக்காது. (6,7) உரிய சனி 12இல் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். பகைவிலகும். 12ஆம் வீடுகளில் பல கிரகங்கள் இருப்பதால் சயன சுகம் குறையலாம்.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 11இல் இருப்பது சிறப்பானது. மேலும் சனியின் நட்சத்திரத்தில் இருப்பதும் நல்லதே. தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத்தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. (2,9) உரிய சுக்கிரன் 12இல் நல்ல பலனைச் செய்யும். கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்ல பலன் உண்டு. (4,7) உரிய குரு ராசியில் இருப்பது தோசமானது. வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். (5,6) உரிய சனி 11இல் இருப்பது நல்லது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். பகைவர் நண்பராவர். உடல் ஆரோக்கியம் உண்டு. 12க்குரிய சூரியன் 11இல் இருப்பது நல்லது. சயன சுகம் உண்டு. ராகு, கேதுக்களுடன் ராசி தொடர்புபடுவது நல்லதல்ல. மன அமைதி பாதிக்கலாம்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

(1,8) உரிய சுக்கிரன் 11இல் இருப்பது விசேஷம். இருப்பினும் சூரியனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யாது. தொடங்கும் காரியங்கள் தாமதமானாலும் நிறைவேறும். பிரயாண வாய்ப்பு உண்டு. (2,7) உரிய செவ்வாய் 7இல் இருப்பது தோசமானது. கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு பாதிக்கலாம். (3,6) உரிய குரு 12இல் இருப்பது நல்லதல்ல. இளைய சகோதரத்துக்கு கூடாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். பகை விலகும். (4,5) உரிய சனி 10இல் சமசுகம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு சமசுகம். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (9,12) உரிய புதன் 10இல் நல்ல பலனைச் செய்யாது. பிதாவுக்கு நல்லபலன் இல்லை. சயன சுகம் இருக்காது. 10ஆம் இடத்தில் மூன்று கிரகங்கள் இருப்பது தொழில்துறை முன்னேற உதவி செய்யும்.

**விருச்சிகம்: விசாகம் 4,அனுசம், கேட்டை**

(1,6) உரிய செவ்வாய் 6இல் ஆட்சியாக இருப்பது நல்லது. மேலும் சுக்கிரனின் நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைச் செய்யும். உடல் ஆரோக்கியம் உண்டு. (2,5) உரிய குரு 11இல் இருப்பது நல்லது. கையில் பணம் இருக்கும். பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். (3,4) உரிய சனி 9இல் இருப்பது நன்மையில்லாவிடினும் தீமை இருக்காது. இளைய சகோதரத்துக்கு சமசுகம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு சமசுகம். (7,12) உரிய சுக்கிரன் 10இல் நன்மை செய்யாது. திருமணவாய்ப்பு பாதிக்கலாம். சயன சுகம் இருக்காது. 10க்குரிய சூரியன் 9இல் நல்ல பலனைச் செய்யாது. ஆனால் சூரியனோடு வேறு கிரகங்கள் இருப்பதால் தொழிலில் பக்க உதவிகள் கிடைக்கலாம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 10இல் கேதுவுடன் இருப்பது நல்லதல்ல. இருப்பினும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்லபலன் இல்லை. (2,3) உரிய சனி 8இல் இருப்பது பாதகமானது. கையில் பணம் இருக்காது. இளைய சகோதரத்துக்கு கூடாது. (5,12) உரிய செவ்வாய் 5இல் நல்ல பலனைச் செய்யாது. பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டார். சயன சுகம் இருக்காது. (6,11) உரிய சுக்கிரன் 9இல் நல்ல பலனைச் செய்யும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. உடல் ஆரோக்கியம் உண்டு. (7,10) உரிய புதன் 8இல் சூரியனோடு இணைவதால் திருமணபலன் உண்டு. தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. குரு, சனி, வழிபாடு ஆறுதல் தரும்.

**மகரம்: உத்தராடம்2,3,4,.திருவோணம்,அவிட்டம்1,2**

(1,2) உரிய சனி 7இல் நல்ல பலனைச் செய்யாது. இருப்பினும் தனது நட்சத்திரத்தில்

**இவ்வார 'ராசிபலன்' 01–08–2005 முதல் 07 –08–2005வரை**

**பொ. சந்திரன்**

இருப்பது ஆறுதல் உண்டு. தொடங்கும் காரியங்கள் தாமதமாகலாம். கையில் பணம் இருக்காது. பிரயாண வாய்ப்பு உண்டு. (3,12) உரிய குரு 9இல் இருப்பது விசேஷம். சயன சுகம் உண்டு. இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,11) உரிய செவ்வாய் 4இல் இருப்பது தோசம். வாகன சுகம் இருக்காது. தாய்க்கு நல்ல பலன் இல்லை. நண்பர்களுக்கும் சுகம் இல்லை. மூத்த சகோதரத்துக்கும் கூடாது. (5,10) உரிய சுக்கிரன் 8இல் நல்ல பலனைச் செய்யும். தொழில்துறை முன்னேறும் பிள்ளைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 7ஆம் வீட்டில் இரு தீய கிரகங்கள் இருப்பது திருமணத்தைப் பாதிக்கலாம். (6,9) உரிய புதன் 8இல் சூரியனோடு இருப்பது உடல் ஆரோக்கியம் உண்டு.

**இவ்வார கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| ராகு | செவ் | | |
| | செவ்வாய் அச்சுவினி கேது<br>சுக்கிரன் பூரம் சுக்கிரன்<br>புதன் புனர்பூசம் குரு<br>சூரியன் ஆயிலியம் புதன்<br>குரு அத்தம் சந்திரன்<br>சனி பூசம் சனி | | சூரியன் புதன் சனி |
| | | | சுக்கிரன் |
| | | | குரு கேது |

ஆடி 16முதல் 22 வரை

சந்திரன் மிதுனம் முதல் சிங்கம் வரை

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 6இல் இருப்பது விசேஷம். மேலும் தனது நட்சத்திரத்தில் இருப்பது நல்ல பலனைச் செய்யும். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். பிரயாண வாய்ப்பு உண்டு. சயன சுகம் உண்டு. (2,11) உரிய குரு 8இல் இருப்பதில் பயன் இல்லை. கையில் பணம் இருக்காது. நண்பர்களுக்கும் கூடாது. மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் இல்லை. (3,10) உரிய செவ்வாய் மூன்றில் ஆட்சியாக இருப்பது விசேஷம். தொழில்துறை முன்னேறும். இளைய சகோதரத்துக்கு நல்ல பலன் உண்டு. (4,9) உரிய சுக்கிரன் 7இல் நல்ல பலனைச் செய்யாது. வாகன சுகம் இருக்காது. பெற்றோருக்கு நல்லபலன் இல்லை. 7க்குரிய சூரியன் 6இல் இருப்பது விசேஷம். திருமணவாய்ப்பு பிரகாசமாக இருக்கிறது.

**மீனம்: பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 7இல் இருப்பது நல்லது. மேலும் சந்திரனின் நட்சத்திரத்தில் இருப்பது விசேஷம். தொடங்கும் காரியங்கள் நல்ல பலனைத் தரும். தொழில்துறைமுன்னேறும். ராசியில் ராகுவும் 7இல் கேதுவும் இருப்பது தோசமான நிலை. (2,9) உரிய செவ்வாய் இரண்டில் இருப்பது தோசம். இருப்பினும் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லதல்ல. (4,7) உரிய புதன் 5இல் இருப்பது நல்லது. வாகன சுகம் உண்டு. தாய்நலம். திருமணவாய்ப்பு உண்டு. 6க்குரிய சூரியன் 5இல் இருப்பது நல்லதல்ல. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எதிரிகளின் தொல்லை இருக்கும். (11,12) உரிய சனி 5இல் இருப்பது நல்லதல்ல. சயன சுகம் இருக்காது. மூத்த சகோதரத்துக்கு நல்லபலன் இல்லை, அதே போல் நண்பர்களுக்கும் பலன் அமையும்.

# கோபுர தீபம்....

(20) ஆம் பக்கத் தொடர்ச்சி

அமைதியான இரவில் உறக்கமின்றி அவன் இன்ப நினைவுகளிலிருந்த போது அந்த அமைதியைக் கலைத்துக் கொண்டு வானத்தில் சீறிக்கொண்டு வந்த ஷெல் ஒன்று விழுந்து வெடிப்பது கேட்டது. அந்த சிதறலில் ஒரு கணம் நினைவு அறுபட்டுப்போய் மீண்டும் பழைய நிலைமைக்குத் திரும்பியபோது, அமைதியைக் கலைத்துக்கொண்டு துப்பாக்கிச் சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

ஒரு பத்து நிமிடம் அமைதியாக இருந்தது. அதன் பிறகு பூமியே பிளத்ததுபோல அதிர்ச்சி மிகுந்த பேரொலி எழுந்தது. எத்தனையோ மனித உயிர்கள் இந்த வேளையில் மரணித்திருக்கக் கூடும் என எண்ணிய இராகுலனின் மனதில், கொடிய யுத்தத்தின் மீதும் ஆயுத கலாசாரத்தின் மீதும் வெறுப்பு ஏற்பட்டது.

கைகளும், கால்களும் வேறு வேறாய்ப்போன நிலையில் சிதறிப் போயிருக்கும் மனித உடல்கள் மனதில் தரிசனமாகின. ஏற்கனவே இவ்வாறான ஒரு சூழ்நிலையில் அகப்பட்டு, மயிரிழையில் உயிர் தப்பிய நிகழ்வு மனத்திரையில் ஓடியது. அன்றுதான் நண்பன் கேசவனைப் பறிக்கொடுத்தான்.

துப்பாக்கிகளின் ஓசைகள் அடங்கத் தொடங்கியிருந்த வேளையில், சேவலின் கூவல் விடிவை அறிவித்தது. எழுந்து வெளியே வந்த ராகுலனின் உடல் காற்றிலும் நிலத்திலும் நிரம்பியிருந்த பனியில் சிலிர்த்தது. பறவைகளின் மெல்லிய ஓசைகளில், மலர்ந்திடும் பூக்களின் நறுமணத்தில் அதிகாலையின் வரவு தெரிந்தது.

''எங்கையாம் பிரச்சினை?'' அம்மா தான் கேட்டாள்.

''அண்ணி வீட்டுப் பக்கம் போல இருந்தது...'' அகல்யா பதற்றத்துடன் கூறினாள்.

ராகுலனின் இதயத்தில் அச்ச உணர்வு எழுந்தது. ''கடவுளே, காஞ்சனாவுக்கு எதுவும் நடந்திருக்கக் கூடாது.''

நடந்து முடிந்தவற்றுக்கு கடவுளை வேண்டித்தான் என்ன செய்வது? தாமதமாக வந்த செய்திகள் மனதை நெருடின.

இரவு நடந்த சுற்றி வளைப்பின் போது, ஒரு பெண் எதை இழக்கக்கூடாதோ, அதை காஞ்சனா இழந்து விட்டதாக தகவல்கள் கசிந்து வந்தன. ராகுலன் உறைந்து போனான்.

''அண்ணா, நிலைமையைப் பார்த்து ஒருக்கா அண்ணி வீட்டுப் பக்கம் போகலாமே?'' அகல்யா தான் கேட்டாள்.

''இனி ஒண்டும் அங்கே போகத் தேவையில்லை... அது முடிஞ்ச கதை... இனி வேற இடம் பார்க்க வேண்டியது தான்...'' அம்மா இறுக்கமாகக் கூறவே.....

''என்னம்மா..?'' என்று அகல்யா அம்மாவிடம் கேட்டபடி அண்ணாவின் பக்கம் திரும்பிப் பார்த்தாள். அவனது முகம் இறுக்கமாய் இருந்தது. ஆதரவாக ஒரு வார்த்தை தானும் இல்லை.

அண்ணாவை அவள் வெறும் போடும் ஆதங்கத்தோடும் நோக்கினாள்.

''அம்மா சொல்லுறதும் சரிதானே.'' என்றான் ராகுலன்.

அகல்யா அவனை அதிர்ந்து நோக்கினாள். அம்மாவும் அண்ணாவும் வெறுக்கும் ஒரு தருணம் கூட ஏற்படும் என்று அவள் நினைத்துப்பார்த்தது கூட இல்லை.

''இப்படி மனிதாபிமானம் இல்லாமல் கதைக்கிறியளே? ஒருவேளை கலியாணத்திற்குப் பிறகு இப்படி நடந்திருந்தால்...'' அவர்களை எரித்து விடுவதுபோல பார்த்தாள் அகல்யா.

அவர்கள் பதில் கூறவில்லை.

''ஏன், இப்படி எனக்கு நடந்திருந்தால்?'' அகல்யாவின் கண்களில் நீர்த்துளிகள்!

அம்மாவையோ, ராகுலனையோ அது அசைக்கவில்லை.

இதே நேரம் பாதிப்புக்குள்ளான காஞ்சனா, ராகுலன் வரக்கூடும் என எதிர்ப்பார்த்தாள். மூன்று நாட்கள் கடந்தும் அவன் வரவில்லை. எல்லையில்லா சோகத்தில் அவளது வீடு ஆழ்ந்திருந்தது. வெண்ணை திரண்டும் வரும்போது தாழியுடைந்த நிலை!

காஞ்சனாவுக்கு நடந்துவிட்ட அவலத்தை ஊடகங்களும் மனித நேய அமைப்புக்களும் கண்டித்தன. அவ்வளவுதான்.

ஆனால், அவளது வாழ்வுக்கு வழி?

ராகுலனின் வரவுக்காக அவளது மனம் ஒவ்வொரு கனமும் ஏங்கித் தவித்தது. அவன் வரவேயில்லை. நான்காவது நாள் காஞ்சனா தற்கொலை முயற்சியில் இறங்கி, அதிலும் தோற்றுப்போனாள். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டிருந்தபோது அவளது மனது குன்றிப்போனது.

மாலையில் எதிர்பாராமல் சிவதாசன் அவளைப் பார்க்க வந்திருந்தான். தானாடாவிட்டாலும் தன் தசை ஆடுமோ?

''கொழும்பால இப்பதான் வந்தேன், கேள்விப்பட்டன். சாப்பிடக்கூட இல்லை. உடனே ஓடிவந்திட்டன்...''

அவனது தவிப்பான வார்த்தையில் உருகி ஒருவித ஆறுதலை உணர்ந்தாள் காஞ்சனா. அவனை நோக்கிய அவளது கண்கள் ஊற்றெடுத்தன. இருண்டு துவண்டு போயிருக்கும் அவளது கண்களில் பெருகும் நீரைத்துடைத்து விட வேண்டும் போலிருந்தது அவனுக்கு.

''ஒண்டுக்கும் யோசிக்காதையுங்கோ காஞ்சனா. ராகுலன் என்னுடைய சினேகிதன் தான். நான் போய் அவனைக் கூட்டிவாறன். நீங்கள் முதல்ல சாப்பிடுங்கோ... இல்லாட்டில் இந்தச் சோடாவை என்றாலும் குடியுங்கோ...'' அவனது வார்த்தைகள் அவளை மாத்திரமல்ல மாமியையும் உருகவைத்தன.

''தைரியமாக இருக்கோ – நான் கதைச்சுக் கூட்டிக் கொண்டு வாறன்...'' என்று புறப்பட்டவனை.

''வேண்டாம்'' என்று உறுதியாய் ஒலித்த அவளது குரல் தடுத்து நிறுத்தியது.

''வேண்டாம் தம்பி...'' இப்போது மாமி அவனை நோக்கினாள்...

''அவை விரும்பாத போது அந்த இடத்திலை மறுபடியும் கெஞ்சத் தேவையில்லை. காஞ்சனா இப்படியே இருந்துவிட்டுப் போகட்டும்...''

மாமியின் வார்த்தையில் அவன் அதிர்ந்து நோக்கினான். ''இல்லை மாமி. காஞ்சனா வாழவேண்டியவ. மனமறிய அவள் ஒரு பிழையும் விடவில்லை.'' என்று உறுதியாக கூறிய அவன் காஞ்சனாவின் அருகில் நெருங்கி, வடிந்தோடும் அவளது கண்ணீரைத் தன் கை விரல்களால் துடைத்தான்.

காஞ்சனாவின் மனதில் சிவதாசன் கோபுரம் போல உயர்ந்து நின்றான்.

சுவிஸில் உங்கள் அபிமான
சுடர் ஒளி
விநியோகஸ்தர்
சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (கணா)
MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND
Telephone :- 0041 - 043.3179137 - 9




சொல்லேருழவன் ம.க.அ.அந்தனிசில்

# சிகிரிய குகைக்குள்...

சிகிரிய குகையின் பழைய வரலாறு இன்று புதிராக மாறியுள்ளது. ஆனாலும், அக்குகை பெருவாரியான வெளிநாட்டு உல்லாசப் பயணிகளின் கவன ஈர்ப்புக்கும் இலாப ஈடேற்றங்களுக்கும் பயன்பட்டு வருவதில் குறைச்சல் இல்லை.

இக்குகையின் மாறுபாடான கதைகள் பற்றியும், மாறுபட்ட காட்சிகள் பற்றியும், முரண்பாடான செய்திகள் பற்றியும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் யாவரும் உண்மையை அறியார். அதுபோன்று உள்நாட்டு வாசிகள் பெரும்பாலானோரும் முழுவதும் அறிந்திலர்.

இக்குகையில் முன்னொரு காலத்தில் மன்னன் ஒருவன் வாழ்ந்திருந்ததும், அதற்கான பின்னணியும், குகைச்சுவர்களில் வரையப்பெற்ற அழகிய பெண்கள் ஓவியங்களும், பிற்காலத்தில் புனையப்பெற்ற ஏராளமான சிங்களக் கவிதைகளும், சுமார் இருபது தமிழ் கவிதைகளும், கி.பி. ஏழாம், எட்டாம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் இலங்கையில் புழங்கப்பட்டு வந்ததாகச் சொல்லப்படும் பெயர் குறிப்பிடப்படாத எழுத்து வடிவங்களும், தமிழ் வட்டெழுத்து வடிவங்களும், பழைய சிங்கள எழுத்து வடிவமென்று சொல்லப்படும் எழுத்துக்களும் பொதுவாக பலராலும் அறியப்பட்டவைதான்.

சிங்களம் தவிர்ந்த பிறஎழுத்து வடிவங்கள் குறிப்பாக இலங்கையிலும், இந்தியாவிலும் புழங்கப்பட்ட பெயர் குறிப்பிடப்படாத எழுத்து வடிவங்கள் தொடர்பாக தமிழகத்திலிருந்து புராதன எழுத்தியல் வல்லுநர்களான ஐராவதம் மகாதேவா, டாக்டர்சாமிநாதன்போன்றோரின் உதவியைப் பெற்று அவ்வெழுத்து வடிவங்களை இனம் கண்டிருக்க முடியுமே. இதனை யாரும் விரும்பாமல் மௌனம் காப்பது ஏன்?

பெரும்பாலும் அங்கு பொறிக்கப் பெற்ற கவிதைகள் குகைச்சுவர்களில் வரையப்பெற்றுள்ள அழகிய பெண்கள் தொடர்பானதே. அவ்வோவியங்களை குகைக்குள் வரையச் செய்த அரசன் பெரும் கலா ரசிகனாக இருந்தானா?

கி.பி. ஐந்தாம் நூற்றாண்டில் அநுராதபுரியில் தாதுசேனன் எனும் மன்னன் (கி.பி. 460 – 478) அரசியற்றி வந்தான். அவனுக்கு காசியப்பன், மொகல்லான எனும் இரு குமாரர்கள் இருந்தனர். காலவிரைவில் தந்தையின் பொக்கிஷம் முழுவதையும் தனக்குத் தரவேண்டுமென்று வற்புறுத்தத் தொடங்கினான் காசியப்பன். தந்தை இதனை முற்றாக மறுத்துவிட்டதால் கோபங்கொண்ட காசியப்பன் தந்தையை உயிருடன் சுவருள் வைத்துக்கட்டி கொலை செய்தான். அவ்வாறு தனது தந்தையை ஈவிரக்கமின்றி கொலை செய்து 18 ஆண்டுகள் அரசியற்றிய காசியப்பனின் (கி.பி.478–496) மனோநிலை எவ்வாறு இருந்திருக்கும்?

தனது தந்தை தன் தமையனால் பச்சையாக கொலை செய்யப்பட்டதை அறிந்த மொகல்லான தனது உயிருக்கும் ஆபத்து நேரிடுமோ என அஞ்சியும், படைதிரட்டி வந்து தமையனுடன் போர் தொடுக்கவும் கருதி தென்னிந்தியாவுக்கு ஓடினான். இதனால் குழப்பமுற்ற காசியப்பன் தன் பாதுகாப்பு கருதியே தனது இருப்பிடத்தை அநுராதபுரியிலிருந்து ஒரு மலைக்குன்றுக்கு (குகை) மாற்றிக்கொண்டான். அதுதான் சிகிரிய குகை.

பதினெட்டு ஆண்டுகள் கழித்து தென்னிந்தியாவிலிருந்து படைதிரட்டி வந்த மொகல்லான தன் தமையனான காசியப்பனுடன் போர் தொடுத்து அவனைக் கொன்று ஆட்சி பீடமேறினான். (கி.பி.496–513) இதுவே காசியப்பன் தொடர்பாக பாளி நூலான மகா வம்சத்தில் சொல்லப்பட்டுள்ள வரலாற்று நிகழ்வாகும். ஆனால், பிற்காலத்தில் ஆனந்த தேரர் என்பவரால் கண்டெடுக்கப்பட்ட சமஸ்கிருத ஆவணத்தில் காசியப்பன் தொடர்பாக வேறுவிதமான கதை சொல்லப்பட்டிருப்பதுடன் அதனையே நம்பும்படியும் கல்வி திணைக்களம் பிரசாரப்படுத்தியிருந்தது. அந்த சமஸ்கிருத ஆவணம் 'தாதுசேனனும் அவனது இரு புதல்வர்களும்' (DHATUSENA AND HIS TWO SONS) எனும் மகுடத்தில் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், காசியப்பன் சிகிரிய குகையில் வாழ்ந்தமையில் எவ்வித மாற்றமும் இருக்கவில்லை. அப்படியானால் குகையில் உள்ள அழகிய ஓவியங்கள் அவனால் வரையச் செய்யப் பெற்றனவா? அல்லது அவனுக்கு முன் வேறு யாரேனும் நாக அரசர்கள் அந்த ஓவியங்களை வரைந்தார்களா? அல்லது வரையச் செய்தார்களா?

சிகிரிய குகை தொடர்பாக முன்னாள் தொல்லியல் ஆணையாளர் டாக்டர் செனரத் பரணவிதான 1951 இல் 'சிகிரிய கிறாபிற்றி' (SIGIRIYA GRAFFITI) எனும் ஆராய்ச்சி நூலை எழுதியிருந்தார். அவை இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டன. அவற்றில் குகை ஓவியங்கள், கவிதைகள் தொடர்பாக அறியமுடியும்.

பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் வெள்ளையர்களே இலங்கையின் தொல்லியல் ஆணையாளராகப் பதவி வகித்து வந்தனர். அவர்கள் போனபின் சிங்களவர்கள் தொல்லியல் ஆணையாளர்களாக பதவி வகிக்கத் தொடங்கினர். அவ்வாறானவர்களில் ஒருவரான டாக்டர் செனரத் பரணவிதான ஒரு மோசமான பேரினவாதி என்பது மறைக்கக் கூடிய விடயமன்று. பல இடங்களிலும் அநுராதபுரியிலும் அழிக்கப்பட்ட தமிழ் கல்வெட்டுக்களுக்கு யார் காரணம்? இவை தமிழரின் வரலாற்றுச் சுவடுகளை முற்றிலுமாக மறைத்துவிடுவதற்கு ஈடானதல்லவா?

இங்கு நாம் எழுப்பும் முக்கிய கேள்வி என்னவெனில், சிகிரிய குகைச்சுவரில் வரையப்பெற்றிருந்த அழகிய பெண்களின் நெற்றியிலிருந்த 'பொட்டு' எங்கே என்பதுதான். அந்த 'பொட்டுகள்' எப்படி காணாமல் போயின? அதற்குரிய அவசிய மென்ன? அல்லாமலும் வெள்ளையர் ஆட்சி காலத்தில் காணாமல் போகாதிருந்த இப்பொருட்கள் அவர்கள் போனபின் மறைந்து கொண்ட மர்மம் என்ன? 'புராதனம்' எங்கே ஓடிப்போயிற்று.


வெள்ளையர் மாற்றலானதை அடுத்து அப்பகுதிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது சிங்களவர் டாக்டர் செனரத் பரணவிதான என்பவர் ஆகும். எப்படியோ மிகப் பொருத்தமான இடத்தில் அவர் நுழைந்து கொண்டார். அவர் மிகப் பழம்பெரும் சிங்கள பேரினவாதி என்பது சொல்லித் தெரிய வேண்டியதல்ல. அவர் எங்கெங்கு பதவியில் இருப்பாரோ அங்கெல்லாம் உச்ச இடத்திலிருந்து உச்சமான வேலைகளை உச்சக்கட்டமாக செய்து முடிப்பது வழக்கம். இலங்கையில் ஆரம்பத்தில் வரலாற்று அம்சங்களுடன் தன்னை தீவிரமாகப் பிணைத்துக்கொண்டு இவ்விடயஞானத்தில் ஈடுபாடு காட்டி வந்த காலத்தில் இலங்கைக் கொடியை தனிச்சிங்களக் கொடியாக மேம்பாடு காட்டி உள்ளூர பெருமை பூரித்தார்.

தமிழரின் வரலாற்றுத் தரவுகளை இருட்டடிப்புச் செய்வதில் பிதாமகனாக திகழ்ந்த அவர், தமிழர்களை அந்நியர் என்று ஓயாது சாற்றி நின்ற அவர், அதற்காக இலங்கைத் தீவின் புராதன மக்களான நாகர்களை மானிடர் அல்லாத மாயப்பிறவிகளாக சித்திரித்த அவர், குகைச் சிலாசாசனங்களில் தமிழ் கவிதைகளும் இடம்பெற்றிருப்பதாக அவர் ஒத்துக்கொண்டிருப்பதற்கு வேறு காரணங்கள் உண்டு. அவற்றை இங்கு சொல்லின் விரியும்.

சிகிரிய குகையில் சுமார் இருபது தமிழ் கவிதைகள் பொழியப்பட்டுள்ளதாக சில ஆண்டுகளுக்கு முன் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

குகை சிலாசாசனங்களில் உள்ள சில கவிதைகள் இலங்கையில் அல்லது இந்தியாவில் ஏழாம் அல்லது எட்டாம் நூற்றாண்டில் புழக்கத்திலிருந்து எழுத்து வடிவங்களில் காணப்படுவதாக பரணவிதான தனது நூலில் கூறியுள்ளார்.

திரு. பரணவிதான பிராமி கல்வெட்டுக்களை வாசிப்பதில் பெரும் புலமை பெற்றவரெனக் கொள்ளமுடியாது. அநுராதபுரி பிராமி கல்வெட்டு (இல: 94) ஒன்றில் தமிழர்களைக் குறிக்கும் 'தமெழ' எனும் சொல்லை அவர் 'தமேத' என்று வாசிப்புச் செய்திருந்தார். அவ்வாறே சோழரை குறிக்கும் 'சூழ' எனும் சொல்லை 'சூத' என்றும் அவர் வாசிப்புச் செய்திருந்தார். இவை ஆ.தேவராஜன் அவர்களால் முன்னர் சுட்டிக்காட்டப்பட்டன. அவரால் சொல்லப்பட்டுள்ள கி.பி. 8ஆம், 9ஆம் நூற்றாண்டுகளுக்குரிய எழுத்துக்கள் தமிழ் வட்டெழுத்தாக இருத்தல் வேண்டும். அந்த வட்டெழுத்து வடிவத்தினை கீழே காண்க.



கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டின் தமிழ் வட்டெழுத்து

இவ் வட்டெழுத்து வடிவமே கி.பி.6,7,8 ஆம் நூற்றாண்டுகளில் தமிழ்நாட்டில் புழக்கத்தில் இருந்ததென்பதை யார்தான் மறைக்க முடியும். இவ் (தமிழ்) வட்டெழுத்திலிருந்து கன்னட, தெலுங்கு, மலையாள, எழுத்து வடிவங்கள் தோற்றம் பெற்றன. அவ்வாறே இவ்வட்டெழுத்தை அடியொட்டியே சிங்கள எழுத்து வடிவம் தோற்றம் பெற்றிருத்தல் வேண்டும்.

அதேவேளை, சிகிரிய குகைக்குள் காணப்படும் சில சிங்கள எழுத்து வடிவங்களை அது பழைய சிங்கள எழுத்து என்றும், அதனால் அதை வாசிப்பு செய்ய முடியவில்லை என்றும் கூறுவது அவை தமிழ் வட்டெழுத்தாக இருப்பதே காரணம் எனலாம்.

அநுராதபுரியில் மிகப் பழங்கால கல்வெட்டுக்கள் முன்னர் அழிக்கப்பட்டுள்ளன. இவை தமிழரின் புராதன வரலாற்றை திரையிட்டு மறைப்பதற்கான கைங்கரியம்தான். பரணவிதான பழந்தமிழ் எழுத்து வடிவங்களை வெளிப்படுத்த விரும்பாததும் அதன் தொடர்ச்சியே.

அதேசமயம் சிகிரிய குகையில் கி.பி.11,ஆம் 12ஆம் நூற்றாண்டுகளுக்குரிய எழுத்து வடிவங்கள் காணக்கிடப்பதாக பரணவிதான தனது நூலில் கூறுகிறார். அது உண்மையே. ஆனால், அவர் அதை மட்டும் கூறுவது சோழர் படையெடுப்பின் பின்னர் தமிழர் இலங்கைத் தீவில் குடியேறினார்கள் என்ற எண்ணக் கருத்தினை தோற்றுவிப்பதற்காகவே.

திரு.பரணவிதான தனது நூலில் சிகிரியா குகையில் ஏழாம் அல்லது எட்டாம் நூற்றாண்டு காலத்தில் இலங்கையில் அல்லது இந்தியாவில் வழக்கிலிருந்த எழுத்து வடிவங்களும் காணப்படுவதாகக் கூறியுள்ளார். அந்த எழுத்து வடிவங்கள் எவை?

தமிழரின் வரலாற்றுத் தரவுகளை இருட்டடிப்புச் செய்வதில் பிதாமகனாக திகழ்ந்த பரணவிதான சிகிரிய குகையிலுள்ள பழங்கால எழுத்து வடிவங்கள் பற்றிய சரியான தகவலைத் தருவதற்கு விரும்பியிருக்கமாட்டார் என்பது சர்வ நிச்சயம். அவர் தமிழ் நாட்டை குறிப்பிட விரும்பாமலேயே பொதுவாக 'இந்தியா' எனக்குறிப்பிட்டார் போலும். முற்காலத்தில் தமிழகத்திலும், இலங்கையிலும் தமிழ் வட்டெழுத்து புழக்கத்திலிருந்திருக்கிறது. அதுவே உண்மை. அந்த உண்மைதான் மறைக்கப்பட்டிருக்கிறது.

சிகிரிய குகைக்குள் உள்ள பழைய எழுத்து வடிவங்கள் தமிழக சாசனவியல் அறிஞர்களை வரவழைத்து வாசிப்புச் செய்யப்பட்டால் உண்மை வெளிவரும். இதனை யார் சொய்வார்கள்? *(முற்றும்)*

**காலஞ்சென்ற சொல்லேருழவன் ம.க.அ.அந்தனிசில் அவர்களின் பதினாறு இலக்கியக் கட்டுரைகள் இதுவரை 'சுடர் ஒளி' வார இதழில் பிரசுரமாகி உள்ளன.**

**அவரின் கட்டுரைத் தொடரில் 17 ஆவதும் இறுதியுமானதுதான் 'சிகிரிய குகைக்குள்....'**

**இதனை பூர்த்தி செய்ய முன்னரே அவர் மரணம் அடைந்துவிட்டார். அவர் கூறிய தகவல்களை வைத்து இக் கட்டுரையைப் பூர்த்தி செய்துள்ளார் அவரின் பிள்ளைகளில் ஒருவரான யாழினி.**

**வாராவாரம் வெளிவரும் 'இலக்கியப் பொழில்' பகுதியில் இலக்கிய அறிஞர்கள் மட்டுமல்ல இலக்கிய ஆர்வலர்களும் எழுதலாம். கட்டுரைகள் யாவும் தரம் கண்டு பிரசுரிக்கப்படும்.**




## சிறார்களின் கைவண்ணம்



திஷாரு
தரம் 01,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கல்கிசை.



மோ.தரணிகா
ஒஸ்கா முன்பள்ளி
புதுக்குடியிருப்பு



ரூவ் ஆனந் றொவேக்கா
தரம் 2,
மு.மாங்குளம் ம/வி,



கௌதமன்
தரம் 4,
கிங்ஸ்டன் சர்வதேச கல்லூரி,
கொழும்பு 6.

# இது போதும்...

முன்னொரு காலத்தில் சந்தன் - பந்தன் என்னும் இரண்டு சகோதரர்கள் வாழ்ந்து வந்தனர். ஒரு நாள் அவர்களின் தந்தையார் காலமாகிவிட்டார். அதனால் தந்தையின் சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் அண்ணன் - தம்பி இருவருக்கும் இடையில் பலத்த மோதல் எழுந்தது.

சொத்துக்காக இவர்கள் சண்டையிடுவதைப் பார்த்தவர்கள், ''பக்கத்தூரில் இருக்கும் கிராமத்தலைவரைச் சந்தியுங்கள். அவர் உங்கள் இருவரது பிரச்சினையையும் சிக்கலின்றி தீர்த்துவைப்பார் என்றனர்.

சந்தனும் பந்தனும் ஊர்க்காரர்கள் சொன்ன மாதிரியே பக்கத்து ஊருக்கு கிராம தலைவரைச் சந்திக்கச் சென்றனர்.


வழியில் இரண்டு கூலித்தொழிலாளிகள் அந்த ஊரிலிருந்து திரும்பிக் கொண்டிருந்தனர். அவர்களிடம் கிராமத் தலைவரின் வீட்டிற்கு இருவரும் வழிகேட்டனர். கூலியாட்களும் கிராமத் தலைவரின் வீட்டைக் காட்டினார்கள். அப்போது சந்தன் ''கிராமத்தலைவர் உண்மையிலேயே உத்தமனா?'' என்று கூலியாள் ஒருவனிடம் கேட்டான்.

''அது உண்மைதான். ஆனால் அவருக்குக் காதுதான் கொஞ்சம் மந்தம்'' என்றார் கூலியாள்.

சகோதரர்கள் இருவரும் கிராமத் தலைவரின் வீட்டை நோக்கி வந்தார்கள். அப்போது அந்த வீட்டிலிருந்து ஒரு பெண் வெளியே வந்தார். அவரிடம் பந்தன் கிராமத்லைவரின் வீடு இதுதானா? என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பெண் ''ஆமாம். அவர் இங்கே தான் இருக்கிறார். ஆனால் அவரிடம் நீங்கள் எதையும் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் அவருக்குப் பார்வை கிடையாது'' என்றாள்.

சகோதரர்கள் இருவரும் நுழைவாயில் கதவைத்



தள்ளிவிட்டு உள்ளே நுழைந்தபோது வயதான ஒரு பெண்மணி வந்தார். அவரிடம் சகோதரர்கள் இருவரும் கிராமத் தலைவரைப் பார்க்க வேண்டும்'' என்றனர்.

அதற்கு அந்தப் பெண்மணி ''யார் அவரா? அவர் இறந்துபோய் வெகு நாட்களாகிறதே?'' என்று சொல்லிவிட்டு அங்கிருந்து போய்விட்டார். சகோதரர்களுக்கு கடும் அதிர்ச்சி, இருந்தாலும் துணிச்சலுடன் அந்த வீட்டிற்குள் சென்றனர். அங்கே ஒரு பெரியவர் இருந்தார். ''நீங்கள் இறந்து விட்டதாக உங்கள் மனைவி சொன்னாரே?''

அதைக் கேட்டதும் பெரியவர் உரக்கச் சிரித்தார். பிறகு சொன்னார் ''அவளுக்கு எப்போதும் நான் உதவுவதில்லை என்று புகார் செய்வாள். அதனால் நான் இருந்தும் ஒன்றுதான் இல்லாமல் போவதும் ஒன்றுதான் என்ற எண்ணத்தில் அவள் அப்படிச் சொல்லியிருக்கலாம்'' என்று சகோதரர்களிடம் விளக்கினார் பெரியவர்.

''சரி ஒரு இளம் பெண் உங்களுக்குப் பார்வை கிடையாது என்று சொல்லிவிட்டுச் சென்றாரே?''

''ஓ அவளா? அவள் என் மகள்தான். அவள் திருமணம் செய்து வைக்கச் சொல்லிக் கேட்கிறாள். நானும் மாப்பிள்ளை தேடிப் பார்க்கிறேன். ஆனால் இதுவரை யாரும்கிடைக்கவில்லை. அவளுக்குத் திருமண வயதாகியும் நான்அவளைக் கண்டு கொள்ளவில்லை என்று அவள் நினைப்பதால் என்னைப் பார்வையற்றவன் என்று கூறுகிறாள்.''

''சரி இவர்களை விடுங்கள் உங்கள் ஊர் கூலியாட்கள் கூட உங்களுக்குக் காது கேட்காது என்று கூறினார்களே?''

''அப்படியா சொன்னார்கள்? அவர்கள் என்னிடம் வேலை பார்ப்பவர்கள் தான். அவர்கள் எப்பொழுதும் என்னிடம் ஏதாவது குற்றம் சொல்லிக் கொண்டே இருப்பார்கள். நான் அவைகளைக் காதில் போட்டுக் கொள்வதில்லை. அதனால் அவர்கள்அப்படிச் சொல்லியிருப்பார்கள். சரி... சரி... அதை விடுங்கள் உங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?''

இவரிடம் ஆலோசனை கேட்டால் நிலைமை என்னவாகுமோ' என்று பயந்து இருவரும், ''இல்லை யில்லை... நாங்கள் இருவரும் வழிப்போக்கர்கள். இந்த வழியாக வந்தபோது உங்களைப் பற்றிக் கேள்விப்பட்டோம். மரியாதை நிமித்தமாக உங்களைச் சந்திக்க வந்தோம் வேறொன்றும் இல்லை என்று கூறிவிட்டு அங்கிருந்து தப்பித்தோம் பிழைத்தோம் என்று கிளம்பினார்கள்.

# விஷப் பாம்புகள்



2700 விதமான பாம்புகள் உலகில் உண்டு. இவற்றில் 400க்கு அதிகமான இன பாம்புகளுக்கு விஷத்தன்மை உண்டு.


பாம்புகள் இரையை உண்டபின் ஜீரணிப்பதற்காகவே அவற்றுக்கு விஷப்பை அமைந்துள்ளது. பாதுகாப்புக்காக விஷத்தை கக்குவது இரண்டாவது பட்சம்தான்.

பாம்புகளுக்கு பறவைகளின் முட்டைகளை உடைத்து குடிப்பதில் பிரியம். படத்தில் நீங்கள் பார்க்கும் பச்சைநிற மாம்பா இனப் பாம்பு பறவைகளின் கூடுகளில் புகுந்து முட்டைகளைக் குடித்துவிட்டு இன்னொரு கூட்டில் முட்டை ஏதும் கிடைக்காதா என்று ஆவலோடு தேடுகிறது.

பெரும்பாலும் பாம்புகள் – மனிதர்களைக் கண்டால் பயந்து ஓடி புதர்களுக்குள் மறைந்து விடுவதுண்டு. ஆனால் ராஜநாகம் மட்டும் பயப்படவே செய்யாது.

பாம்புகள் தமது உடல் சுற்றளவை விட மிகப்பெரிய பிராணிகளையும் விழுங்கி விடும். இது எப்படி முடியும்? மற்றைய பிராணிகளின் தாடை எலும்புகள் மூட்டுக்களால் அமைந்துள்ளன. ஆனால், பாம்பின் தாடை எலும்புகளில் அம்மாதிரி மூட்டு கிடையாது. மூட்டுக்குப் பதிலாக மேல் தாடையும் கீழ்த்தாடையும் ரப்பர் போன்ற தன்மையுடைய தசையால் இணைக்கப்பட்டிருக்கின்றன. இதனால் விரிந்து கொடுக்கும்தன்மை ஏற்படுகிறது. அதனால்தான் பாம்பு மிகப்பெரிய பிராணிகளையும் விழுங்கி விடுகிறது.

## வண்ணம் தீட்டி மகிழுங்கள்



# கவிதைப் புனல்

## தந்து விடு

அழகிய நங்கையே!
உன் பஞ்சுப்
பாதங்களை நான்
கொஞ்சட்டுமா?

அழகிய உன்
பட்டுப் பாதங்களை
என் கைகளால்
பற்றி அதில் என்
இதழ்களைப்
பதிக்கட்டுமா!

உன் நடையழகு
இடையழகு சிரிப்பழகு
இன்னும் உன்னிடம்
எத்தனையோ.

கண்ணே
என்னை நீ
கொன்று விடு
அல்லது என்னிடம்
உன்னைத்
தந்துவிடு

என்.கலாரசிகன்
மல்லாவி

## பிரியமானவளே!

என் உயிர்
நீ
அருகில்
இருந்த போது
தெரியாத
உன் நட்பு
நீ பிரிந்து
நீண்ட தூரம்
சென்றதும்
தெரியுது
முதலில்
நட்பு வைத்தது
நீயா....?
நானாயென....?

மு.ராஜேஷ்
புளியங்குளம்.

## கண்ணீர் சிந்தும் கவிகளோடு

பூமித்தாய் கோபத்தில்
கடலில் பெற்றெடுத்த
குழந்தைக்கு
கடற்கோள்
என்ற பெயர் வைத்து
மக்கள் வாழும்
கரையோர பிரதேசத்தில்
ஓடி விளையாட விட்டதால்
பல லட்சம் பேர்கள்
துடி துடித்து
உயிரை விட்டார்கள்
சொந்தங்களையும்
சொத்துக்களையும் இழந்து
உயிர் தப்பியவர்கள்
அகதிகளாக
அகதி முகாம்களுக்குள்
வாழ்கின்றார்கள்
அழுத முகங்களோடு

ந.துரைராசசிங்கம்
கோட்டைக்கல்லாறு 1.

## விடியல்

காலமும்
கடந்து விட்டது
கார் இருளும் எம்மை
மூடிக் கொண்டது
கடிதம் வாசிக்க
கண்மணிகளும்
கெட்டு விட்டது
காடையரின் சிறையில்
வாழ்வை கழிக்கும்
வாலிபர் நாம்?
வாழ்வையே தொலைத்த
ஏக்கம் எம்மை
வாட்டுகிறது
எதிர்காலத்தை நோக்கி
கனாக் காணும்
எமக்கு
விடிவு எப்போது?

பி.றஞ்சன்
களுத்துறை சிறைச்சாலை.

## தாயே என் சேயாய் நீ வரவே....

என் தாயே நீ இறைவன் படைத்த ஒப்பற்ற
காவியம்! அவன் கை வண்ணத்தில்
மலர்ந்த இணையில்லா ஓவியம்

உன்னை வாழ்த்த வார்த்தைகள்
ஏதம்மா மொழியின் விழிதனில்
ஊண் உறக்கம் நீ மறந்து
உற்ற துணையாய் - இருந்து
அரவணைத்து அமுதூட்டி சீர்கல்வி
பெறச் செய்தாய்

தாயே பரமனிடம் தவம் இருந்து
வரம் ஒன்று
கேட்பேன் மறு வாழ்வில் - என்
சேயாய் நீ வரவே

பி.கில்பட்வாஸ்
பேசாலை.

## நம் காதல்

மனசின் அறைகளில் நீக்கமற
உறைந்திருப்பவனே!
தென்றல் காற்றின் அழுக்கத்திற்கு அடங்
காமல் *
உடைந்துவிடும் பலூன்போல
நம் சொப்பனமும் உடையுதடா
பிரிந்து விடுவோம் என்று தெரிந்தும்
பிரியமுடன் நேசித்ததால்
அநாதையாய் அமைகின்றது அதோ....
நம் காதல்

என்.நிலவன்
உடையார்கட்டு

## வேசம் வேண்டாம்....

வெறுக்கிறேன் உலகை - ஏன்
வாழ்வு கசந்ததனாலா - இல்லை
பார்க்கிறேன் மக்களை - ஏன்
பாரில் அவர்கள் இருப்பதனாலா - இல்லை
நீக்குகின்றேன் சொந்தங்களை - ஏன்
சொந்தங்கள் வேண்டாமென்பதனாலா -
இல்லை
மாளவிரும்புகிறேன் - ஏன்
இவ்வுலகு வேண்டாம் என்பதனாலா -
இல்லை
பாசம் நீதீ செத்துவிட்டதென்பதால்....?

பா.யசோதா
கிளிநொச்சி

## மனிதம்

[illegible] மனிதன்;
குரங்கிலிருந்து வந்தவனா?
ஒரு பிடி மண்ணால்
இறைவனால் படைக்கப்பட்ட
ஆதாம் ஏவாளின்
சந்ததியில் வந்தவனா?
அன்று மிருக சாம்ராஜ்யம் [illegible]
மனிதனை ஏமாற்றியது;
இன்று மனிதன் மிருகமாக மாறி
சிறையும் தன்னையும்
ஏமாற்றிக் கொண்டிருக்கின்றான்.
மனிதனுக்குள் 'மனிதம்'
காணப்படும் வரை
மனிதர்களுக்கு உயர்வு இல்லை

ஜோ.கிறிஸ்டி
களுத்துறை சிறையிலிருந்து

## மறக்க முடியாது

மறக்க முடியாத
இழப்பு மரணம்
மனதை வாட்டுவது
பிரிவு
இழக்கக் கூடாதது
மானம்

இனிமை தருவது
தமிழ்
பழகக் கூடாதது
மது, சூது பழக்கம்
மாறக் கூடாதது
மதம்மாறும் மனம்!

அ.அரசரெத்தினம், சேனையூர்—06

## போதும்

வைராக்கியமான என்
மனதை உன்
வசமிழக்க வைத்தது
போதும்

காதல் எனும் கல்வியிலே
என் மனதை நீ
காயப்படுத்தியது
போதும்

கனவெனும் பாதையிலே
உன் கற்பனையில்
வாழ வைத்தது
போதும்

கையோடு கைசேர்த்து
உன் இச்சைகளை
என் மூலம் தீர்த்தது
போதும்

ஆயுள்வரை நிஜங்கள்
வேண்டாம் என்னை
பந்தாடும் உன் நினைவுகளே
போதும்

ச.சிந்துஜா
யாழ்.பல்கலைக்கழகம்.

## புன் சிரிப்பு

பாவமடி அந்த நிலவு
பௌர்ணமி இரவில் கூட
அமாவாசையாய் தெரிகிறது
உன் புன்சிரிப்பால்!

ஆர்.கே.எஸ். வத்தளை

## அன்புக்கு நீயடா....

உன்னை என்னால்...
யாருக்கும் விட்டுக்
கொடுக்க முடியவில்லை!
நீ - இல்லாமல்
என்னால் நிஜமாக
வாழ முடியவில்லை
நிஜமாக வாழ்வதைவிட
உன் நினைவுடன்
நான் - இருப்பதால்,
நிழலாக வாழ்வது
ரொம்ப பிடிக்கின்றது
உயிரை மட்டும் தவறாய்
எடுத்து விட்டு
பிரிவை மட்டும்
இரக்கமில்லாமல் -
எனக்கு கொடுத்துவிட்டாய்...
இவ் உலகத்தில்....
ஒரு மூலையில் இருக்கும்
என் மூச்சுக்காற்றை
சுவாசிக்க - நான்
தினம் தினம்
காற்றுடன் மண்டியிடுகிறேன்.
உன் உயிரே.....!
உன்னை நிஜமாக
பார்க்காமல்.....
பல ஆண்டுகள் உன்னால்
பைத்தியமாய் வாழ்ந்துவிட்டேன்.
இனியும்...
உனக்காக நான்
மரணித்தாலும்....
நம் உயிரோடு கலந்த
தாய்மையான அன்பு...
மறு ஜென்மத்தில்
தொடரும்....!

நி.தனுஷியா சாவகச்சேரி.

## 'இந்த ஜென்மம்'

சஹாராவில் அகப்பட்ட,
வழிப்போக்கனின் தாகம் போல்,
உயிரை உருக்குகின்றது
உனது நினைவுகள்
மனச்சுமையுடன் மரணம்வரை
களமாடி, அனலாகும் விறகிற்கு
இரையாகவா - எமை
அழைத்தது இந்த ஜென்மம்!

க.பவான் உடையார்கட்டு.

## தாய்

வார்த்தைகளால்
வடிக்க முடியாத
எதிர்பார்ப்பற்ற அன்பின்
அட்சய பாத்திரம்

## நட்பு

வேற்றுப் பிரிவின்றி
எல்லார் மனதையும்
தொட்டுச் செல்லும்
புனிதமான உறவுத் தென்றல்

## காதல்-

இரு ஜீவன்கள்
சேர்ந்து பயணிக்கும்
ஓர் புதிய புனித பயணம்

## பேனை

வார்த்தைகளுக்கு
சக்தி அற்றுப்போகும் வேளையில்
வரிகளுக்கு உயிர் கொடுத்து
உதவும் உறவாடாத நண்பன்

## பள்ளிக் காலம்

வாழ்க்கை டயறியில்
அழியாத இடம்பிடித்த
ஓர் இனிமையான
'(Picnic)' பிக்னிக் பயணம்

வெ.சிந்து ஆனைவிழுந்தான்

## முற்றுப்புள்ளி

உணர்வுகளை உதாசீனம் செய்யும்
இந்த உலகத்தோடு
ஒன்றித்துவாழ ஏன் என்னால்
இன்னமும் முடியவில்லை...?

கவலைகளை விதைத்து
'கண்ணீரை அறுவடை செய்வதைவிட
இந்தக் காரிகையின்
கடமைதான் இன்னும் என்ன?

வார்த்தைகளெல்லாம்
வாயாடிப்பட்டம் தருமென்றால்
என் உதடுகளில் ஏன் இன்னும்
உதிர்க்கின்றன சொற்கள்

ஏன் மௌனங்களில் பிறர்
மார்தட்டிக் கொள்வரென்றால்
வாழுங்காலம் வரை நான்
மௌனியாகிப் போகிறேன்.

என் தியாகங்கள் சிலரை
ஏணிகளில் ஏற்றுமென்றால்
என் கற்பனைகளை நான்
கனவுகளாக்கிக் கொள்கிறேன்.

சாபங்களின் சரசமும்
சோகங்களின் சுருதியும் தான்
என் வாழ்வின் வழிகாட்டிகளென்றால்
வரவேற்கிறேன்
வாழ்வையல்ல
வசந்தமாய் ஒரு சாவை

கு.மகாலக்ஷ்மி, மிருசுவில்.

# சிரிக்க சிந்திக்க சிப்ஸ்

*நீண்ட நேரம் முத்தம் கொடுத்து தற்போதுள்ள உலக சாதனையை முறியடிக்க லண்டனில் இரண்டு ஜோடிகள் தயாராகி வருகின்றன.




அதிக நேரம் தொடர்ந்து முத்தம் கொடுப்பதற்கான சாதனை 2001ஆம் ஆண்டு அமெரிக்காவில் ஏற்படுத்தப்பட்டது. 30 மணித்தியாலம் 59 நிமிடங்கள் 27 விநாடிகள் முத்தம் கொடுத்து இந்தச் சாதனையை நிலைநாட்டியது ஒரு ஜோடி.

குறிப்பிட்ட சாதனையை முறியடிப்பதில் ஈடுபடவுள்ள ஜோடிகளுக்கு இருக்கவோ நித்திரைகொள்ளவோ அனுமதி வழங்கப்படமாட்டாது. அவர்கள் 'ஸ்ட்ரோ' வினூடாக நீராகரம் அருந்த முடியும். மலசலகூடத்துக்குப் போகும் போதும் முத்தமிட்ட படியே இந்த ஜோடிகள் செல்ல வேண்டும்.

மத்திய லண்டனில் உள்ள பிளாசா வர்த்தக நிலையத்தில் இந்தப் போட்டியை நடத்துவதற்குத்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

*பிரிட்டனைச் சேர்ந்த ''ஸ்டீவ் போசட்'' என்பவர் 80 மணிநேரத்தில் உலகை விமானத்தில் தொடர்ந்து சுற்றி வந்து சாதனை புரிந்திருக்கிறார். அமெரிக்காவின் ''சாலினா கனேஸ் விமான நிலையத்தில் ஆரம்பித்து மொன்ட்ரியல், லண்டன், பாரீஸ், ரோம், கெய்ரோ, ப்ஹ்ரைன், கராச்சி, கல்கத்தா, ஷங்காய், டோக்கியோ என அனைத்து நாடுகளையும் தொட்டு 36, 787 கி.மீ. சுற்றி மீண்டும் அமெரிக்காவுக்கே திரும்பியிருக்கிறார். படுத்துக்கொண்டே ஓட்டும் வசதி உள்ள இந்த விமானத்தின் நீளம் 14 மீட்டர். நிறை 10 தொன்.





* சென்ற வருடம் வரை உலக கால்பந்தாட்ட வீரர்களில் அதிக ஊதியம் பெற்றவர் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சீடன் என்ற வீரரே. இந்த வருடம் அந்த இடத்தைப் பிடித்திருப்பவர் பிரிட்டனைச் சேர்ந்த டேவிட் பேக்ஹாம். இவரின் ஒரு வருட ஊதியம் இருபத்தைந்து மில்லியன் யூரோக்கள்.

* கோழி முட்டையை விட எட்டு மடங்கு பெரிதாக இருக்கும் ''கிவி'' என்ற பறவையின் முட்டை. கிவி பறவையின் முட்டையைவிட மூன்று மடங்கு பெரிதாக இருக்கும் தீக்கோழியின் முட்டை.

திருமணத்துக்கு முன்பு
கடல்போல அமைதியாக
ஆர்ப்பரித்தவள்
மணமுடித்த பின்னே
என்குடும்பத்தில்
சுனாமி தாக்குதல் நடத்தி
பேரழிவை உண்டு
பண்ணிவிட்டாளே.

''குடிகாரனுக்கு
டெலிபோன்
மணி என்றால்
நல்லாய்
பிடிக்கும்.''
''ஏன்..?''
''அதுதான்
''டிரிங்க்..
டிரிங்க்'' என்று
அடிக்குமே''



# பெண்ணழகை பேரழகாக்கும் மருதாணி



மருதாணியால் பெண்கள் தங்களை, அழகுபடுத்திக் கொள்வது இந்தியாவில் மட்டுமல்ல, மேற்கத்திய நாடுகளில் கூட மிகப் பிரபலம்.

வட இந்தியப் பகுதிகளில் ராஜஸ்தானி மற்றும் குஜராத்தி மருதாணி டிசைன்களுக்கு ஏக வரவேற்பு. தற்போது இங்கு அரேபிய மருதாணி டிசைன்களும் பிரபலமாகி வருகின்றன. மருதாணி காவி நிறத்தில் மட்டுமே இருந்த காலம் போய், தற்போது பல்வேறு நிறங்களிலும் வரத் தொடங்கியுள்ளது. தறைந்த விலையில் காண்போரை வியக்க வைக்கும் அளவுக்கு பெண்களின் அழகை பேர்ழகாக்கும் மருதாணி, உடலுக்கும் நல்லது என்கிறார்கள் மருத்துவர்கள்.

முன்பெல்லாம் கைகள், மற்றும் மார்புப் பகுதிகளில் ஆண்கள் தங்களுக்குப் பிடித்தமான பெண்களின் பெயரைப் பச்சை குத்திக்கொள்வார்கள். சில







பெண்களும் இப்படிச் செய்வார்கள். ஆனால், 'இதென்ன பட்டிக்காட்டுத்தனமா...' என்று கிண்டலடிப்பார்கள், படித்தவர்க்கத்தினர்.

இப்போது காலச் சூழல் அப்படியே தலைகீழாக வந்திருக்கிறது. படித்த நாகரிகம்மிக்க இளைஞர்களும், பெண்களும் 'டாடூ' என்ற பெயரில் முகம், மார்பு, தொப்புள், கை புஜங்கள், பின்புறம் என உடம்பின் சகல பாகங்களிலும் விதவிதமான வண்ணங்களில் 'கோலம்' வரைந்து கொள்கிறார்கள். உடைகளுக்கு விடுதலை கொடுத்துவிட்டு, உடலை இப்படி 'டாடூ' மயமாக மாற்றினாலும் மாற்றிவிடுவார்கள்.


HOTEL WESTEERN (PVT) LTD



Danial Banquet Hall (டேனியேல் பென்குவட் மண்டபம்) முற்றும் குளிரூட்டப்பட்ட 400 பேர் அமரக்கூடிய திருமண மண்டபம், தரமான உணவு வகைகளுடன் கூடிய சிறந்த உபசரிப்பு சேவை, இலங்கை சுற்றுலா சபையினால் அங்கீகரிக்கப்பட்ட விருந்தினர்களுக்கான இலவச காப்புறுதி.

சிறந்த பராமரிப்பு சேவையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள், தொலைபேசி, I.D.D., தொலைக்காட்சி, மினிபார், ரெஸ்டூரண்ட், பார், விருந்துபசார மற்றும் மாநாட்டு மண்டபம், விமான நிலையத்துக்கான போக்குவரத்து, வாடகை கார் மற்றும் கடன் அட்டை வசதி போன்ற உன்னத சேவைகள்.

**No. 35, Frankfourt Place, Bambalapitiya, Colombo - 04**

T.P : +94 11 2507161, +94 11 2507162, +94 11 2507163, +94 11 4518485
Fax : +94 11 4518481 E-mail : info@hotelwesteern.com
Website : www. hotelwesteern.com



தலைமுடியைக் காத்திடும்...
பிரச்சினைகளைத் தீர்த்திடும்...

**BIOTINEX-E**

பயோட்டினெக்ஸ்-E




விட்டமின் E+H அடங்கியது

பயோட்டினெக்ஸ்-E இல் விட்டமின் E+H சரியான அளவில் சேர்க்கப்பட்டுள்ளதால் தலைமுடியின் வேர்களுக்கும், சருமத்திற்கும் போஷாக்களித்து, இளவயதில் சருமம் சுருங்குவதையும், கேசம் உதிர்வதையும் முற்றாகத் தடுக்கிறது.

தினமும் இரண்டு கப்சூல்கள் வீதம் மூன்று மாதத்திற்கு தொடர்ந்து பாவித்து சிறந்த பலனை பெறலாம்.

எல்லா முன்னணி பாமசிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

அருமையான கூந்தல்... அழகான மேனி...

Marketed by: ARKEM , Colombo . Tel: 2470290

TNT Grafix



வவுனியாவில்!




கிளைப் பணிமனை

வவுனியா நகர மையத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

58, கண்டிவீதி,
(பஸ்நிலையம் முன்பாக,
கண்டிவீதி - முதலாம் குறுக்குத்தெருச் சந்தியில்)
வவுனியா.

தொலைபேசி: 024 222 4848, 071 422 0008



திருகோணமலையில்...
சுடர் ஒளி உதயன் விளம்பர பணிமனை

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-


விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை, கொழும்பு - 14.
011 4734401 - 3, 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670



EXPOAIR
your friend in the skies...

எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...





யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com



இப் பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் என்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2005, ஆகஸ்ட் 07 ஆம் திகதி வெளியிடப்பட்டது.